# ஆசிரியர் கையேடு
# வேதாகமம், ஒரு மேற்பார்வை

## பொருளடக்கம்


நீங்கள் போதிக்க உதவும் கருவிகள் ........................................................ i

பழைய ஏற்பாடு, ஒரு மேற்பார்வை ............................................................... 1

பழைய ஏற்பாடு புஸ்தகங்களின் அறிமுகம் ............................................................... 2

சிருஷ்டிப்பு ............................................................... 5

தேசம் ............................................................... 10

சுதந்தரித்தல் ............................................................... 17

இராஜாக்கள் ............................................................... 22

சிறையிருப்பு ............................................................... 27

நாடு திரும்புதல் ............................................................... 32

புதிய ஏற்பாடு புஸ்தகங்களின் அறிமுகம் ............................................................... 36

இயேசுவின் ஆரம்ப நாட்கள் ............................................................... 40

இயேசுவின் ஊழியம் ............................................................... 45

இயேசுவின் வெற்றி ............................................................... 50

திருச்சபை ............................................................... 56

சுவிசேஷம் பரவி பெருகுதல் ............................................................... 61

நிகழ்காலம் மற்றும் வருங்காலம் ............................................................... 66

# ஆசிரியர் கையேடு
# வேதாகமம், ஒரு மேற்பார்வை

## நீங்கள் போதிக்க உதவும் கருவிகள்

1. இந்த புஸ்கத்திலிருக்கும் சில பகுதிகள் ஆசிரியரின் சொந்த பிண்ணனியை சார்ந்தவை. நாம் காணும் காணொளிகளை விளக்கும் வண்ணம் இப்பாடங்கள் அமைந்துள்ளன. எனவே ஆசிரியரின் பிண்ணனி சம்பந்தப்பட்ட பகுதிகளை உங்கள் சொந்த அனுபவங்களைக் கொண்டு மாற்ற விரும்பினால் நீங்கள் மாற்றிக் கொள்ளலாம். அவை பாடத்தை மாணவர்கள் புரிந்துக் கொள்ள உதவுவதாக இருக்க வேண்டும்.

2. ***அச்சு*** எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள், நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களை குறிப்பவை. உதாரணமாக, “***ஜெபம்***” என்று அச்சு எழுத்துக்கள் காணப்பட்டால் நீங்கள் ஜெபிக்க வேண்டும். அச்சு எழுத்துக்களில் “***படம்***” என்று கண்டால் நீங்கள் அடுத்த படத்தினை திருப்ப/நகர்த்த வேண்டும்.

3. பச்சை எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள் மற்றும் வாக்கியங்கள் மாணவர் கையேட்டிலும் இடம் பெறுபவை.

4. பச்சை எழுத்துகளின் அடியில் கோடுகள் இருந்தால் அவை மாணவர் கையேட்டிலுள்ள கோடிட்ட இடங்களுக்கான பதில்கள்.

5. பச்சை எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை மாணவர்கள் கோடிட்ட இடங்களை நிரப்ப உதவும் வண்ணம், அதில் உள்ளவாறே கூற கவணமாயிருக்கவும். இவ்வாக்கியங்கள் வேதாகம கதைகளை ஒன்றிணைக்க உதவும் மைய வாக்கியங்கள்.

6. சுவிசேஷம் அறிவிக்க உதவும் கருத்துகள் நீள நிறத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இவை ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனமாக, மாதிரியாக, நிழலாக, மற்றும் நிஜமாக எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளார் என்பதினை உணர்த்தும் இன்றியமையா வாக்கியங்கள். மாணவர்கள் தங்கள் கையேட்டிலுள்ள “சுவிசேஷ பாலம்” என்ற இடத்தில் அவ்வேத வசனங்களை குறித்துக் கொள்ளலாம்.

7. ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது ஒரு சுவிசேஷ பாலம் கொடுக்கப்படும். மாணவர்கள் மேலும் பல வசனங்களை அதில் சேர்த்து கொள்ளும் நோக்கத்துடன் அவை கொடுக்கப்பட்டுள்ளன. சுவிசேஷ பாலத்திற்கான மேலும் பல ஆதாரங்கள் ஆசிரியர் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர் கையேடு
# பழைய ஏற்பாடு, ஒரு மேற்பார்வை

## வாருங்கள் நமது பயணத்தை ஒன்றாக தொடங்கலாம்

வணக்கம், வேதாகம மேற்பார்வை என்ற இந்த வியக்கதக்க பயணத்தில் நீங்கள் இணைந்துள்ளதை நினைத்து நான் பரவசமடைந்துள்ளேன். அடுத்த ஆறு வாரங்களில், தேவனை குறித்த அழகான கதையை கற்று, அவர் நம்மீது வைத்திருக்கும் மேலான அன்பினை ஆழமாக அறிந்துக் கொள்ளப்போகின்றோம்.

நீங்கள் வேதாகமத்தை எவ்வாறு கற்றுக் கொண்டீர்கள் என்று எனக்கு தெரியாது, ஆனால் எனக்கு வேதாகமத்திலுள்ள கதைகள் பல, தனிப்பட்ட கதைகளாக கற்பிக்கப்பட்டன. உதாராணமாக தாவீது மற்றும் கோலியாத் அல்லது யோனா மற்றும் திமிங்கலம் ஆகிய கதைகள் எனக்கு தெரிந்திருந்தன, ஆனால் அவை தனிப்பட்ட கதைகளாகவே தோற்றமளித்தன, அக்கதைகள் வேதத்தின் பிற பகுதிகளுடன் எவ்வாறு இணைந்துள்ளது என்பதினை நான் அறியவில்லை. மேலும் இதின் மூலம் தேவனை எவ்வாறு அறியலாம்? என்ற கேள்வி எனக்குள் எழுந்தது.

வேதாகம கதைகள் சிதறிக்கிடக்கும் துணிகளை போல் தோற்றமளித்தன. அவை அழகாக இருப்பீனும், அதில் நமக்கு என்ன வேண்டுமென கண்டுபிடிப்பது கடினம். ஆனால் சிதறிகிடக்கும் துணிகளை அழகாக மடித்து வைத்தால் அதில் நமக்கு எது தேவை என கண்டுபிடிப்பது சுலபம். அதனைப்போன்றே, வேதாகம கதைகளும் முறையான விதத்தில் அறிவிக்கப்பட்டால் கேட்பவர்கள் வேதத்தை புரிந்துக்கொள்ள உதவும்.

வேதாகமத்தை நான் தெளிவாக அறிந்துக்கொள்ள வேதாகம மேற்பார்வை எனக்கு உதவியது. வேதத்தை காலவரிசைப்படி நான் கவணித்த போது, அதின் முக்கிய போதனைகள், மனிதர்கள், மற்றும் சம்பங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளது என்பதினை தெரிந்துக்கொள்ள முடிந்தது. மேலும் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை எவ்வாறு வேதாகமம் கர்த்தரைக் மையமாக கொண்ட ஒரு தொடர்கதையாக அமைந்துள்ளது என்பதினையும் புரிந்துகொள்ள உதவியது.

வேதாகத்தின் கதையை ஒரே சமயத்தில் முழுமையாக கற்றுக்கொள்வது கடினமாக தோன்றும் என்பது எனக்கு புரிகின்றது.

இருப்பினும் இப்பயணத்தை நாம் ஒன்றாக இணைந்து தொடங்கி, படிப்படியாக முன்னேறவிருக்கின்றோம். அது கடினமாக தோன்றும் வேளையில், நாம் மெதுவாக முன் செல்வோம். இதின் முடிவில் தேவன் நம்மை எவ்வாறு பெலப்படுத்தி தன் வேதாகமத்தை நாம் புரிந்துக்கொள்ள நமக்கு உதவினார் என நாம் கண்டுக்கொள்ளலாம்.

நமது வேதாகம மேற்பார்வையை, முழு வேதாகமத்திற்கான ஒரு அறிமுகத்துடன் நாம் தொடங்க உள்ளோம். பின்னர், பழைய ஏற்பாட்டின் கதையை நாம் மூன்று வாரங்களில் கற்றுக்கொள்வோம், அதனை தொடர்ந்து புதிய ஏற்பாட்டின் கதையை நாம் மூன்று வாரங்கள் சிந்திப்போம். (நாம் கற்றுக்கொள்ள எடுத்துக் கொள்ளும் காலத்தில் சற்று மாற்றங்கள் இருக்கலாம்)

நாம் வேதாகமத்தை கற்க ஒன்றாக சேர்ந்து நேரம் செலவிடும் இந்நாட்களில், நாம் வேதாகமத்தின் தேவனை எவ்வாறு பார்கின்றோம், புரிந்துக்கொண்டுள்ளோம், மற்றும் தனிப்பட்ட விதத்தில் அறிந்துள்ளோம் என்பதில் பரிசுத்த ஆவியானவர் ஒரு மாற்றத்தை உருவாக்குவார் என நான் நம்புகிறேன்.

நாம் ஒன்றாக செலவிடப் போகும் நேரத்திற்காக ஜெபிக்கலாம்.

**ஜெபம்**, நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களை புரிந்துக்கொள்ள பரிசுத்த ஆவியானவர் உதவும்படி ஜெபிக்கவும். "இயேசுவே, உம் வேதத்தை நாங்கள் அறிந்துக் கொள்ளும்படி எங்கள் கண்களையும், இருதயத்தையும் திறந்தருளும். உமது நாமத்தினால் பிதாவானவர் அனுப்பிய தேற்றரவாளனான, தூய ஆவியானவர், யோவான் *14:26*'ல் நீர் வாக்குதத்தம் செய்தபடியே சகல சத்தியங்களுக்குள்ளும் எங்களை வழிநடத்தி, உம்மை குறித்து எங்களுக்கு போதிப்பாராக."

# ஆசிரியர் கையேடு
# பழைய ஏற்பாடு புஸ்தகங்களின் அறிமுகம்

## பழைய ஏற்பாடு புஸ்தகங்களின் அறிமுகத்திற்கான பாடம்

நாம் தொடங்கவிருக்கின்றோம், உங்கள் புஸ்தகங்களை திறந்துக் கொள்ளவும். இப்பகுதி பிற பகுதிகளைக் காட்டிலும் சற்று நீளமானது என்பதால் என்னை சற்று பொருத்து கொள்ளவும், இப்பகுதியில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய பாடங்கள் இருப்பதால் நாம் இதில் நேரம் அதிகமாக செலவழிப்பது அவசியம்.

என் போதனைகள் பின்வரும் நம்பிக்கைகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்:

**படம்:** பரிசுத்த வேதாகமம் தெய்வீக ஏவுதலால் தேவனால் அருளப்பட்டது (அது தேவனால் சுவாசிக்கப்பட்டு, தூய ஆவியானவரால் ஜீவனளிக்கப்பட்டது).

**படம்:** பரிசுத்த வேதாகமம் பிழையற்றது.

**படம்:** பரிசுத்த வேதாகமம் தேவனைப் போன்றே அதிகாரமுடையது. (தேவனைக் குறித்து மற்றும் ஜீவனைக் குறித்தும் நாம் அறிந்துக்கொள்ள வேண்டியதற்கு போதுமானது)

பரிசுத்த வேதாகமத்தை குறித்த சில தகவல்கள்:

**படம்:** பரிசுத்த வேதாகமம் ஏறக்குறைய 1500 வருட காலகட்டத்தில் எழுதப்பட்டது.

**படம்:** அது 40 வேறுபட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்டது.

**படம்:** அது 3 மொழிகளில் எழுதப்பட்டது. பழைய ஏற்பாடு எபிரேய மற்றும் அரமிய(சீரிய) மொழிகளில் எழுதப்பட்டது.

புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.

**படம்:** அது மூன்று கண்டங்களில் எழுதப்பட்டது - ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் ஐரோப்பியா.

அதின் ஆசிரியர்கள் பலதரப்பட்ட தொழிலில் ஈடுபட்டவர்கள், சிலர் மீனவர், சிலர் மேய்ப்பர், சிலர் இராஜாக்கள்.

சில ஆசிரியர்கள் சிறைசாலையின் துன்பத்தின் மத்தியில் எழுதினர், சிலர் இராஜ ஆரண்மனையின் சமாதானமான சூழலில் எழுதினர்.

**படம்:** இத்தகைய முரண்பாடுகளின் மத்தியிலும், வேதாகமம் ஒரு தொடர்கதை, அதற்கு ஒரு தொடக்கம் மற்றும் இடைவேளை மற்றும் முடிவு உண்டு. அது ஒரு தொடர்கதை என்பது தேவனே அதின் ஆசிரியர் என்பதினை அறிவிக்கின்றது. தேவன் மனிதர்களைக் கொண்டு தான் கூற விரும்பியதை மிகநுட்பமாக எழுத்து வடிவில் அருளியுள்ளார்.

**படம்:** பரிசுத்த வேதாகமம் 66 புஸ்தகங்களை உள்ளடக்கியது.

**படம்:** பரிசுத்த வேதாகமம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது: பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு.

இன்று, நாம் பழைய ஏற்பாட்டினை மையப்படுத்தி நமது பாடத்தை தொடங்கவிருக்கின்றோம்.

# ஆசிரியர் கையேடு
# பழைய ஏற்பாடு புஸ்தகங்களின் அறிமுகம்

***படம்:*** *பழைய ஏற்பாடு 39 புஸ்தகங்களை உள்ளடக்கியது.*

*கி.மு என்றால் "கிறிஸ்துவுக்கு முன்." அல்லது கிறிஸ்து பிறப்பதற்கு முன் என்று பொருள் பெறும்.*

***படம்:*** *பழைய ஏற்பாட்டின் 39 புஸ்தகங்கள் - 17 வரலாற்று புஸ்தகங்கள், 5 சங்கீத புஸ்தகங்கள், மற்றும் 17 தீர்க்கதரிசன புஸ்தகங்கள் என பிரிக்கப்பட்டுள்ளன.*

*உங்கள் கரங்களில் வேதாகமம் இருந்தால், அதின் அட்டவனையை திருப்பிக் கொள்ளவும். அதில் புஸ்தகங்களின் பிரிவுகளை குறித்தல் நமது படிப்பிற்கு உதவியாக இருக்கும்.*

*முதல் 17 புஸ்தகங்கள் வரலாற்று புஸ்தகங்கள். எஸ்தர் புஸ்தகத்தின் கீழ் ஒரு கொடு போடவும்.*

*அடுத்த ஐந்து புஸ்தகங்கள் சங்கீத (பாடல்) புஸ்தகங்கள், அவை யோபு முதல் உன்னதப்பாட்டு வரை.*

*மீதமுள்ள 17 புஸ்தகங்கள் தீர்க்கதரிசன் புஸ்தகங்கள்.*

***படம்:*** *பழைய ஏற்பாட்டினை புரிந்துகொள்வதற்கு நாம் அறிந்திருக்க வேண்டிய ஒரு தகவல், பழைய ஏற்பாட்டின் கதைச் சுருக்கம் முழுமையும் முதல் 17 வரலாற்று புஸ்தகங்களில் அமைந்துள்ளது.*

***படம்:*** *மீதமுள்ள சங்கீத மற்றும் தீர்க்கதரிசன புஸ்தகங்களும் முதல் 17 வரலாற்று புஸ்தகங்கள் குறிக்கும் காலகட்டத்தில் தான் எழுதப்பட்டவை. உதாரணமாக யோபுவின் சரித்திரம் ஆதியாகமத்தின் நாட்களில் நடைபெற்ற சம்பவம்.*

*வேதாகம மேற்பார்வையை நாம் எளிதில் கற்றுக்கொள்ளும் வண்ணம், பழைய ஏற்பாட்டின் செய்தி ஆறு தலைப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளன.*

***படம்:*** *ஆறு காலங்கள் (தலைப்புகள்) பின்வருமாறு: சிருஷ்டிப்பு, தேசம், படையெடுப்பு, இராஜாக்கள், சிறைபிடிப்பு, நாடு திரும்புதல்.*

*உங்கள் கையிலுள்ள ஆசிரியர் கையேட்டில் முகவுரைக்கு பின்னர் ஒரு வரைப்படம் காணப்படும். நமது முதல் தலைப்பினை எவ்வாறு கற்க போகின்றோம் என அதில் குறிப்புகள் காணப்படும். அவ்வாறே நாம் ஒவ்வொரு தலைப்பையும் படிக்கவிருக்கின்றோம்.*

*ஒவ்வொரு காலத்தினையும் (தலைப்பினையும்) விளக்கும் வண்ணம் ஒரு மைய வாக்கியம் ஒவ்வொரு காலத்திற்கும் கொடுக்கப்படும்.*

*அதனை தொடர்ந்து அக்காலத்தினை குறிக்கும் நான்கு மைய கருத்துக்கள் கொடுக்கப்படும். அக்கருத்துக்கள் வேதத்தின் கதையை புரிந்துகொள்ள நமக்கு உதவி செய்யும்.*

*ஒவ்வொரு தலைப்பின் கீழ் கொடுக்கப்படும் நான்கு கருத்துக்களை பின்தொடர்தல் அக்காலத்தின் வரலாற்றை எளிதில் அறிய உதவும்.*

*உங்கள் கையேட்டின் பக்கங்களின் மைய பகுதிகளில் சுவிசேஷ பாலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அது என்னவென நான் விளக்க விரும்புகின்றேன்.*

# ஆசிரியர் கையேடு
# பழைய ஏற்பாடு புஸ்தகங்களின் அறிமுகம்

சுவிசேஷம் (நற்செய்தி) என்றால் நல்ல செய்தி என்று அர்த்தம். நம் புஸ்தகத்தில் சுவிசேஷம் என்ற பதம் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம், உயிர்தெழுதல், பரமேறுதலைவும் மற்றும் அதனை விசுவாசிப்போரின் வாழ்வையும், நித்தியத்தையும் அந்நம்பிக்கை எவ்வாறு மாற்றியமைக்கும் என்பதினையும் குறிக்கும்.

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள், சம்பங்கள், மற்றும் மனிதர்கள் இயேசு கிறிஸ்துவின் செயலை முன் குறித்தன. பழைய ஏற்பாடு இயேசுவின் பிறப்பிற்கு சில நூறு வருடங்களுக்கு முன் எழுதப்பட்டாலும், மேசியாவாகிய இயேசுவை குறித்த ஆதாரங்கள் அதிலுள்ள புஸ்தகங்கள் முழுவதிலும் காணப்படுகின்றன. இயேசுவை குறிக்கும் வேத வசனங்கள் அல்லது தீர்க்கதரிசனங்களை நாம் தியானிக்கும் போது, அப்பகுதியை சுவிசேஷப் பாலம் என நாம் சிறப்பாக குறிப்பிடுவோம்.

எனவே வேதாகமத்தின் கதையை மேற்பார்வையாக கற்கும் நமது பயணத்தை வழிநடத்தும் கருவிகள் மைய வாக்கியங்கள், மைய கருத்துக்கள், சுவிசேஷப் பாலங்கள், மற்றும் வரைபடங்கள்.

ஒவ்வொரு காலத்தையும் (தலைப்பையும்) படித்த பின்னர் நாம் 2 அல்லது மூன்று நபர் கொண்ட குழுக்களாக பிரிந்து நாம் கற்று கொண்டவற்றை ஒருவரிடம் ஒருவர் பகிர்ந்து கொள்ளப்போகின்றோம். அவ்வாறு நாம் கற்று கொண்டதை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ளுதல் நாம் கற்றுக்கொண்ட காரியங்களை நினைவில் கொள்ள உதவும்.

பூகோளம்: வேதாகத்தை நாம் பல வழிகளில் மேற்பார்வையாக கற்றுக் கொள்ளலாம், ஆனால் நமது ஆராய்ச்சியில் நாம் வரைபடங்களை அதிகமாக பயன்படுத்தயுள்ளோம்.

*படம்:* வேதாகம பூமியை குறித்த வரைபடத்தை கூர்ந்து கவணித்து அதிலுள்ள நீர்நிலைகளை மனதில் பதியம் செய்து கொள்ளுங்கள்.

நீர்நிலைகளில் மாற்றங்கள் அதிகம் ஏற்படவில்லை என்பதால், அவைகளை மையமாக கொண்டு நான் தொடங்கப் போகின்றேன். மத்திய தரைகடல், கலிலேயாக் கடல் (வடக்கு பகுதியின் பெரிய நீர் நிலைகள்), யோர்தான் நதி, மற்றும் சவக்கடல் (உப்புக் கடல்) ஆகியவை தென் பகுதியின் பெரிய நீர் நிலைகள். கிழக்கு பகுதியை நீங்கள் கவணித்தால், அதில் எப்பிராத்தா மற்றும் இதெக்ருகல் ஆகிய நதிகளை காணலாம்.

*படம்:* நாம் கற்றுக்கொள்ள போகும் நிலபரப்பினை குறிக்கும் நவீன வரைப்படம் இது.

இது சுவாரஸ்சியமான ஒரு படிப்பு - அதனை தொடங்கலாம் வாருங்கள்!

# ஆசிரியர் கையேடு
# சிருஷ்டிப்பு

## சிருஷ்டிப்பை குறித்த பாடம்

வரவேற்பு/ஜெபம்

நாம் கற்றுக்கொள்வதை புரிந்துகொள்ள உதவுமாறு பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையை நாடி ஜெபிக்கலாம். உதாரணமாக: “இயேசுவே, உம் வேதத்தை நாங்கள் அறிந்துக் கொள்ளும்படி எங்கள் கண்களையும், இருதயத்தையும் திறந்தருளும். உமது நாமத்தினால் பிதாவானவர் அனுப்பிய தேற்றரவாளனான, தூய ஆவியானவர், யோவான் 14:26’ல் நீர் வாக்குதத்தம் செய்தபடியே சகல சத்தியங்களுக்குள்ளும் எங்களை வழிநடத்தி, உம்மை குறித்து எங்களுக்கு போதிப்பாராக. ஆமென்”

படம்: சிருஷ்டிப்பு

**மைய வாக்கியம்:** தேவன் தனது சாயலில் ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தார், ஆனால் அவர்கள் தங்கள் சொந்த வழியில் சென்றனர், அதினால் பாவம் உலகில் நுழைந்தது, தேவன் மனிதர்களை மீட்கும் தேடலும் தொடங்கியது.

நான்கு மைய கருத்துக்கள்:

1. சிருஷ்டிப்பு
2. வீழ்ச்சி
3. வெள்ளம்
4. கோபுரம்

**முதலாவது கருத்து - சிருஷ்டிப்பு**

சிருஷ்டிப்புக்கு முன்னரே தேவன் இருந்தார், மேலும் அவரே ஒன்றுமில்லாத நிலையிலிருந்து சகலத்தையும் படைத்தார். ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் மற்றும் அதிலுள்ள யாவையும் சிருஷ்டித்தார்.

முதல் மனிதனான ஆதாமையும், முதல் மனுஷியான ஏவாளையும், தனது சமூகத்தில் வாழ்ந்து தன்னுடன் ஜீவனுள்ள உறவுள்ள கொள்ளும் விதத்தில் சிருஷ்டித்தார். அவர்களை பிற சிருஷ்டிப்புகளிலிருந்து வேறுபட்டவர்களாய் தனது சாயலில் படைத்தார். அவரது சாயல் என்பது:

1.) பகுத்தறிவு (சிந்திக்கும், தீர்மானிக்கும் திறன்)
2.) நல்லொழுக்கம் (நன்மை, தீமை குறித்த அறிவு)
3.) தோழமை (சமுதாய உறவு மற்றும் ஐக்கியம் கொள்ளும் திறன்).

மனிதனின் முதல் வீடு ஏதேன் என்றழைக்கப்பட்ட ஒரு சிறந்த தோட்டம். அவன் அதனை பராமரித்து மற்றும் பூமியை சுதந்தரிக்கும் பொறுப்புடன் படைக்கப்பட்டவன்.

**படம்:** நமது கையிலுள்ள வரைபடத்தின் எப்பகுதியில் ஏதேன் தோட்டம் அமைந்திருந்தது என நமக்கு தெரியாது, அது ஐபிராத்து மற்றும் டைகரஸ் நதிகள் இடையே காணப்படும் செழிப்பான பகுதிகளில் அமைந்திருக்கலாம் என வேதாகம ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

அத்தோட்டத்தில் சகலமும் சம்பூரணமாக இருந்தது. ஆதாமும், ஏவாளும் இணைந்திருந்தனர், அவர்கள் இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், அதனைக் குறித்து வெட்கப்படவில்லை. விலங்குகளும் அத்தோட்டத்தில் எவ்வித பகையின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்தன. அங்கே

# ஆசிரியர் கையேடு
# சிருஷ்டிப்பு

புயலோ அல்லது சூறாவளிகளோ அல்லது பூமியதிர்ச்சிகளோ இல்லை. வியாதியில்லை, வருத்தமில்லை, வறுமையில்லை, அல்லது மரணமில்லை. தேவன் ஆதாம் மற்றும் ஏவாளுடன் சஞ்சரித்தார். அவர்கள் தேவனுடைய வீட்டில் வசித்தனர்.
அத்தோட்டதில் நிறைய மரங்கள் இருந்தன, அவற்றுள் இரண்டின் பெயர்கள் மட்டுமே வேதத்தில் கூறப்பட்டுள்ளன. முதல் மரத்தின் பெயர் ஜீவ விருட்சம், அதின் கனி ஒரு நபருக்கு நித்திய வாழ்வளிக்க கூடும். இரண்டாவது நன்மை, தீமை அறியதக்க மரம், அதின் கனி ஒரு நபருக்கு நன்மை மற்றும் தீமையை குறித்த உணர்வளிக்கும். ஆதாமுக்கும், ஏவாளுக்கும் ஒரு காரியத்தை தவிர மற்ற எல்லாவற்றைக் குறித்தும் சுதந்திரமளிக்கப்பட்டது. நன்மை, தீமை அறியதக்க மரத்தின் கனியை தவிர மற்ற எல்லா கனிகளையும் அவர்கள் புசிக்கலாம்.
மனிதகுலத்திற்கு முழுசுதந்திரம் அளிக்கப்பட்டது, அதாவது தேவனுக்கு கீழ்படிவதற்கோ அல்லது கீழ்படியாமல் இருப்பதற்கோ அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டது.

சுவிசேஷப் தொடர்பு: மைய வார்த்தை - வெளிச்சம்

இவ்வசனங்களை கவணிக்கவும். அவைகளை விளக்கமாக பின்னர் பார்க்கலாம்.
இவ்வசனங்களில் காணப்படும் மைய வார்த்தை வெளிச்சம். தேவன் இருளின் மீது வெளிச்சத்தை வீசுகின்றார் - இதனை மீண்டும் மீண்டும் வேதம் முழுமையிலும் காணலாம்.

1. ஆதியாகமம் *1:3* - இருளாய் காணப்பட்ட உலகிற்கு வெளிச்சம் தர தேவன் ஒளியை சிருஷ்டித்தார்.

2. யோவான் *1:1-14* - இருளான உலகிற்கு சத்தியத்தின் ஒளி வீச இயேசு கிறிஸ்து அனுப்பட்டார்.

3. 2 கொரிந்தியர் *4:6* - தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும்பொருட்டாக, பாவ மனிதரின் உள்ளத்தில் பிரகாசித்தார்.

**இரண்டாவது கருத்து** - *வீழ்ச்சி*

வேதம் சொல்கின்றது, வஞ்சகனான சாத்தான், ஒரு சர்பத்தை போல் வேடமிட்டு, ஏதேன் தோட்டத்தலிருந்த ஏவாலை வஞ்சிக்க புறப்பட்டான். பொய் மற்றும் சூழ்ச்சியினால், தான் கூறிய அனைத்தும் உண்மை என ஏவாளை நம்ப வைத்தான். தேவன் அவர்கள் நலனை விரும்பாதவர் என்று கூறி அவரது உத்தமத்தை ஆதாமும், ஏவாளும் சந்தேகிக்கும்படி செய்தான்.

முழுசுதந்திரத்துடன் சிருஷ்டிக்கப்பட்ட ஏவாள், தேவனது அதிகாரத்தை நிராகரித்து, தடைசெய்யப்பட்ட கனியை புசித்தாள். தன்னோடிருந்த தனது கணவனான, ஆதாமுக்கு அதனை புசிக்க கொடுத்தாள், அவனும் அக்கனியை புசித்தான். அவர்கள் இருவரும் நன்மை மற்றும் தீமையை குறித்த உணர்வு பெற்றனர்.

ஆதாமும், ஏவாளும் தேவனது வழியை நிராகரித்து தங்கள் சொந்த வழிகளை தெரிந்துக்கொண்டனர். அதினால் பாவம் உலகினுள் வந்தது.

அது ஆதாம், ஏவாள் என்ற இரு நபர்களை மட்டும் பாதிக்காமல் வரலாற்றையே தலைகீழாக மாற்றியது. அதினால் ஆதாம், ஏவாள் வழியில் தோன்றிய மனிதகுலம் முழுமையையும் முற்றிலும் சீர்குலைத்தது. (ரோமர் *5:12)*

அந்த நாள் தொடங்கி பயங்கரமான அல்லது பரிதாபமான சம்பங்கள் பூமியில் நடைபெற்று வருகின்றன, ஆதாமும், ஏவாளும் பாவம் செய்யும்படி தீர்மானித்து தேவனுக்கு கீழ்படியாமல் போன தருணத்தில் பாவம் உலகில் நுழைந்தது.

# ஆசிரியர் கையேடு
# சிருஷ்டிப்பு

அவர்கள் நிர்வாணிகள் என்று அறிந்தனர், அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது. அவர்கள் வெட்கமடைந்தனர், எனவே அத்தி இலைகளை எடுத்து நிர்வாணத்தை மூடினர், தங்கள் பாவத்தையும் மற்றும் வெட்கத்தையும் மறைக்க முயன்றனர்.

ஆதாம், "நீர் கொடுத்த ஸ்திரியே எனக்கு அக்கனியை புசிக்க கொடுத்தாள்" என்று கூறினான். ஆதாம் தன் தவறை ஒப்புகொள்ளாமல் தேவன் மீதும், ஏவாள் மீதும் குற்றம் சுமத்தினான். ஏவாளோ தன்னை சர்ப்பம் வஞ்சித்தது என சர்பத்தை காட்டிக்கொடுத்தாள். (ஆதியாகமம் *3:12-13)*

முதல் பாவத்தின் விளைவாக, உடனடியாக ஆவிக்குரிய மரணம் நிகழ்ந்தது (மனிதன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான்), மற்றும் படிப்படியாக சரீர மரணம் நேரிட்டது.

பாவத்தின் பிற விளைவுகள், ஆதாம் நிலத்தில் கடினமாக உழைக்க வேண்டும், ஏவாள் வேதனையோடு பிள்ளை பெற வேண்டும், சர்ப்பம் தன் வயிற்றில் நகர்ந்து செல்ல வேண்டும், ஆதாம் மற்றும் ஏவாள் தங்கள் வீடான ஏதேனை விட்டு வெளியேற வேண்டும். (ஆதியாகமம் *3:14-18)*

ஆதாம் மற்றும் ஏவாளின் பாவத்திற்கு ஒரு விலை கிரயம் செலுத்தப்பட்டது. அவர்கள் அத்தி இலையைக் கொண்டு தங்களை மறைக்க முயன்றனர், ஆனால் அவர்கள் தோட்டத்தை விட்டு வெளியே செல்லும் முன் அவர்கள் நிர்வாணத்தை மூடும்படி ஒரு விலங்கு பலி செலுத்தப்பட்டது. (ஆதியாகமம் *3:20)*

ஆதாம், ஏவாள் பாவம் செய்தனர், பாவத்தின் சம்பளம் மரணம், அவர்கள் பாவத்திற்கு இரத்தம் சிந்தப்பட வேண்டும். ஒரு பழுதற்ற விலங்கின் இரத்தம் தற்காலிகமான பரிகாரமாக தேவன் அவர்களுக்காக செலுத்தினார். விலங்கின் தோள் தற்காலிகமாக அவர்கள் பாவத்தை மூடும். பாவம் உலகில் நுழைந்தவுடன் தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே பிளவு ஏற்பட்டது. இருப்பீனும் மனிதனை மீட்க தேவன் தாமாக முன்வந்து ஒரு இரட்சிப்பின் திட்டத்தை வகுத்தார். ஆதாமும், ஏவாளும் பாவம் செய்த பின்னரும் தேவன் தாமாக முன்வந்து அவர்கள் பாவத்தை மன்னிக்க செயலாற்றினார் - அதற்கு பெயர் தான் கிருபை. கிருபை என்பது தகுதியற்ற நபர்களுக்கு தேவனால் அருளப்படும் இலவசமான ஈவு.

**சுவிசேஷப் தொடர்பு: மைய வார்த்தை - பலி/கிருபை**

1. எபிரேயர் *13:11-12* - தேவன் ஆதாம், ஏவாளின் நிர்வாணத்தை மூட பலியிட்ட அந்த மிருகம், எதிர்காலத்தில் பலியிடப்படவிருக்கும் இயேசு கிறிஸ்துவை குறித்தது, அவரது பலியே பாவத்தை போக்கும் நிரந்தர தீர்வு. பழைய ஏற்பாட்டின் பலிகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவின் பரிகார பலியில் முழுமையடைந்தது.

2. ஆதியாகமம் *3:15* - முற்றிலும் பரிதாமான இந்நிலையிலும், தேவன் நம்பிக்கையளிக்கும் வாக்கினை அருள்வதை நாம் பார்க்கலாம்.

3. ரோமர் *16:20* - பின்னர் தேவன் ஏவளை நோக்க்கி அவளது சந்ததியில் தோன்றும் ஒரு நபர் ஒரு நாள் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என மேசியாகிய இயேசு கிறிஸ்துவை குறித்து வாக்கருளினார் இதுவே இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை குறிக்கும் முதல் நற்செய்தி.

அவர்கள் தோட்டத்தை விட்டு வெளியேறிய போது, தேவன் அவர்களை பலுகி பெருகி, பூமியை நிரப்பும்படி கட்டளையிட்டார், அவ்வாறே அவர்கள் பெருகினர்.

# ஆசிரியர் கையேடு
# சிருஷ்டிப்பு

**மூன்றாவது கருத்து - வெள்ளம்**

மனிதர்கள் பெருகிய போது பாவமும் பெருகியது, தான் பூமியிலே மனிதனை உருவாக்கியதை நினைத்து தேவன் மணஸ்தாபப்பட்டார்.

பாவம் மிகவும் பரவிப் பெருகியதால், தேவன் பூமியிலுள்ள ஜீவராசிகள் அனைத்தையும் அழிக்க தீர்மானித்தார்.

ஆனால் நோவா என்று ஒரு நீதிமான் காணப்பட்டான், அவன் கர்த்தரின் கண்களில் தயை பெற்றான். தேவன் தான் பூமியை வெள்ளத்தினால் அழிக்கபோவதாக கூறி, அவனிடம் ஒரு பேழையை கட்டுமாறு கூறினார், பேழை என்றால் ஒரு பெரிய படகு. அதினுள் அவனும், அவனது மனைவியும், அவனது மகன்கள் மற்றும் அவர்கள் மனைவிகள், மேலும் அனைத்து விலங்கினத்தின் ஒரு ஜோடி (மேலும் பின்னர் பலி செலுத்த சில விலங்குகள்) உட்பிரவேசிக்க வேண்டுமென கட்டளையிட்டார். தேவன் கட்டளையிட்ட யாவையும் நோவா நிறைவேற்றினான். தேவன் கட்டளையிட்ட யாவரும் பேழையினுள் நுழைந்த பின்னர், தேவன் பேழையின் கதவை அடைத்தார்.

தேவன் கூறியவாறே தண்ணீர் பூமியெங்கும் பெருக்கெடுத்தது. "பூமியின் மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன...." (ஆதியாகமம் *7:11*). நாற்பது நாட்கள் இரவும், பகலும் மழை பெய்து பூமி முழுவதும் காணப்பட்ட ஜீவராசிகள் மாண்டு போயின, ஆனால் நோவாவும் அவனது குடும்பத்தினரும் பேழைக்குள் பத்திரமாக காக்கப்பட்டனர்.

சுவிஷேசப் தொடர்பு: *1* பேதுரு *3:21* - பாவம் செய்த மக்கள் வெள்ளத்தால் தண்டிக்கப்பட்டனர், போழையோ நீதிமான்களுக்கு தஞ்சமாக அருளப்பட்டது. பாவ மனிதர்களுக்கான தண்டனை நித்திய மரணம், ஆனால் கிறிஸ்துவின் பரிகார பலியை விசுவாசிப்பவர்களுக்கு கிறிஸ்துவே அவர்களை நித்திய மரணத்திலிருந்து மீட்கும் தஞ்சமாக இருக்கின்றார்.

தண்ணீர் வற்றிய பின், நோவாவும் அவன் குடும்பத்தினரும், நியாயதீர்ப்பிலிருந்து மீட்கப்பட்டு, ஒரு புதிய தொடக்கத்தையும், நம்பிக்கையையும் பெற்றனர்.

அவர்கள் போழையை விட்டு வெளியேறியப் பின்னர், ஒரு பலிபீடம் கட்டி கர்த்தருக்கு பலி செலுத்தினர். அது தேவனுக்கு பிரியமான காரியமாக இருந்தது, தான் பூமியை மீண்டும் தண்ணீரினால் அழிப்பதில்லை என்று வாக்கருளினார். அதின் அடையாளமாக வானவில்லை அடையாளமாக கொடுத்தார். அவர்கள் பலுகி பெருகி பூமியை நிரப்பும்படியான கட்டளையை மீண்டும் பெற்றுக்கொண்டனர்.

**நான்காம் கருத்து - கோபுரம்**

எல்லா மனிதரும் ஒரே இடத்தில் வசித்து வந்தனர். அந்நாட்களில் மனிதர்கள் அனைவரும் ஒரே பாஷையை பேசினர். எனவே மனிதர்கள் ஒன்றாக கூடி வந்து தங்களுக்கென்று ஒரு பெரிய நகரத்தை உருவாக்கி வானத்தை எட்டுமளவு ஒரு கோபுரத்தை கட்டும்படி தீர்மானித்தனர். அவர்கள் தேவனை அல்ல தங்களை மகிமைபடுத்தும்படி அவ்வாறு செய்தனர், கர்த்தர் அவர்களது முரட்டாட்டமான இருதயத்தை கவணித்தார். அம்மனிதர்கள் தங்கள் பாவத்தில் தொடராத வண்ணம் அவர்கள் பல பாஷைகள் பேசும்படி செய்து அவர்களுக்குள் குழப்பத்தை உண்டு பண்ணினார். எனவே அவ்விடம் பாபேல் என்ற பெயர் பெற்றது, அதின் பொருள் "உரத்த குழப்பம்" என்பதே.

அதின் பின் தேவன் புதிய தலைமுறை மக்களை பூமி முழுவதும் அவர்கள் பாஷைகளின்படி சிதறடிக்க செய்தார், இதுவே தேசங்கள் உருவான வரலாறு.

# ஆசிரியர் கையேடு
# சிருஷ்டிப்பு

சுவிசேஷப் தொடர்பு: மைய வார்த்தைகள் - தேவன் அருள்கின்றவர்

யோவான் 14:6 - மனிதன் தன் சொந்த முயற்சியினால் பரலோகம் செல்ல முடியாது என்பதினை இச்சமபவம் நினைப்பூட்டுகின்றது. தேவனிடத்தில் சேர்ந்து அவரோடு நாம் வாழ இயேசு கிறிஸ்துவின் முலம் தேவன் நமக்கு ஒரு வழியை திறந்துள்ளார். இயேசு கிறிஸ்து தான் ஒருவரே நாம் பிதாவினிடத்தில் சேரும் வழி எனக் கூறியுள்ளார். யோவான் 14:6, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னையல்லாமல் ஒருவரும் பிதாவினிடத்தில் வரான்."

இத்துடன் முதல் யுகத்தின் பாடம் முடிவடைகின்றது. நினைவில் கொள்வதற்காக, பாடத்தின் மைய கருத்து: தேவன் ஆதமையும், ஏவாளையும் தமது சாயலில் சிருஷ்டித்தார், ஆனால் அவர்கள் தங்களது சொந்த வழியில் சென்று பாவத்தை உலகினுள் கொண்டு வந்தனர். அச்சமயம் தொடங்கி மனிதர்களை இரட்சிக்கும் தேவனது தேடல் தொடங்கியது.

இதில் படித்த நான்கு கருத்துக்கள்:

1. சிருஷ்டிப்பு
2. வீழ்ச்சி
3. பெருவெள்ளம்
4. கோபுரம்

## மீண்டும் கூறவும்

**உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும்.**

**ஆசிரியராக, பங்கேற்பாளர்களுடன் நீங்களும் ஒரு குழுவில் இணைந்து நேரடியாக அவர்களுடன் உரையாடலில் ஈடுபடவும்.**

# ஆசிரியர் கையேடு
# தேசம்

## தேசத்தை குறித்த பாடம்

வரவேற்பு / ஜெபம்

**படம் :** தேசம்

**படம்:** மைய கருத்து**:** தேவன் எல்லா மனிதரையும் இரட்சிக்கும் தனது திட்டத்தை நிறைவேற்ற இஸ்ரவேல் தேசத்தை உருவாக்கினார்.

நான்கு மைய கருத்துக்கள்**:**

1. ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு
2. யோசேப்பு
3. மோசே
4. புறப்படுதல்

**முதலாம் கருத்து – ஆபிரகாம், ஈசாக்கும், மற்றும் யாக்கோபு**

வேதம் முழுவதும் காணப்படும் ஒரு சுழற்சியை இங்கே காண்கிறோம்: மனிதர்கள் பாவம் செய்தல், அதின் விளைவுகள் பின்தொடருதல், மற்றும் தேவன் அவர்களை விடுவித்தல்.

மனிதர்களை தேடி அவர்களை இரட்சிக்கும் திட்டத்தை ஆபிரகாம் என்ற மனிதன் வழியாக தேவன் தொடர்கின்றார்.

ஆபிரகாமின் குடும்பம் ஒரு தேசமாக வளர தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். அத்தேசத்தின் மூலம் உலக மனிதர்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவர். (ஆதியாகமம் 12: 1-3)

**படம் :** அப்பொழுது அபிராம், பின்னர் ஆபிரகாம், ஊர் என்ற பட்டிணத்தில் வாழ்ந்தான் (நவீன ஈராக் அமைந்திருக்கும் பகுதி). அவனது சொந்த வீட்டினை விட்டு தான் காண்பிக்கும் தேசத்திற்கு போகும்படி தேவன் ஆபிரகாமிடம் கூறினார். ஆபிரகாம் தேவனையும், அவரது வாக்கினையும் விசுவாசித்து, அவருக்கு கீழ்படிந்தான். அவன் தேவனை விசுவாசித்ததினால் நீதிமானாக கருதப்பட்டான்.

**படம் :** எனவே ஆபிரகாமும், அவனது குடும்பமும் ஊர் பட்டிணத்தை விட்டு, வடக்கு திசை நோக்கி பயணித்தனர். ஆரானில் சில காலம் வசித்த பின்னர், கானான் தேசத்திற்கு சென்றனர்.

வரலாற்றில் கானானுக்கு பல பெயர்கள் உண்டு. அவன் அங்கு சென்ற போது அது கானான் என்றழைக்கப்பட்டது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து திரும்பிய பின்னர், வாக்குதத்தம் பண்ணப்பட்ட பூமி என்றழைக்கப்பட்டது. அதின் பின் இஸ்ரவேல், பாலஸ்தீனம். இறுதியில் 1948 முதல் இஸ்ரவேல் என்று மீண்டும் அழைக்கப்படுகின்றது. இப்பெயர்கள் அனைத்தும் ஒரே இடத்தை குறிக்கின்றது. இருப்பீனும், அவ்வப்போது நடைபெறும் அரசியல் மாற்றங்களால் அத்தேசத்தின் எல்லைகள் மாற்றப்பட்டுள்ளன.

எனவே ஆபிரகாமும், அவனது குடும்பமும் கானான் தேசத்தில் குடியேறினர். தேவன் அவர்களோடு செய்த உடன்படிக்கையில் கவனிக்கப்பட வேண்டிய மூன்று கருத்துக்கள்:

1. நிலம்
2. வித்து அல்லது சந்ததி
3. ஆசீர்வாதம்

# ஆசிரியர் கையேடு
# தேசம்

ஆபிரகாம் சாராளை மணந்திருந்தான், அவர்களுக்கு பிள்ளை இல்லாதிருந்தது. இருப்பீனும், ஆபிரகாமுக்கு ஒரு பிள்ளை பிறக்கும், அவனது சந்ததி நட்சத்திரங்களைப் போல் பெருகும் என தேவன் வாக்களித்தார். ஆபிரகாம் தேவனது வாக்கினை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக கருதப்பட்டது. அவர்கள் பிள்ளைக்காக காத்திருந்தனர். (ஆதியாகமம் 15:6)

நாட்கள் நீண்ட போது, சாராள் பொறுமை இழந்தபடியினால், பிள்ளை பெற்றுக்கொள்ள அவள் ஒரு திட்டமிட்டாள். எகிப்திலிருந்த கொண்டு வரப்பட்ட தன் வேலைகாரியான ஆகாரை ஆபிரகாமுக்கு மனைவியாக கொடுத்தாள். ஆகாரின் மூலம் தன் குடும்பத்தை கட்ட தீர்மானித்தாள்.

ஆகாருக்கு ஒரு மகன் பிறந்தான், அவன் பெயர் இஸ்மவேல் ஆனால் இஸ்மவேல் தேவனால் வாக்களிக்கப்பட்ட மகனல்ல. ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் ஒரு பிள்ளை பிறக்கும், அதுவே வாக்குதத்தின் மகன் என தேவன் மீண்டும் உறுதி செய்தார். ("வாக்குதத்தத்தின் மகன்" என நான் கூறுகையில் இயேசு கிறீஸ்துவின் வம்சத்தை அல்லது குடும்ப வழியை குறிப்பிடுகின்றேன்)

இறுதியில் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் ஒரு மகன் பிறந்தான், அவன் பெயர் ஈசாக்கு.

சுவிஷேச தொடர்பு : மைய வார்த்தை - கொடை

ஆதியாகமம் 22:14 - ஆபிரகாம் ஈசாக்கை மிகவும் நேசித்தான் என நாம் அறிவோம். ஒரு நாள், தான் மிகவும் நேசித்த வாக்குதத்தின் மகனாகிய ஈசாக்கை தனக்கு தகனபலியாக அர்ப்பணிக்கும்படி தேவன் ஆபிரகாமிடம் கூறினார். கர்த்தருக்கு கீழ்படிந்த ஆபிரகாம், தன் மகனை கயிறுகளால் கட்டு, தகனபலிக்கென விறகுகளின் மேல் கிடத்தினான். அவனை பலியிட கத்தியை ஓங்கிய போது, கர்த்தருடைய தூதனானவர் அவனை நிறுத்தினார். ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்து பார்த்தபோது புதரிலே தன் கொம்புகள் மாட்டிக் கொண்ட ஒரு ஆட்டுக்கடாவை கண்டான். தனது மகனுக்கு பதில் அதினை பலியிட்டு, அவ்விடத்திற்கு "கர்த்தர் பார்த்துக்கொள்வார்" என பெயரிட்டான். பலருக்காக பரிகார பலியாக மரிக்கப்போகும் இயேசு கிறிஸ்துவின் பரிகார பலியை ஈசாக்கின் ஸ்தானத்தில் பலியிடப்பட்ட ஆட்டுக்கடா முன்குறித்தது.

ஈசாக்கு ரெபெக்காளை மணந்தான், அவர்களுக்கு இரண்டு குமாரர் பிறந்தனர், அவர்கள் பெயர் யாக்கோபு மற்றும் ஏசா. அவர்களில், யாக்கோபு வாக்குதத்தத்தின் மகன்.

யாக்கோபு லேயாள் மற்றும் ராகேலை மணந்தான், அவர்கள் இருவருக்கும் வேலைகாரிகள் இருந்தனர். அவர்கள் நால்வர் வழியாக யாக்கோபுக்கு 12 குமாரர் பிறந்தனர். தேவன் யாக்கோபிற்கு இஸ்ரவேல் என்று மறுபெயரிட்டார், அதினால் இஸ்ரவேல் என்ற பெயரினால் யாக்கோபின் முழுகுடும்பமும் அழைக்கப்படுகின்றது.

ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு ஆகிய முற்பிதாக்களின் மூலம் இஸ்ரவேல் தேசம் உருவானது.

சுவிசேஷ தொடர்பு : மைய வார்த்தை - சந்ததி/வம்சம்

1. ஆதியாகமம் 3:15 - ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்குதத்தம் சந்ததி மற்றும் ஏதேனில் வாக்களிக்கப்பட்ட இரட்சகராகிய"வித்து" இரண்டினையும் உள்ளடக்கியது. "வித்து" இஸ்ரவேலுக்கு மட்டுமல்ல முழு உலகிற்கும் ஆசீர்வாதமாக மாறும்.

2. கலாத்தியர் 3:16 - அந்த வித்து இயேசு கிறிஸ்துவே.

# ஆசிரியர் கையேடு
# தேசம்

**இரண்டாம் கருத்து - யோசேப்பு**

யாக்கோபின் பதினோறாவது மகன் யோசேப்பு, அவன் யாக்கோப்பின் செல்ல மகன். யாக்கோபு அவனுக்கு பல வர்ண ஆடை வாங்கி கொடுத்தான், அவன் தகப்பனுக்கு பிரியமானவனானபடியால் அவனது மூத்த சகோதர்கள் அவனை வெறுத்தனர். யோசேப்பு தனக்கு தேவனால் அருளப்பட்ட சொப்பணத்தில் தனது மூத்த சகோதரர்கள் அனைவரும் தன்னை வணங்குவதாக அவன் கண்டதாக கூறிய போது அவன் மீது அவர்களின் கோபம் அதிகரித்தது.

படம்: யோசேப்பை கொல்ல அவனது சகோதரர்கள் திட்டமிட்டனர், பின்னர் அதற்கு பதிலாக அவனை அடிமையாக விற்றனர், அவன் எகிப்துக்கு கொண்டு செல்லப்பட்டான். எகிப்தில் யோசேப்பு பல பாடுகளை சந்தித்தான்; ஆனால் தேவன் அவனோடிருந்து அவனை பாதுகாத்தார், அவன் செழித்தான்.

யோசேப்பு சந்தித்த பாடுகளில் ஒன்று, அவன் அநியாயமாக சிறையில் அடைக்கப்பட்டது. அங்கு சிறையில் உள்ளவர்கள் கண்ட கனவுகளுக்கு அவன் விளக்கமளித்தான். சில நாட்களுக்கு பிறகு, ஒருவரும் பொருள் கூற முடியாத ஒரு கனவு பார்வோனுக்கு தோன்றியது. பார்வோனின் பானபாத்திரக்காரன் சிறையில் வசிக்கும் ஒரு எபிரேய இளைஞன் கனவுகளுக்கு சரியான விளக்கம் கொடுப்பான் எனக் கூறினான். எனவே யோசேப்பை அழைத்து வந்தனர்.

யோசேப்பு தேவனே பார்வோனின் சொப்பனத்திற்கு விளக்கமளிப்பார் என்றான், தேவன் அதினை யோசேப்பிற்கு வெளிப்படுத்தினார். எகிப்தில் செழிப்பான ஏழு வருடங்கள் முதலில் வரும் எனவும், அதனை தொடர்ந்து ஏழு வருடம் பஞ்சம் நிலவும் எனவும் பார்வோனின் சொப்பனத்தை யோசேப்பு விளக்கினான்.

யோசேப்பு சொப்பனத்திற்கு கொடுத்த விளக்கம் நம்பத்தகுந்தது, அதினால் பார்வோன் அவனை இராஜ்ஜியத்தின் இரண்டாம் அதிகாரத்தில் பதவி அமர்த்தினான். வரப்போகும் பஞ்சகாலத்திற்கு எகிப்தை ஆயத்தம் செய்யும் பொறுப்பு யோசேப்புக்கு கொடுக்கப்பட்டது.

யோசேப்பு வாக்குரைத்ததுப் போல் செழிப்பும், பஞ்சமும் தோன்றியது, எகிப்து மட்டுமல்ல அதனை சுற்றிலுள்ள தேசங்களிலும் பஞ்சம் நிலவியது. எனவே யோசேப்பின் தந்தையும், அவனது குடும்பமும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டனர். எகிப்தில் தானியம் உண்டு என யாக்கோபும், அவனது மகன்களும் கேள்விபட்ட போது தங்களது குடும்பத்திற்கும் தானியம் கொள்ளும்படி அவர்கள் எகிப்திற்கு சென்றனர். அவர்கள் எகிப்திற்கு சென்ற போது, யோசேப்பு அவர்களை அடையாளம் கண்டு கொண்டான், பின்னர் அவர்களை மன்னித்து அவர்களுடன் ஒப்புரவானான்.

அவனது விண்ணப்பத்தின் பேரில், தனது முழுகுடும்பத்தையும் (ஏறக்குறைய எழுபது நபர்கள்) எகிப்தில் பிழைக்கும்படி கானானிலிருந்து வரவழைக்க பார்வோன் அனுமதித்தான். கோசேன் என்ற இடத்தில் அவர்கள் குடியேறி, செழித்தனர், எபிரேயர்கள் திரளாக பெருகினர்.

தனது திட்டத்தின்படி இஸ்ரவேலை இரட்சித்து, பெருக செய்ய தேவன் யோசேப்பை பயன்படுத்தினார்.

சுவிசேஷ தொடர்பு : மைய வார்த்தை - மன்னிப்பு

ஆதியாகமம் 45:1-28; எபேசியர் 1:7 - யோசேப்பு தன் சகோதர்களால் நிராகரிக்கப்பட்டான். இருப்பினும் அவனது சகோதரர்கள் அவனிடம் மன்னிப்பு கோரிய போது அவர்களை மன்னித்தான், அவர்களோடு ஒப்புரவாகினான், அவர்களை காப்பாற்றினான். அதனை போன்றே, இயேசுவும் நம்மால் நிராகரிக்கப்பட்டார், இருப்பினும் நம்மை மன்னித்தார், நம்மை தம்மோடு ஒப்புரவாக்கி இரட்சிக்கின்றார். யோசேப்பு தன் சகோதர்களைப் பார்த்து, "நீங்கள் எனக்கு தீங்கு நினைத்தீர்கள், கர்த்தரோ அதனை நன்மையாக மாற்றினார்" என்றுரைத்தான்.

# ஆசிரியர் கையேடு

## தேசம்

யோசேப்பு மரித்தான், வருடங்கள் கடந்த பின்னர் யோசேப்பை அறியாத ஒரு பார்வோன் தோன்றினான். எபிரேயர்களின் பெருக்கத்தை பார்த்து அவர்கள் தனக்கு எதிராக புரட்சியில் ஈடுபடுவார்களோ எனத் திகைத்தான்.

தனது அரசாட்சியை பாதுகாக்க, பார்வோன் இஸ்ரவேலரை அடிமைபடுத்தி, அவர்களை கடினமாக நடத்தினான். இருப்பினும் எபிரேயர் பெருத்தனர்.

**மூன்றாவது கருத்து - மோசே**

எபிரேயர்கள் எகிப்தில் 400 வருடங்கள் வசித்தனர். அவர்கள் கடினமாக நடத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டதால் கர்த்தரிடம் அவர்களை விடுவிக்கும்படி மன்றாடினர்.

தேவன் அவர்கள் கூக்குரலைக் கேட்டு, ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபிற்கு தான் அருளிய வாக்குதத்ததை நினைவு கூர்ந்தார் என வேதம் கூறுகின்றது. அதற்கு பதிலளிக்கும் வண்ணம் தேவன் மோசே என்ற மனிதனை எழுப்பினார்.

மோசேயின் வாழ்க்கை ருசிகரமானது. அவன் பிறந்த போது எபிரேய ஆண் பிள்ளைகள் அனைவரும் பிறந்தவுடன் கொல்லப்பட வேண்டும் என எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் கட்டளையிட்டான். சிறுபிள்ளையாகிய மோசேயை கொல்ல மனதில்லாத அவன் பெற்றோர் அவனை மூன்று மாதங்கள் வளர்த்தனர். அதின் பின்னர் ஒரு நாணல் பெட்டியில் அவனை வைத்து நயில் நதியில் விட்டனர். அந்த பெட்டி பார்வோனின் குமாரத்தி குளித்து கொண்டிருந்த பகுதிக்கு சென்றது, அப்பொழுது பெட்டியிலிருந்த மோசேயை கண்ட அவள், அவனை தனது தத்துப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டாள். மோசே 40 வயது வரை பார்வோனின் அரண்மனையில் மிகச் சிறந்த முறையில் வளர்க்கப்பட்டான்.

அவன் 40 வயது நிரம்பிய போது, எபிரேயனை துன்புறுத்திய ஒரு எகிப்தியனை கொன்றான். அது கண்டுபிடிக்கப்பட்ட போது, மிதியான் தேசத்திற்கு தப்பித்து சென்று, 40 வருடங்கள் ஆடுகளை மேய்த்து வந்தான். ஒரு நாள் அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, கர்த்தருடைய தூதன் எரிகிற முட்புதரில் அவனுக்கு தரிசனமானார். அப்புதர் அக்கினியால் சுட்டெரிக்கப்படவில்லை. தேவன் மோசேயை அழைத்து தனது பிள்ளைகளை எகிப்தின் அடிமைதனத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டு அவனை மீண்டும் எகிப்திற்கு போகும்படி கூறினார். பார்வோனிடம் சென்று கர்த்தரின் பிள்ளைகளை போக விடும்படி உரைப்பதே மோசேயின் பணி.

மோசே முதலில் தயங்கினான். “எகிப்தியர் தன்னிடம் யார் அவனை அனுப்பியது எனக் கேட்டால்” என்ன கூறுவது என தேவனிடன் வினாவினான். அதற்கு தேவன், “இருக்கிறவராகவே இருக்கிறவராகிய நான் உன்னை அனுப்பினேன்,” என கூறு என்றுரைத்தார் (யாத்திராகமம் *3:14*). இறுதியாக மோசே கர்த்தருக்கு கீழ்படிந்து பார்வோனிடம் பேசுவதற்காக எகிப்துக்கு சென்றான்.

தனது ஜனத்தை அனுப்பிவிடும்படி மோசே பார்வோனிடம் பத்து முறை மன்றாடினான், ஆனால் ஒவ்வொரு முறையும் அவனது விண்ணப்பம் மறுக்கப்பட்டது. ஒவ்வொரு மறுப்பிற்கு பின்னரும், தேவன் எகிப்தின் மீது ஒரு வாதையை அனுப்பினார். ஒவ்வொரு வாதையும் எகிப்தின் பொய்யான தெய்வங்களுக்கு எதிராக தேவனது வல்லமையை வெளிப்படுத்தியது. ஆனால் பத்தாவது வாதை வருமளவும் பார்வோன் விட்டுக் கொடுக்கவில்லை. தனது பிள்ளைகளை விடுவிக்காவிட்டால் எகிப்தின் முதற்பிறப்பு அனைத்தும் கொல்லப்படும் என தேவன் பார்வோனை எச்சரித்தார். அவ்வாதையிலிருந்து தப்பிக்குமாறு பார்வோன் தேவனது பிள்ளைகளை விட்டுவிட வேண்டும், ஆனால் அவன் செவி சாய்க்கவில்லை.

# ஆசிரியர் கையேடு
# தேசம்

தேவன் தனது கிருபையினால் தனது பிள்ளைகள் அதிலிருந்து தப்பிக்க ஒரு வாய்ப்பருளினார். மரணத்திலிருந்து விடுபட, தனது பிள்ளைகளை ஒரு பழுதற்ற ஆட்டை கொன்று, அதின் இரத்தத்தை எடுத்து, தங்கள் வாசல்களில் பூசும்படி தேவன் கூறினார். அன்று இரவில், சங்கார தூதன் எகிப்தை கடந்து சென்றான். இரத்தம் பூசப்பட்ட விடுகளை அவன் கடந்து சென்று, இரத்தம் பூசப்படாத விடுகளில் முதற்பிறப்புகளை சங்கரித்தான்.

இஸ்ரவேலர் அனுசரிக்கும் பஸ்கா பண்டிகை அன்று தான் தோன்றியது.

ஆட்டிக்குட்டியின் இரத்தம் பூசப்படாத எகிப்தின் வீடுகளில் மிகப்பெரிய அழுகுரல் எழும்பியது. பார்வோனின் முதல் மகனும் அன்று இறந்தான். அதினால் பார்வோன் மோசேயை நோக்கி அவனது மக்களை அழைத்துக் கொண்டு எகிப்தை விட்டு வெளியேறும்படி கூறினான்.

சுவிஷேச தொடர்பு: மைய வார்த்தை - நீதியுள்ள நியாயதீர்ப்பு

1. *1 கொரிந்தியர் 5:7* - நீதியுள்ள நியாயதீர்ப்பின் வருகையை நாம் இங்கே காணலாம். குற்றமற்ற ஆட்டுக்குட்டியின் இரத்தம் தங்கள் வாசல்களில் தெளிக்கப்படுவதே அவர்கள் இரட்சிக்கப்பட ஒரே வழி. முதற்பிறப்பு மரிக்க வேண்டிய இடத்தில் ஆட்டுகடா பலியிடப்பட்டது. நம் பாவத்தை மூடி, நம்மை இரட்சிக்கும் இயேசு கிறிஸ்துவின் இரத்ததை அது முன்குறித்தது. "நமக்காக பலியிடப்பட்ட பஸ்கா, கிறிஸ்துவே" என புதிய ஏற்பாட்டில் பவுல் தெளிவாக ஒப்பிடுகின்றார். இயேசு நம் இடத்தில் மரித்தார்.

2. *யோவான் 1:29* - யோவான் இயேசுவை கண்டபோது, "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டி" என கூறினார்.

**நான்காம் கருத்து - புறப்படுதல்**

**படம்:** எபிரேயர்கள் தங்கள் உடைமைகளை எடுத்துக்கொண்டு உடனடியாக புறப்பட்டனர், அதினால் அவர்கள் பஸ்காவை கொண்டாட அப்பம் செய்வதற்கு ஆயத்தம் செய்த மாவு புளிப்பதற்கு நேரம் போதவில்லை. எனவே அவர்கள் புளிபில்லாத அப்பத்தை சாப்பிட்டனர். அதனை நினைவுகூரும் வண்ணம் அவர்கள் ஒவ்வொரு முறை பஸ்காவை அனுசரிக்கும் போதும் புளிபில்லா அப்பத்தை சாப்பிடுவது வழக்கமாக உள்ளது. 400 வருடங்களுக்கு முன் யாக்கோபின் குடும்பத்தினர் பஞ்சத்திலிருந்து தப்புவதற்காக எகிப்திற்கு சென்றனர். ஏறக்குறைய 70 நபர்களாக அவர்கள் எகிப்தில் குடியேறினர். 400 வருடங்கள் அந்நிய தேசத்தில் வாழ்ந்த அவர்கள், மிகவும் பெருகினர், எபிரேயர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட போது அவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 25 லட்சம்.

ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு என்பவர்களில் தொடங்கிய குடும்பம் ஒரு தேசமாக உருவெடுத்தது.

சுவிசேஷ தொடர்பு: மைய வார்த்தை - விடுதலை

1. *யாத்திராகமம் 3:7-10; ரோமர் 6:6; யோவான் 8:34-36; யோவான் 15:15* - மோசே எகிப்தின் அடிமைதனத்திலிருந்து இஸ்ரவேலரை விடுவித்தது போல், இயேசுவும் நம்மை பாவத்தின் பிடியிலிருந்து விடுவிப்பவர். நாம் விடுவிக்கப்பட்டவர்கள், இனி நாம் அடிமைகள் அல்ல.

2. யோவான் 8:34 - 36 - இயேசு நம்மை பாவத்திலிருந்து விடுவிக்கின்றவர்.

# ஆசிரியர் கையேடு
## தேசம்

எகிப்திலிருந்து எபிரேயர்கள் வெளியேறிய பின், பார்வோன் தன்னிடம் அடிமைகளாக பணியாற்றிய தொழிலாளர்கள் அனைவரையும் இழந்ததை உணர்ந்தான் எனவே அவன் மனம் மாறியது, எகிப்தின் இராணுவத்தை திரட்டிக் கொண்டு எபிரேயர்களை பின் தொடர்ந்தான்.

எபிரேயர்கள் சிவந்த சமுதரத்தை நெருங்கிய போது, அவர்கள் ஆபத்தில் சிக்கிக்கொண்டதை உணர்ந்தனர்: அவர்களுக்கு முன் அச்சுறுத்தும் கடலும், பின் பக்கத்திலோ எகிப்தின் இராணுவனும் காணப்பட்டது. தாங்கள் மாண்டு போவார்கள் என அச்சம் கொண்டனர், ஆனால் தேவன் தனது பிள்ளைகளை காக்கும் ஒரு திட்டம் வைத்திருந்தார். அவர்களுக்கு முன் மேஸ்தம்பமாக அவர்களை வழிநடத்திய கர்த்தருடைய தூதனானவர், அவர்களுக்கு பின்னாக நகர்ந்து, எகிப்தின் இராணுவத்திடமிருந்து அவர்களை பாதுகாத்தார்.

மோசேயின் கோலை உயர்த்தும்படி தேவன் கூறினார், அவன் தன் கோலை நீட்டிய போது சிவந்த சமுத்திரம் இரண்டாக பிளந்தது எபிரேயர்கள் பத்திரமாக அதனை கடந்தனர். இரண்டாக பிளந்த சமுத்திரத்தின் வழியாக பார்வோன் அவர்களை பின்தொடர்ந்தான். ஆனால் தேவன் அவர்களை சமுத்திரத்தில் வீழ்த்தினார். பார்வோனின் சேனை ஒரே நாளில் மாண்டுபோனது.

மோசே சீனாய் மலைக்கு தனது ஜனங்களை அழைத்து சென்றான். சீனா மலையில், தேவன் இஸ்ரவேலருக்கு நியாயபிரமாணத்தை அருளினார். அது 10 கட்டளைகளை மட்டும் உள்ளடக்கியது அல்ல. நியாயபிரமானம் தேவனது பரிசுத்த தன்மையை பிரதிபலிப்பதினால் அது முக்கியத்துவம் வாய்ந்தது. அது நமது குறைவுகளை சுட்டிக்காட்டி, அதற்கு கீழ்படியும் திறன் நமக்குள் இல்லை என அடையாளம் காண்பித்தது.

தான் எபிரேயர்கள் மத்தியில் வாசம் செய்வதற்கென ஒரு ஆசரிப்பு கூடாரத்தை கட்டும்படி தேவன் கூறினார். அவர் இரவில் அக்கினி தூனாகவும், பகலிலே மேஸ்தம்பமாகவும் அவர்களை வழிநடத்தினார்.

தங்கள் முற்பிதாக்களுக்கு சொந்தமான பூமியை அவர்கள் எடுத்துக்கொள்ளும் வந்தது. எனவே யுத்த வீரர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டான். தேவன் வாக்களித்த பூமி மெய்யாகவே பாலும், தேனும் ஒடுகின்ற தேசமா என்பதை காண இஸ்ரவேலர் தேசத்தை வேவு பார்க்க வேவுகாரர்களை அனுப்பினர்.

**படம்:** காதேஸ் பர்னேயா என்ற இடத்திற்கு அவர்கள் வந்தபோது 12 நபர்களை மோசே தெரிந்துகொண்டார், ஒவ்வொரு கோத்திரத்திலுமிருந்து ஒருவர் தேசத்தை வேவு பார்த்து ஒரு அறிக்கையை கொண்டு வரும்படி அனுப்பினார்.

வேவுகாரர்கள் 40 நாட்கள் தேசத்தை வேவு பார்த்து அது உண்மையாக தாங்கள் கேள்விபட்டதை காட்டிலும் சிறப்பான தேசம் என கூறினர்.

ஆனால் அந்த தேசத்தில் இரட்சதர்கள் வாழ்ந்து வந்தனர், அவர்களுக்கு முன் எபிரேயர்கள் வெட்டுக்கிளிகளைப் போல் காணப்பட்டனர். பத்து வேவுகாரர்கள் அவர்களிடமிருந்து தேசத்தை கைபற்றுவது கடினம் எனக் கூறினர், ஆனால் இரண்டு நபர்களோ கர்த்தரின் ஒத்தாசையினால் அதனை கைபற்றலாம் எனக் கூறினர் - அவர்களின் பெயர் யோசுவா மற்றும் காலேப் (நாளாகமம் 13: 26-33).

**படம்:** ஆச்சரியமாக, இஸ்ரவேல் மக்கள் பயத்தினால் நிரம்பிய பத்து வேவுகாரர்களுக்கு செவிகொடுத்தனர், அதின் விளைவாக அவிசுவாசத்தினால் நிரம்பினர், எனவே எபிரேயர்கள் 40 வருடங்கள் வனாந்திரத்தை சுற்றி திரிந்தனர்: அவர்கள் தேசத்தை வேவுபார்த்த ஒரு நாளுக்கு ஒரு வருடமென 40 வருடங்கள். அவர்கள் சுற்றி திரிந்த 40 வருடங்களும் தேவன் அவர்களை மன்னா (பொருள்- இது என்ன) என்ற உணவினால் போஷித்தார். எகிப்திலிருந்து புறப்பட்ட 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் மரிக்கும்வரை அவர்கள் வனாந்திரத்தில் சுற்றிதிரிந்தனர். அவர்களின் அடுத்த தலைமுறையே வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிக்கும்.

**சுவிசேஷ தொடர்பு:** யோசுவா 1:1-4; வெளிபடுத்தல் 21:1-3 - தேவனை விசுவாசிப்பவர்கள் வாக்குதத்தை பெற்று, வாக்களிக்கப்பட்ட தேசத்தை பெற்று கொள்வார்கள் என்பதின் வரைபடம் இது. அதனை போன்றே தேவன் நமக்கு வாக்களித்த பூமியான பரலோகத்தை நாம் அடைய அவரை விசுவாசிக்க வேண்டும்.

**படம்:** இறுதியாக மோசே இஸ்ரவேலரை வட திசை நோக்கி அழைத்து வந்து யோர்தான் நதியின் கிழக்கு புறத்தில் பளையமிறங்கினார்.

# ஆசிரியர் கையேடு
# தேசம்

தேவனுடைய நியாயபிரமாணத்தை மோசே மக்களுக்கு நினைவுபடுத்தி, அவர்கள் வாக்குதத்தம் செய்யப்பட்ட தேசத்தில் பின்பற்ற வேண்டிய மூன்று கட்டளைகளை அருளினான்.

1. கானானியர் அனைவரும் கொல்லப்பட வேண்டும்.
2. அவர்களது பெண்களை திருமணம் செய்யக்கூடாது.
3. அவர்களது தெய்வங்களை வழிபடுதல் கூடாது.

பின்னர் இஸ்ரவேலர் அனைவருக்கும் முன்பாக மோசே யோசுவாவை இஸ்ரவேலரின் தலைவனாக நியமித்தான். அவன் தேசத்தை இஸ்ரவேலர் சுதந்தரிக்கும்படி அவர்களை வழிநடத்த வேண்டுமென கூறினான். அதின் பின்னர் தேசத்தை இஸ்ரவேலரின் கோத்திரங்களுக்கு அவன் பிரித்து கொடுக்க வேண்டும். "கர்த்தர் அவனோடிருந்து, அவனுக்கு முன் சென்று, ஜெயமளிப்பார்" என மோசே யோசுவாவிடம் கூறினான்.

அதற்கு பின் மோசே நேபோ மலையில் ஏறி மரித்தான். தேசம் என்ற யுகம் அதனுடன் முடிவுற்றது.

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து கலந்துரையாடவும்.

**வீட்டுப்பாடம்:** தங்கள் வீட்டிற்கு சென்ற பின்னர் தாங்கள் கற்றுக்கொண்ட யுகங்கங்களைக் குறித்து பிறருக்கு போதிக்கும்படி குழுவினரை ஊக்குவிக்கவும்.

## சுதந்தரித்தல் என்ற தலைப்பிற்கான பாடம்

வரவேற்பு/ஜெபம்

**படம் :** சுதந்தரித்தல்

**படம்:** மைய வாக்கியம்: கர்த்தர் தனது ஜனத்தை வாக்களிக்கப்பட்ட தேத்திற்கு அழைத்து வந்து அவர்களை ஆள நியாயதிபதிகளை நியமித்தார்.

நான்கு மைய கருத்துக்கள்:

1. எரிகோ
2. வாக்களிக்கப்பட்ட தேசம்
3. தேசத்தை ஆளுதல்
4. நியாயதிபதிகளின் சுழற்சி

**முதல் கருத்து - எரிகோ**

மோசேயின் மரணத்திற்கு பின்னர் யோசுவா மக்களை தலைமையேற்று நடத்தினான். தங்கள் முற்பிதாக்களுக்கு தேவன் வாக்களித்த பூமியை சுதந்தரிக்கும் பொறுப்பு அவனுக்கு அளிக்கப்பட்டது. யோசுவாவும் அவனது ஜனமும் யோர்தானுக்கு கிழக்கு புறம் தங்கியிருந்தனர், எனவே அவர்களது முதல் யுத்தம் எரிகோவுக்கு எதிராக என அறிந்திருந்தனர்.

எரிகோவை வீழ்த்துவது முக்கியத்துவம் வாய்ந்தது. அது வலிமைமிக்க மதில்கள் கொண்ட பட்டிணம், அதுவே வாக்களிக்கப்பட்ட தேசத்தின் நுழைவு வாயில்.

எரிகோவை வேவு பார்க்க யோசுவா இரண்டு வேவுகாரர்களை அனுப்பினான். எரிகோ பட்டிணத்திற்குள் நுழைந்த வேவுகாரர்கள் ராகாப் என்ற வேசியின் இல்லத்தில் தங்கினர். எபிரேயரின் தேவன் எரிகோவை வீழ்த்தி அதனை இஸ்ரவேலரின் கைகளில் கொடுப்பார் என ராகாப் விசுவாசித்தாள். அதினிமித்தம் அவள் வேவுகாரர்களை பாதுகாத்தாள். அதின் பலனாக தன் குடும்பம் காப்பாற்றப்பட வேண்டுமென அவள் விரும்பினாள், அதற்கு வேவுகாரர்கள் ஒப்புதல் அளித்தனர். வேவு பார்த்த பின் யோசுவாவிடம் திரும்பிய அவர்கள் கர்த்தர் தங்கள் கையில் எரிகோவை கொடுப்பார் எனவும், எரிகோவின் மக்களின் இருதயம் பயத்தினால் உருகியது எனவும் கூறினர். அதினால் யோசுவா எரிகோவை மேற்கொள்ள திட்டமிட்டான்.

எரிகோவுக்கும், எபிரேயருக்கும் இடையே யோர்தான் நதி நின்றது, அதில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால் தேவன் மீண்டும் தன் மகிமையை தன் ஜனத்திற்கு காண்பிக்க ஆயத்தமாக இருந்தார், மோசேயோடு இருந்தது போல் யோசுவா உடனும் தான் உள்ளதை உறுதி செய்ய விரும்பினார். உடன்படிக்கையின் பெட்டியை கையில் ஏந்திய ஆசாரியரின் கால்கள் நதியில் பட்டவுடன் யோர்தான் நதி இரண்டாக பிரிந்தது, ஜனங்கள் பத்திரமாக நதியை கடந்தனர்.

**படம்:** எரிகோவின் அருகில் சென்ற போது, பட்டிணம் அடைக்கப்பட்டிருந்தது, எபிரேயர் மீது கொண்டிருந்த பயத்தினால் அதிலிருந்து ஒருவரும் வெளியே வரவில்லை.

யோசுவா எல்லோராலும் மதிக்கப்பட்ட, ஞானம் நிறைந்த இராணுவத் தலைவன், ஆனால் அவன் தன் சுய ஞானத்தை பயன்படுத்தி யுத்தம் செய்ய விரும்பவில்லை. மாறாக அவன் தேவனை தேடினான்.

கர்த்தர் ஒரு ருசிகரமான திட்டத்தை அவனுக்கு கொடுத்தார். ஆறு நாட்கள் அவர்கள் தங்கள் ஆயுதங்களுடன் தினமும் ஒரு முறை பட்டிணத்தின் மதில் சுவற்றை சுற்றி வர வேண்டும். ஏழு ஆசாரியர்கள் எக்காளங்களை கையில் பிடித்து உடன்படிக்கை பெட்டியின் முன் நடக்க வேண்டும். பின்னர், ஏழாம் நாள், பட்டிணத்தை ஏழு தரம் சுற்றி வர வேண்டும். பின்னர் எக்காள சத்தம் கேட்கையில் மக்கள் அனைவரும் ஆர்பரிக்க வேண்டும் அப்பொழுது எரிகோவின் மதிற்சுவர் இடிந்து விழும்.

# ஆசிரியர் கையேடு

## சுதந்தரித்தல்

எரிகோவை வென்ற பின்னர், நகரத்தின் உடைமைகளை ஒருவரும் எடுத்துக் கொள்ள கூடாது என யோசுவா மக்களுக்கு கட்டளையிட்டான், ஆனால் நகரத்தின் வெள்ளி, தங்கள், வெண்கலம், மற்றும் இரும்பினை கர்த்தரின் பொக்கிஷத்தில் சேர்க்க வேண்டும்.

அவர்கள் கர்த்தரின் கட்டளையை பின்பற்றினர், எதிர்பார்த்தது போல், ஏழாம் நாளில் நகரத்தின் மதிற்சுவர் இடிந்து விழுந்தது, அவர்கள் எரிகோவை கைபற்றினர். அதில் கிடைத்தவற்றை கர்த்தரின் பொக்கிஷத்தில் சேர்த்தனர்.

சுவிஷேச தொடர்பு: யோசுவா *2:11;* ரோமர் *3:21-26* - இஸ்ரவேலின் தேவன் மீது வைத்த விசுவாசத்தினால் ராகாப் மற்றும் அவளது குடும்பத்தினர் இரட்சிக்கப்பட்டனர். நாமும் அவ்வாறே இயேசு கிறிஸ்துவின் மீது கொண்ட விசுவாசத்தினால் மீட்கப்பட்டோம். பாவியாகிய மனிதன், விசுவாசத்தினால் மீட்கப்படுதல். வேசியாகிய ராகாப் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றில் இடம் பெற்றால் என்பது முக்கியத்தும் வாய்ந்தது. கர்த்தர் பாவிகளாகிய மனிதர்களை ஏற்றுக்கொண்டு அவர்களை வல்லமையாக பயன்படுத்துகின்றார் என்பது எத்தனை ஆச்சரியமானது.

இத்தனை பெரிய வெற்றியிலும், ஆகான் என்ற ஒரு மனிதன் கர்த்தருக்கு கீழ்படியவில்லை, அவன் மறைமுகமாக சில பொருட்களை கொள்ளையிட்டு தனக்கென்று ஒளித்து வைத்தான்.

**இரண்டாம் கருத்து - வாக்களிக்கப்பட்ட தேசம்**

பல வருடங்களுக்கு முன்னர் இது ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு ஆகியோருக்கு வாக்களிக்கப்பட்ட பூமி என்பதினை நினைவு கூறவும்.

எரிகோவின் மீது கிடைத்த பெரிய வெற்றிக்கு பின், யோசுவா ஆய் என்ற ஒரு சிறிய பட்டிணத்தை பிடிக்க ஆட்களை அனுப்பினான். எரிகோவை வீழ்த்தியதினால் இதனை எளிதாக பிடித்துவிடலாம் என இஸ்ரவேலர் நினைத்தனர், ஆனால் அவர்கள் தோல்வியடைந்தனர்.

யோசுவா தேவனிடம் ஏன் இந்த தோல்வி என்று ஜெபித்த போது, கர்த்தர் இஸ்ரவேலர் தனக்கு விரோதமாக பாவம் செய்தனர் எனக் கூறினார். இஸ்ரவேலரில் ஒருவன் கர்த்தரின் கட்டளையை மீறி, கர்த்தரின் பொக்கிஷத்தை திருடினபடியால் இந்த தோல்வி என தேவன் கூறினார். அதனை செய்தது ஆகான் என யோசுவா கண்டறிந்தான், அவனும் அவனது குடும்பத்தினரும் தண்டிக்கப்பட்டனர். இதின் மூலம் கர்த்தர் சகலத்தையும் அறிந்தவர், அவர் பாவத்தை கண்டுகொள்ளாமல் விடுவதில்லை என தேவனுடைய ஜனம் அறிந்து கொண்டது.

அதின் பின் தேசத்தை சுதந்தரிப்பது தொடர்ந்தது.

வாக்குதத்தம் செய்யப்பட்ட பூமியை இரண்டாக பிரித்து சுதந்தரிக்கும் யூக்தியை இஸ்ரவேலர் பின்பற்றினர்.

**படம்:** அவர்கள் தேசத்தை இரண்டாக பிரித்து, கைபற்றினர்.
**படம்:** முதலில் தென்புறமாக படையெடுத்து சென்று கைபற்றினர்.
**படம்:** பின்னர் வட திசையில் சென்று, தேசத்தை தங்கள் உடைமையாக்கி கொண்டனர்.

அவர்கள் *31* வெற்றிகளையும், இரு தோல்வியையும் சந்தித்தன்ர்.

யோசுவா தன் ஜனத்தை வாக்குதத்தம் செய்யப்பட்ட பூமிக்கு அழைத்து செல்வதின் மூலம் இயேசு கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக காணப்பட்டான், யோசுவா *11:23;* வெளிப்படுத்தல் *21:1-3.* நமக்கு வாக்களிக்கப்பட்ட பூமியாகிய பரலோகிற்கு இயேசு நம்மை அழைத்து செல்வார். யோசுவா மற்றும் இயேசு என்ற பெயர்களின் அர்த்தம் ஒன்றே. இயேசு என்பது எபிரேய பதம், யோசுவா என்பது அதின் தமிழ் மொழிபெயர்ப்பு. இரண்டு பெயர்களின் அர்த்தம் “கர்த்தரே இரட்சகர்.”

**மூன்றாவது கருத்து - தேசத்தை ஆளுதல்**

**படம்:** தேசத்தை கைபற்றிய பின்னர், அதனை பிரித்து அதில் ஜனங்கள் குடியேற தொடங்கினர். மூன்று கோத்திரத்தினர் (ரூபன், காத், மற்றும் மனாசேயின் ஒரு பகுதியினர்) யோர்தானின் கிழக்கு புறத்தில் குடியேறினர், மற்ற கோத்திரத்தினர் யோர்தானின் மேற்கு பகுதியில் குடி புகுந்தனர். ட இஸ்ரவேலின் வரலாற்றில் இது ஒரு பிரகாசமான காலம்.

இறுதியாக, தன் மரணத்திற்கு முன் யோசுவா ஜனங்கள் எல்லோரையும் அழைத்து அவர்கள் கர்த்தருக்கு பயந்து அவரை சேவிக்குமாறு உற்சாகப்படுத்தினான். கர்த்தருக்கு முன் உத்தமமாய் வாழும்படி அறியுறுத்தினான். தங்கள் பாவம் மற்றும் அவிசுவாசத்தினால் மாண்டு போன தங்கள் பிதாக்களுக்கு நேர்ந்த முடிவை நினைவுகூரும்படி கூறினான்.

கவணிக்கப்பட வேண்டிய காரியம்: மோசே தன் மரணத்திற்கு முன் யோசுவாவோடு நேரம் செலவழித்து அவனை சீஷனாக்கினான். மோசேயின் மரணத்திற்கு பின் தலைமை பொறுப்பு வகிக்க யோசுவா ஆயத்தமாக இருந்தான்.

சுவிஷேச தொடர்பு: மத்தேயு 28:16-20 - இயேசு கிறிஸ்துவின் வாழ்விலும், அவர் 12 நபர்களை சிஷராக்கி, தான் பிதாவிடம் திரும்பிய பின்னர் தன் ஊழியத்தை அவர்கள் தொடரும்படி அவர்களுக்கு பயிற்சியளித்தார்.

ஆனால் யோசுவா தன் மரணத்திற்கு பின்னர் தன் பணியை தொடர இளம் தலைமுறையை ஆயத்தம் செய்ததாக தெரியவில்லை, அவனுக்கு பின் தலைமை பொறுபெற்க எவரும் ஆயத்தமாக இல்லை.

**நான்காம் கருத்து - நியாதிபதிகளின் சுழற்சி**

வாக்களிக்கப்பட்ட தேசத்தை சுதந்தரித்தது இஸ்ரவேலின் வரலாற்றில் பிரகாசமான காலம். அதின் பின் அவர்கள் வரலாற்றில் ஒரு இருண்ட காலம் தோன்றியது. கர்த்தரை அவர்கள் மறந்தனர். தங்கள் பார்வைக்கு பிரியமானதை, ஆனால் கர்த்தரின் பார்வையில் பொல்லப்பானதை செய்தனர்.

அக்காலத்தில், தேவன் நியாதிபதிகளை கொண்டு அவர்களை ஆளுகை செய்தார். அவர்கள் அரசியல் மற்றும் இராணுவ தலைவர்களாக செயல்பட்டனர்.

கானானியரை (தீயவர்களை) முற்றிலும் அழித்தல், அவர்களை திருமணம் செய்யாதிருத்தல் (பரிசுத்தமாய், வேறுப்பட்டவர்களாய் வாழ்தல்), மற்றும் அவர்களின் தெய்வங்களை வழிபடாமல் (கர்த்தருக்கு மேலாக வேறு ஒன்றையும் வைக்காமல்) வாழ தவறி கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தனர் (உபாகமம் 7:1-5), அதினால் தேசம் ஒரு அழிவின் சுழற்சியில் அகப்பட்டது.

**படம்:** நியாதிபதிகளின் சுழற்சி பின்வருமாறு: அடிமைத்தனம் (பிற தேசத்தை சேவித்தல்) - மனம்திரும்புதல் (கர்த்தரிடம் முறையிடுதல்) - மீட்பு (இரட்சிப்பு) - சுதந்திரம் (சமாதானம்).

தேசம் பின்வரும் சுழற்சியில் அகப்பட்டது: கர்த்தருக்கு விரோதமாக ஜனங்கள் பாவம் செய்தல், பின்னர் பிற தேசத்தால் அடிமைகளாக பிடிக்கப்படுதல். அதின் பின் கர்த்தரை நோக்கி மன்றாடுதல், அவர்கள் கூக்குரலைக் கேட்டு தேவன் ஒரு நியாதிபதியின் மூலம் அவர்களை “இரட்சித்தல்.” நியாயதிபதியின் காலத்தில் அவர்கள் செழிப்படைவர், ஆனால் அவரின் மறைவுக்கு பின்னர் மீண்டும் கர்த்தருக்கு விரோதமாக பாவத்தில் ஈடுபடுவர்.

300 முதல் 400 வருடங்களில் ஏழு முறை அவ்வாறு பாவ சுழற்சி உண்டானது.

சுவிஷேச தொடர்பு, அப்போஸ்தலர் 2:38’ன்படி நியாதிபதிகள் காலத்தில் காணப்பட்ட சுழற்சி இயேசு கிறிஸ்துவுக்கு நேராக நடத்தியது. நாம் பாவம் செய்து, அதிலிருந்து மனம்திரும்பி அழும் பொழுது - இயேசு இரட்சித்து, நம்மை விடுவித்து, நமக்கு சமாதானமளிப்பார்.

# ஆசிரியர் கையேடு

**சுதந்தரித்தல்**

அத்தகைய இருண்ட நாட்களிலும் தேவன் தனது அன்பை ரூத் என்ற பெண்மணியை மீட்பதின் மூலம் வெளிப்படுத்தியதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். போவாஸ் என்ற மனிதன் விதவையான தன் உறவினளாகிய ரூத்தை தன் மனைவியாக ஏற்றுக்கொண்டான். அவர் தன் சொந்தத்தில் விதவையான ஒரு பெண்ணை மீட்கும் மனதுடையவராய், மீட்கும் திறனுடையவராய் இருக்க வேண்டும் போவாஸ் அத்தகுதியை பெற்றிருந்தான்.

சுவிஷேச தொடர்பு : ரூத் 4:14 - நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை முன்குறிக்கும் விதம் ரூத் மற்றும் போவாஸ் ஆகியோரின் சரித்திரமுள்ளது. இயேசு கிறிஸ்து தேவனானபடியால் அவரால் நம்மை மீட்க முடிந்தது. அவர் நம்மை மீட்கும் தகுதியுடையவராகவும், மனதுடையவராகவும் காணப்பட்டார்.

ரூத்தின் சரித்திரம் நியாயபதிகளின் காலத்தில் நடைபெற்ற சம்பவமாகும்.

நாம் சுதந்தரித்தல் என்ற பாடத்தின் முடிவுக்கு வந்துவிட்டோம், இப்பொழுது இஸ்ரவேலர் அனைவரும் தங்களுக்கு ஒரு இராஜா வேண்டுமென கூக்குரலிட்டனர்.

பல நூற்றாண்டுகளாக, இஸ்ரவேலருக்கு ஒரு இராஜா இல்லாதிருந்தது. இஸ்ரவேலர் தனக்கு கீழ்படிந்து, தன்னை சேவித்தால், அவர்களுக்கு ஒரு இராஜா தேவைப்படுவதில்லை என தேவன் சீனாய் மலையில் மோசேயிடம் கூறினார். தேவனே அவர்களுக்கு இராஜாவாக இருந்தார். அவரது தீர்க்கதரிசிகள் அவரின் வார்த்தைகளை மக்களுக்கு அறிவிப்பவர்களாகவும், நியாயதிபதிகள் மக்களை யுத்த காலத்தில் சமாதானத்திற்கு நேராக நடத்துபவர்களாகவும் இருந்தனர்.

தங்களுக்கு இராஜா வேண்டுமென இஸ்ரவேலர் கூக்குரலிட்டது பாவம் என சாமுவேல் தீர்க்கதரிசி அறிந்திருந்தான். அவர்களது விண்ணப்பம் அவனுக்கு விசனமாக இருந்தது, எனவே அதினைக்குறித்து அவன் கர்த்தரிடம் விசாரித்தான்.

கர்த்தர் சாமுவேலிடம், “ஜனங்கள் உன்னை தள்ளிவிடவில்லை, மாறாக என்னை தள்ளினர்.” எனக் கூறினார். எனவே சாமுவேல் ஒரு இராஜாவை நியமிக்க ஒப்புக்கொண்டான், இருப்பினும் ஒரு இராஜா அவர்களை எவ்வாறு கடினமாக நடத்துவான் என எச்சரித்தான். ஜனங்களோ தங்களுக்கு ஒரு இராஜா வேண்டுமென மன்றாடினர்.

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும்.

குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும்.

அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து கலந்துரையாடவும்.

# இராஜாக்களுக்கான பாடம்

வரவேற்பு / ஜெபம்

**ஜெபம்**

**படம்:** இராஜாக்கள்

**படம்:** மைய வாக்கியம்: கர்த்தர் ஜனங்களின் விருப்பத்தின்படி அவர்களுக்கு ஒரு இராஜாவை அருளினார், அதின் பின்னர் எழும்பிய பிரச்சனையால் தேசம் இரண்டாக பிரிந்தது.

நான்கு மைய கருத்துக்கள்:

1. சவுல்
2. தாவீது
3. சாலொமோன்
4. பிளவுபட்ட இராஜ்ஜியம்

**முதல் கருத்து - சவுல்**

ஜனங்கள் கர்த்தரின் ஆசீர்வாதத்தை நாடினர், ஆனால் அவரது இராஜகரிகத்தை புறகணித்தனர்.

கி.பி. 1051ல், சாமுவேல் சவுல் என்ற மனிதனை இஸ்ரவேலின் முதல் இராஜாவாக நியமித்தான்.

சவுல் மனிதர்களால் தெரிந்துகொள்ளப்பட்ட இராஜா, அவனைக் குறித்து வேதம் கூறுவது "சவுந்தரியமான வாலிபன், இஸ்ரவேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலும் சவுந்தரியவான் இல்லை" (1 சாமுவேல் 9:2). அவன் இராஜாவைப் போல் தோற்றமுடையவன். மக்கள் அவனது இருதயத்தை பாராமல் அவனது வெளி தோற்றத்தைக் கண்டு அவன் மேல் பிரியம் கொண்டனர். ஆனால் கர்த்தர் முகத்தை அல்ல இருதயத்தை பார்க்கிறவர் என வேதம் கூறுகின்றது (1 சாமுவேல் 16:7).

சவுல் சிறப்பாக தொடங்கினான், தேசத்தை ஒன்றிணைத்து ஸ்திர தன்மையை உருவாக்கினான். பிரிந்திருந்த 12 கோத்திரங்களை ஒன்று திரட்டி ஒன்றுபட்ட இராஜ்ஜியத்தை உருவாக்கினான்.

சவுல் கர்த்தரை முழுமனதுடன் சேவிக்கவில்லை. அவருக்கு முழுமையாக கீழ்படியாததால் அவன் கர்த்தரின் ஒத்தாசையை இழந்தான். அவன் ஆவிக்குரிய காரியங்களை காட்டிலும் உலக காரியங்களின் மீது அதிக பற்று கொண்டான். அதினால் கர்த்தர் வாலிபனான தாவீதை இஸ்ரவேலின் அடுத்த இராவாக அபிஷேகிக்கும்படி சாமுவேலிடம் கூறினார். சவுலுக்கு தெரியாமல் சாமுவேல் தாவீதை இரகசியமாக அபிஷேகம் செய்தான்.

சவுல் தேவனால் நிராகரிக்கப்பட்ட பின்னரும் இராஜாவாக தொடர்ந்தாலும், அவ்வருடங்கள் பின்வரும் இராஜாவை குறித்து வருத்தம், பொறாமை மற்றும் பயத்தினால் நிறைந்திருந்தது. இளம் தாவீதை பிடித்து கொல்ல முயற்சிப்பதில் அதிக நேரம் சவுல் செலவிட்டான். அவனது இறுதி ஆண்டுகள் பரிதாபத்திற்குரியது. தனிப்பட்ட தோல்விகள் மட்டுமின்றி அவனது நிர்வாக பெலவீனத்தால் தேசம் நலிவடைந்தது. அவனது கீழ்படியாமையினால் யுத்தத்தில் தோல்வியடைந்த சவுல் தன் கத்தியின் மீது வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டான்.

சுவிஷேச தொடர்பு: வெளிப்படுத்தல் 19:16; எபேசியர் 1:21-23 - முதல் இராஜாவுக்காக மக்கள் கூக்குரலிட்டு பெற்றுக்கொண்ட சவுல் அவர்களுக்கு ஒரு நல்ல இராஜாவாக இருக்கவில்லை . அவர்கள் பெற்றுக்கொண்ட இராஜாவை, நாம் பெறப்போகும் இராஜாதி இராஜாவுடன் ஒப்பிட்டு பார்க்கவும். கர்த்தாதி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இராஜாவாக தன் சிருஷ்டிப்புகள் அனைத்தையும் ஆளும்படி கர்த்தர் சீக்கிரம் அனுப்புவார்.

# ஆசிரியர் கையேடு
# இராஜாக்கள்

**இரண்டாம் கருத்து - தாவீது**

வாலிபனான தாவீது இஸ்ரவேலின் அடுத்த இராஜாவாக சாமுவேலால் அபிஷேகிக்கப்பட்டான், ஆனால் அபிஷேகம் பெற்ற பின்னர் பல வருடங்கள் தன்னை கொல்ல வந்த சவுலிடமிருந்து தப்பி செல்வதில் அவன் நேரக் செலவழிக்க வேண்டியிருந்தது. அவன் கடந்த சென்ற கடினமான வருடங்களில் தேவன் அவனது விசுவாசத்தை வர்திக்க செய்தார், அப்போது அவன் ஏறெடுத்த சில ஜெபங்களை சங்கீத புஸ்தகத்தில் நாம் வாசிக்க முடியும்.

சவுலின் மறைவுக்கு பின்னர், தாவீது இராஜாவானான் (கி.மு. 1011)

அவன் ஒரு சிறந்த யுத்த வீரனானபடியால் அவனது இராஜ்ஜியம் வளர்ந்து பெருகியது. எப்பிராத்து நதி மட்டும் இஸ்ரவேலின் எல்லைகளை விரிவாக்கினான், எருசலேமை இஸ்ரவேலின் தலைநகராக கட்டினான்.

அவன் ஒரு யுத்த வீரன், இருப்பினும் அவன் தேவனை தன் வாழ்நாள் முழுவதும் ஆழமாக நேசித்ததை வேதத்தில் நாம் காண முடியும். வேதம் தாவீதைக் குறித்து "அவன் தேவனது இருதயத்திற்கு ஏற்ற மனிதன்" என குறிப்பிடுகின்றது.

தாவீது தேவனை நேசிக்கின்றவனாக இருந்தபோதும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தான். திருமணமான ஒரு அழகிய பெண்ணை அவன் கண்டதினால் அவன் வாழ்க்கை ஒரு அபத்தான மாற்றத்தை கண்டது. அவளை அவன் இரகசியமாக சேந்தான். அது ஒருவருக்கு தெரியபோவதில்லை என கருதினான், ஆனால் அவர்களின் உறவினால் அவள் கற்பமுற்றாள். அதனை மறைக்க, அவளது கணவனை யுத்தகளத்தில் தாவீது கொல்ல கட்டளையிட்டான். அதினால் கொடூரமான பின் விளைவுகளை சந்தித்தான். நாத்தான் என்ற தீர்க்கதரிசி தாவீதின் பாவத்தை கண்டித்தான். தனது பாவத்தை உணர்ந்த தாவீது கர்த்தரிடம் சென்று தன்னை மன்னிக்குமாறு கதறினான். கர்த்தர் அவனை மன்னித்து ஏற்றுக்கொண்டார். இருப்பினும் தன் பாவத்தின் கொடிய பின்விளைவுகளை அவன் சந்தித்தான், அவனது பாவத்தினால் உருவான அவனது பிள்ளையை இழந்தான்.

இதின் சுவிஷேச தொடர்பு சங்கீதம் 51 மற்றும் ஏசாய 1:18'ல் காணப்படும். கர்த்தரை நோக்கி தாவீது மனம்திரும்பிய இருதயம் கொண்டான் என்பதினை அதினால் அறியலாம். அவர் பாவங்கள் அனைத்தையும் சுத்திகரித்து நம்மை பனியைப் போல் வெண்மையாக்குவார். இதனை தாவீது முழுமையாக அறியாத போது, தன்னை சுத்திகரிக்கும்படி கர்த்தரிடம் மன்றாடினான். தன் பாவம் மன்னிக்கப்பட அவன் நாடிய இரக்கம், அன்பு, நம்பிக்கை மற்றும் மனதுருக்கும் அனைத்தும் இயேசுவிடம் காண முடியும்.

இது வரை இஸ்ரவேலர் ஆசாரிப்பு கூடாரம் என்றழைக்கப்பட்ட ஒரு சிறிய கூடாரத்தில் தேவனை தொழுது கொண்டனர். கர்த்தர் மீது தீராத பற்றுக் கொண்டதினால், தாவீது அவருக்கென்று நிரந்தரமான ஒரு ஆலயத்தை கட்ட விரும்பினான். அதில் ஆசாரியர்கள் தங்கள் கடமைகளை செய்யவும், மனிதர்கள் தேவனை தொழுது கொள்ளவும், கர்த்தரின் உடன்படிக்கை பெட்டி வைக்கப்படவும் விரும்பினான். உடன்படிக்கை பெட்டி என்பது தங்கத்தால் பூசப்பட்ட ஒரு மரப்பெட்டி. அதனை அனுமதிக்கப்பட்ட நேரத்தில் பிரதான ஆசாரியன் தவிர வேறு ஒருவரும் தொடக்கூடாது. பழைய ஏற்பாட்டில், அது கர்த்தரது பிரசன்னத்தின் அடையாளமாக இருந்தத, அதனை எடுத்து சென்ற இடமெல்லாம் தேவனது வல்லமை வெளிப்பட்டது.

சுவிஷேச தொடர்பு: அப்போஸ்தலர் 2:1-4, 38-39; 1 கொரிந்தியர் 6:19 - இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்தெழுதலுக்கு பின்னர், கர்த்தர் தன் உடன்படிக்கை பெட்டியின் மூலம் தங்கள் மக்கள் மத்தியில் வாசம் செய்வதில்லை. புதிய உடன்படிக்கையின்படி பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குள் வாசம் செய்கின்றார். நாமே தேவனுடைய ஆலயம்.

தாவீது மகிமையான ஒரு தேவாலயம் கட்ட திட்டமிட்டான், ஆனால் கர்த்தர் நாத்தான் தீர்க்கதரிசியின் மூலம் தாவீதின் கைகள் இரத்தகறை படிந்ததினால் அவன் மூலமாக தன் ஆலயம் கட்டப்பட போவதில்லை என கூறினார். சமாதானத்தின் மனிதனாகிய அவனது குமாரனாகிய சாலமோனின் மூலம் தேவனது ஆலயம் கட்டப்படும் என வாக்கருளினார் (1 நாளாகமம் 22:8-9).

தாவீதின் வாழ்வுடன் தொடர்புடைய பல சுவிஷேச தொடர்புகள் உள்ளன. வாசிக்கவும் லூக்கா 3:3-5; ஆதியாகமம் 3:15; மத்தேயு 1:1-17 - முதலில், தேவன் கொஞ்சம் கொஞ்சமாக, வேதம் முழுமையும், இரட்சகரை குறித்த வெளிச்சத்தை அருளினார். முதலில் ஏதேன் தோட்டத்தில்

இரட்சகரைக் குறித்த வாக்கு கொடுக்கப்பட்டது, பின்னர் ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபின் வழியில் (இஸ்ரவேல் மூலம்) பிறப்பார் என வெளிப்படுத்தப்பட்டது. யாக்கோபின் குமாரர்களில் ஒருவனான யூதாவின் கோத்திரத்தில் அவர் தோன்றுவார். பின்னர் அவர் தாவீதின் குடும்பத்தில் பிறந்து இஸ்ரவேலை ஆழுவார் என்பது தெளிவுபடுத்தப்பட்டது. இது இயேசுவை குறித்தது.

தாவீது இஸ்ரவேலை 40 வருடங்கள் அரசாண்டான். இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் பிரதான அடையாளங்களில் ஒருவனாக தாவீது திகழ்ந்தான். தாவீதை தேவன் இராஜாவாக நியமித்த போது தாவீது இஸ்ரவேல் மக்களின் சத்துருக்களை முறியடித்து அவர்களால் பெற முடியாத வெற்றியை அவர்களுக்கு பெற்று தந்தான். அவன் இஸ்ரவேலை "இரட்சித்தான்" அவனது சந்ததியில் தோன்றுபவர் மெய்யான இரட்சகர்.

கர்த்தர் தாவீதின் சந்ததியை உறுதிபடுத்தி, அவனது வம்சத்தில் பிறப்பவர் சாத்தானின் தலையை நசுக்கி (ஆதி. 3:15) தேசங்களை ஆசீர்வதிப்பார் என தாவீதுக்கு வெளிப்படுத்தினார். தாவிதிற்கு அருளப்பட்ட வாக்குதத்தம் இயேசுவில் நிறைவேறியது. அதனை புதிய ஏற்பாடு மத்தேயு 1:1-17ல் தாவீதின் வம்சத்தில் இயேசு பிறந்தார் என உறுதிபடுத்தியுள்ளது.

**மூன்றாம் கருத்து - சாலொமோன்**

தாவீதின் மரணத்திற்கு பின் அவனது மகன் சாலொமோன் இராஜாவானான். அவனது இராஜ்ஜியம் மகிமை நிறைந்தது. அது இஸ்ரவேலின் பொற்காலம் என அழைக்கப்படும். தனது இளம் வயதில் சாலொமோன் கர்த்தரிடம் ஒரு விண்ணப்பம் வைத்தான். தாழ்மையுடன், கர்த்தரின் ஜனத்தை நிர்வாகிக்கும் ஞானத்தை தனக்கு கொடுக்கும்படி கர்த்தரிடம் கேட்டான். அவனது ஜெபம் கர்த்தரை பிரியபடுத்தியது, 1 இராஜாக்கள் 4:29 பின்வருமாறு கூறுகின்றது, "தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார்."

சாலொமோன் எழுதிய நீதிமொழிகள், பிரசங்கி, மற்றும் உன்னதப்பாட்டு ஆகிய புஸ்தகங்கள் மூலம் அவனது ஞானத்தை இன்றும் நம்மால் அறிய முடியும்.

சாலொமோன் தனது ஞானத்தினால் தன் வாழ்நாளில் மிகப்பெரிய வெற்றியுள்ளவனாய் மாறி திரளான ஆஸ்தி மற்றும் செல்வாக்கை பெற்றான். எருசலேம் நகரின் முதல் பரிசுத்த தேவாலயத்தை கட்டி எழுப்பினான். கர்த்தரின் பிரசன்னம் தேவாலயத்தில் காணப்பட்டதால் அது அவரது பிள்ளைகளுக்கு மிகவும் முக்கியமான ஸ்தலமாக திகழ்ந்தது. நமக்கான சுவிஷேச பாலம் ஏசாயா 7:14 மற்றும் யோவான் 1:14'ல் காணப்படுகின்றது: தேவாலயத்தில் காணப்பட்ட கர்த்தரின் பிரசன்னம், இயேசு கிறிஸ்து பூமியில் மனிதனாக அவதரித்த போது அவர் மூலம் மனிதர்கள் மத்தியில் காணப்பட்ட தேவபிரசன்னத்தை முன் குறித்தது.

சாலொமோனின் தன்னிரகற்ற ஞானம் அவனை பாவம் செய்வதிலிருந்து விடுவிக்கவில்லை. தங்கள் இருதயம் கர்த்தரை விட்டு வழிவிலகாதபடி தேவன் தனது பிள்ளைகளை பிற தேசங்களின் பெண்களை மணக்க வேண்டாமென கட்டளையிட்டிருந்தார். அக்கட்டளையை அறிந்திருந்தும், சாலொமோன் அதற்கு கீழ்படியவில்லை. அவனுக்கு 700 மனைவிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்தனர். அவனது மனைவிகள் அவனது இருதயத்தை வழிவிலக செய்தனர்.

சாலொமோனின் இருதயம் அவனது தகப்பனாகிய தாவீதைப் போல் கர்த்தரை முழுமையாக பற்றிக்கொள்ளவில்லை. பிற தெய்வங்களின் பின் மனதை செலுத்தியதினால் தேவன் சாலொமோன் மீது கோபம் கொண்டார், அவனுக்கு பின் அவனது இராஜ்ஜியம் இரண்டாக பிளவுபடுமென கூறினார். அவ்வாறு பிரிந்தாலும் தான் தாவீதிற்கு கொடுத்த வாக்கின் நிமித்தம், இராஜ்ஜியம் இரண்டாக பிரிக்கப்பட்ட பின்னர், ஒரு சிறு கூட்டம் தாவீதின் சந்ததியினர் ஆளும்படி கொடுக்கப்படும் எனக் கூறினார்.

மிகவும் வலிமையாக உருவான சாலொமோனின் இராஜ்ஜியம் பரிதாபமான முடிவை சந்தித்தது.

**நான்காம் கருத்து - பிளவுபட்ட இராஜ்ஜியம்**

சாலொமோனின் மரணத்திற்கு பின் (கி.மு. 931), அவனது குமாரன் ரெகோபோயாம் இஸ்ரவேலின் அடுத்த இராஜாவாக முடி சூடப்பட வேண்டியிருந்தது. ஜனங்கள் அவனிடம் வந்து

அவனது தகப்பன் தங்கள் வைத்த சுமையை குறைக்கும்படி தயவாய் வேண்டிக் கொண்டனர். அவனது தகப்பனை உத்தமமாய் பின்பற்றிய முதியவர்களிடம் அதனைக் குறித்து அவன் ஆலோசனை கேட்டான். அவர்கள் அவனை ஜனங்களுக்கு செவிகொடுக்கும்படி அறிவுறுத்தினர். ஆனால் அவர்களது யோசனையை புறம்தள்ளி, தனது நண்பர்களின் பேச்சை கேட்டு ஜனங்களை கடினமாக நடத்தினான். அவன் தன் தகப்பனைக் காட்டிலும் மேலான சுமையை ஜனங்கள் மீது சுமத்துவேன் எனக் கூறினான்.

**படம்:** அதினால் 10 கோத்திரத்தினர் அவனை இராஜாவாக ஏற்றுக்கொள்ளவில்லை, இஸ்ரவேலின் இராஜ்ஜியம் இரண்டாக பிளவடைந்தது.

பத்து கோத்திரங்களை உள்ளடக்கிய வட இராஜ்ஜியம் இஸ்ரவேல் என்றழைக்கப்பட்டது, யெரோபோயாம் அதின் மேல் இராஜாவானான்.

ரெகோபோயாம் யூதா என்றழைக்கப்பட்ட தென் இராஜ்ஜியத்தின் மீது இராஜாவாக செயல்பட்டான்.

யூதா மற்றும் பென்யமீன் ஆகிய இரண்டு கோத்திரங்கள் யூதா தேசத்திலிருந்தது.

200 ஆண்டுகளுக்கும் மேல், தேசமும் அதின் ஜனமும் இரண்டு இராஜ்ஜியங்களாக பிரிந்திருந்தது.

சுவிஷேச தொடப்பு: மத்தேயு 12:25; யோவான் 18:36; வெளிப்படுத்தல் 21:22 - ஒன்றாக இருந்த இஸ்ரவேல் இராஜ்ஜியம் எதினால் இரண்டாக பிளவுப்பட்டது? மனிதர்களின் பாவத்தினிமித்தம். ஆனால் இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுகையில், பாவமும், வருத்தமும் முற்றிலும் ஒழிக்கப்பட்டு ஒரு இராஜ்ஜியமாக அனைவரும் இன்று திரட்டப்படுவர்.

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து கலந்துரையாடவும்.

**வீட்டுப்பாடம்:** தங்கள் வீட்டிற்கு சென்ற பின்னர் தாங்கள் கற்றுக்கொண்ட பாடங்களை பிறருக்கு போதிக்கும்படி குழுவினரை ஊக்குவிக்கவும்.

# ஆசிரியர் கையேடு
# சிறையிருப்பு

## சிறையிருப்புக்கான பாடம்

வரவேற்பு / ஜெபம்:

**ஜெபம்**

**படம்:** சிறையிருப்பு

**படம்:** மைய வாக்கியம் - தேவன் அநீதியான இராஜாக்களால் நடத்தப்பட்ட இஸ்ரவேல் மற்றும் யூதா தேசங்களை சிறையிருப்பிற்கு அனுப்பியதின் மூலம் அவர்களை நீதியாய் நியாயம்தீர்த்தார்.

நான்கு மைய கருத்துக்கள்:

1. வட இராஜ்ஜியம் (இஸ்ரவேல்)
2. தென் இராஜ்ஜியம் (யூதா)
3. இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள்
4. யூதாவின் தீர்க்கதரிசிகள்

நியாயதிபதிகளின் காலத்திற்கு பின்னர், இஸ்ரவேலர் தங்களுக்கு ஒரு மனிதன் இராஜாவாக வேண்டுமென கேட்டனர். இராஜ்ஜியத்தின் காலத்தில் சவுல், தாவீது, மற்றும் சாலொமோன் ஆகிய மூன்று இராஜாக்களால் ஒவ்வொருவராலும் 40 வருடங்கள் இஸ்ரவேல் ஆளப்பட்டது. சாலொமோனின் மரணத்திற்கு பின் அவனது தேசம், வட இராஜ்ஜியம் (இஸ்ரவேல்) மற்றும் தென் இராஜ்ஜியம் (யூதா) என்று இரண்டு இராஜ்ஜியங்களாக பிரிக்கப்பட்டது.

**முதல் கருத்து - வட இராஜ்ஜியம் (இஸ்ரவேல்)**

வட இராஜ்ஜியம் 20 இராஜாக்களால் ஆளப்பட்டது, ஆனால் அவர்களில் ஒருவர் கூட கர்த்தருக்கு பிரியமாய் நடக்கவில்லை. இஸ்ரவேலர் கர்த்தரிடம் திரும்பும்படி தேவன் அவர்கள் மத்தியில் தீர்க்கதரிசிகளை எழுப்பினார். அவர்கள் கர்த்தருக்கு செவிகொடுத்து மனம்திரும்பாவிட்டால் எதிரிகளால் சிறை பிடிக்கப்படுவர் என தீர்க்கதரிசிகளால் எச்சரிக்கப்பட்டனர், இருப்பினும் அவர்கள் கீழ்படியவில்லை. அவர்கள் மத்தியில் தீர்க்கதரிசனம் உரைத்தவர்களைக் குறித்து நாம் பின்னர் சிந்திப்போம்.

தேவன் தான் தீர்க்கதரிசிகளின் மூலம் எச்சரித்தது போல் அசிரியர்களைக் கொண்டு கி.மு. 722’ல் இஸ்ரவேலை சிறைபிடித்தார்.

அவர்கள் மிகவும் கொடூரனமான முறையில் தங்கள் எதிரிகளை நடத்துவர்.

**படம்:** அசீரியர்கள் வட இராஜ்ஜியமான இஸ்ரவேலை தாக்கினர். இஸ்ரவேல் மக்களை தங்கள் இராஜ்ஜியத்தின் பல இடங்களுக்கு சிதறடிக்க செய்தனர்.

இஸ்ரவேலர் பல இடங்களுக்கு சிதறடிக்கப்பட்டதால் ஒற்றுமை இழந்து புதிய கலாச்சாரங்களை தழுவ தொடங்கினர். தங்கள் எபிரேய முறைமைகளை கைவிட்டு, அந்நிய தெய்வங்களை பின்பற்றினர். அசீரிய வழிபாடுகளில் மூழ்கினர், அதின் பின்னர் வட இராஜ்ஜியம் வரலாற்றில் தன் அடையாளத்தை இழந்து காணாமல் போனது.

அவர்கள் “தொலைந்துபோன பத்து கோத்திரங்கள்” என்றழைக்கப்படுவர்.

சுவிஷேச தொடர்பு: யோவான் 3:16; லூக்கா 19:10 - இழந்துபோனதை தேடவும் இரட்சிக்கவுமே இயேசு கிறிஸ்து உலகிற்கு வந்தார்.

# ஆசிரியர் கையேடு
# சிறையிருப்பு

**இரண்டாம் கருத்து - தென் இராஜ்ஜியம் (யூதா)**

தெற்கு இராஜ்ஜியமான யூதா 20 இராஜாக்களால் ஆளப்பட்டனர். அவர்களில் எட்டு நபர்கள் கர்த்தருக்கு பயந்து அவரது கட்டளைகளை பின்பற்றினர்.

இக்காலக்கட்டத்தில், உலகின் வலிமை வாய்ந்த இராஜ்ஜியத்தை கொண்ட அசீரியர்கள் பாபிலோனியர்களால் முறியடிக்கப்பட்டனர்.

யூதா இராஜ்ஜியம் வட இராஜ்ஜியத்தைக் காட்டிலும் சில காலம் அதிகமாக நிலவினாலும், இறுதியில் தேவனை விட்டு விலகியது. அந்நாட்களில் வட இராஜ்ஜியத்திற்கு நேர்ந்த தண்டனையை யூதாவின் மக்களுக்கு தேவன் தீர்க்கதரிசிகள் மூலம் வெளிப்படுத்தி அவர்களை மனம்திரும்புமாறு மன்றாடினார். அவர்கள் கர்த்தருக்கு செவிகொடாமல் தங்கள் பார்வைக்கு பிரியமானதையே செய்து வந்தனர்.

எனவே, பாபிலோனியர்கள் யூதாவை வீழ்த்தி அவர்களை சிறைபிடித்தனர்.

அவர்கள் மூன்று கட்டங்களாக சிறைபிடிக்கப்பட்டனர்.

**படம்:** முதலில் கி.மு. 605'ம் ஆண்டு யூதாவை சேர்ந்த தலைசிறந்த 10,000 நபர்கள் பாபிலோனுக்கு (தற்கால ஈராக்) சிறைபிடிக்கப்பட்டனர். அது சமயம் இளம் வாலிபர்களான தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகா ஆகியோர் சிறைபிடிக்கப்பட்டனர்.

**படம்:** இரண்டாம் கட்ட சிறையிருப்பு கி.மு. 597'ல் நிகழ்ந்தது. இது சமயம் யூதாவின் செல்வந்தர்களில் பிரதானமானவர்கள், சிறந்த கல்விமான்கள் மற்றும் சிற்பிகள் நாடு கடத்தப்பட்டனர். அவர்களில் ஒருவர் தான் எசேக்கியேல்.

**படம்:** இறுதி கட்ட சிறைபிடிப்பு கி.மு. 586'ல் நிகழ்ந்தது, அது சமயம் நேபுகாத்நேச்சரின் இராணுவத்தினர் எருசலேமில் சாலொமோனால் கட்டப்பட்ட தேவாலயத்தை இடித்து, நகரை கைபற்றி எரித்தனர். எபிரேயர்களின் வரலாற்றில் மிகவும் சோகமான நாளாக அது மாறியது.

சுவிஷேச தொடர்பு: எபிரேயர் 12:6; நீதிமொழிகள் 13:24 - கர்த்தர் தான் நேசிப்பவர்களை திருத்துகிறவர்.

அசீரிய சிறையிருப்பிற்கும், பாபிலோனிய சிறையிருப்பிற்கும் ஒரு பெரிய வித்தியாசமுண்டு. அசீரியர்கள் தாங்கள் சிறைபிடித்த ஜனங்களை (வட இராஜ்ஜியமாகிய இஸ்ரவேல்) பல தேசங்களுக்கு சிதறடிக்க செய்தனர், ஆனால் பாபிலோனியர்கள் தாங்கள் சிறைபிடித்த ஜனங்களை (தென் இராஜ்ஜியமாகிய யூதா) ஒரு இடத்தில் சிறைபிடித்து வைத்தனர். இதினால் பாபிலோனில் சிறையிருந்த எபிரேயர்களில் பலர் ஒரு கூட்டமாக ஒன்றுபட்டு தங்கள் தேவனாகிய கர்த்தரை தொழுது கொண்டு, அவரைப் பின்பற்றினர். தானியேலும், அவனது நண்பர்களும் ஒருவரோடு ஒருவர் இணைந்து, ஒருவரை ஒருவர் தேற்றி சிறையிருப்பிலும் தங்கள் தேவனுக்கு உத்தமமாய் நடந்து கொண்டனர்.

சுவிஷேச தொடர்பு: தானியேல் 1:8; லூக்கா 9:58 - தானியேலின் வாழ்வும் இயேசு கிறிஸ்துவுக்கு நேராக மனிதர்களை நடத்தியது. தானியேல் ஒரு அந்நிய தேசத்திற்கு சென்ற போது தன் தேவனுக்கு உண்மையாக இருந்தான். இராஜாவின் அரண்மனையில் தனக்கு அளிக்கப்பட்ட ஆடம்பரமான உணவு பொருட்களை அவன் விட்டுக்கொடுத்தான். எபிரேயரின் சிறையிருப்பு 70 ஆண்டுகள் நீடித்த பின்னர் எரேமியாவின் வாக்கின்படி அவர்கள் எருசலேமுக்கு நாடு திரும்புவர் என்பதினை தானியேல் விசுவாசித்தப்படியால் தன்னோடிருந்தவர்களை கர்த்தருக்கு உண்மையாய் இருக்கும்படி அவன் உற்சாகப்படுத்தினான்.

அவ்வாறே, இயேசு கிறிஸ்துவும் பூமிக்கு இறங்கி வந்த போதும் தன் பிதாவுக்கு உண்மையுள்ளவராக காணப்பட்டார். தன்னை பின்பற்றியவர்களை இப்பூமியில் கர்த்தருக்கு உண்மையாய் வாழும்படி உற்சாகப்படுத்தினார். கர்த்தருக்கு உண்மையாய் வாழ்பவர்கள் தேவனால் வாக்கருளப்பட்ட பரலோகத்தை சுதந்தரிப்பர் என போதித்தார். இயேசுவும் தானாக முன்வந்து புமியில் அவதரித்து தாழ்மையுள்ளவராக வாழ்ந்தார். அவருக்கு இவ்வுலகில் தலைசாய்க்க இடமில்லாதிருந்தது என லூக்கா 9:58 கூறுகின்றது.

இயேசு கிறிஸ்து தன் உத்தமத்தில் உயர்ந்து நின்றது போல் தானியேலும் வாழ்ந்ததை நாம் கவணிக்க முடியும்.

**மூன்றாம் கருத்து - இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள்**

தீர்க்கதரிசி என்பவன் கர்த்தருடைய தூதனாவன். இஸ்ரவேல் மற்றும் யூதா தேசங்கள் சிறைபிடிக்கப்படுவதற்கு முன்னர் கர்த்தர் தன் தீர்க்கதரிசிகளை அவர்களிடம் அனுப்பினார். அவர்கள் தேவனுடைய நியாயதீர்ப்பினைக் குறித்து மக்களை எச்சரித்து, அவர்கள் தங்கள் பாவத்திலிருந்து மனம்திரும்பினால் நம்பிக்கை உண்டு என்று போதித்தனர். வடக்கு ராஜ்ஜியத்திற்கு தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளை குறித்து சிந்திக்கலாம்.

வட ராஜ்ஜியம் சிறை பிடிக்கப்படுவதற்கு முன் இரண்டு தீர்க்கதரிசிகளை தேவன் அவர்களிடம் அனுப்பினார்.

**படம்:** ஆமோஸ் மற்றும் ஓசியா ஆகிய இருவரும் சிறைப்பிடிப்பிற்கு முன் வாழ்ந்த தீர்க்கதரிசிகள் என்றழைக்கப்படுவர். அவர்கள் இஸ்ரவேல் சிறை பிடிக்கப்படுவதற்கு முன் வாழ்ந்தபடியினால் அவ்வாறு அழைக்கப்படுகின்றனர். வட ராஜ்ஜியத்தினர் தேவனிடம் திரும்பாவிடில் அவர்கள் சிறைபிடிக்கப்படுவர் என அவர்கள் எச்சரித்தனர். அவர்கள் தேவனுக்கு செவி கொடுக்காதபடியினால் சிதறடிக்கப்பட்டனர். அவ்வாறு சிதறடிக்கப்பட்டவர்கள் மீண்டும் தங்கள் தேசத்திற்கு திரும்பவில்லை.

ஓசியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் ஒரு சுவிஷேச பாலத்தை நாம் காணலாம். கொலேசேயர் 1:19-20, ஏசாயா 7:14 ஆகிய வசனங்களை வாசிக்கவும். இஸ்ரவேலர் கர்த்தருக்கு துரோகம் செய்தது போல் ஓசியாவின் மனைவியாகிய கோமேரும் தன் கணவனுக்கு விரோதமாக பாவம் செய்தாள். இயேசு கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல், தேவன் ஓசியாவிடம் அவன் மனைவியை ஏற்றுக்கொள்ளுமாறு கூறினார். வரப்போகிற இரட்சகரான இயேசு கிறிஸ்துவை முன்குறிக்கும் தேவனின் உத்தமமான அன்பின் அடையாளமாக ஓசியாவின் வாழ்க்கை திகழ்ந்தது. இயேசுவின் இரத்தத்தினால் நாம் மீட்கப்பட்டு, குணமாக்கப்பட்டு, மீண்டும் தேவனிடம் சேர்க்கப்படுகின்றோம் என கொலேசேயர் 1:19-20'ல் வாசிக்கின்றோம்.

மேசியாவை குறித்து மேலும் சில செய்திகளை ஏசாயாவில் வாசிக்கின்றோம். அவர் "இம்மானுவேல்" என்றழைக்கப்படுவார், அதின் பொருள் "தேவன் நம்மோடிருக்கிறார்." அவர்களது இரட்சகர் இம்மானுவேலரை அவர்களுடன் இருக்க வருவார் (ஏசாயா 7:14).

**நான்காம் கருத்து - யூதாவின் தீர்க்கதரிசிகள்**

வட ராஜ்ஜியத்தை தேவன் எச்சரித்தது போல், யூதா தேசத்தினருக்கும் தன் கிருபையை வெளிப்படுத்த தீர்க்கதரிசிகளை அனுப்பினார். மனம்திரும்பி, தேவனிடம் திரும்புங்கள் என்ற செய்தியை தீர்க்கதரிசிகள் பிரசங்கித்தனர்.

**படம் :** யூதாவின் சிறைபிடிப்பிற்கு முன் அனுப்பட்ட தீர்க்கதரிசிகள் - யோவேல், ஏசாயா, மீகா, செப்பனியா, ஆபகூக், ஏரேமியா.

யூதா தேசத்தினர் சிறைபிடிக்கப்பட்ட பின்னரும் அவர்களை திடப்படுத்தும்படி தேவன் அந்நிய தேசங்களில் அவர்களுக்கு தீர்க்கதரிசிகளை அனுப்பினர். தீர்க்கதரிசிகள் தேவன் ஒரு நாள் அவர்களை மீண்டும் தங்கள் சொந்த தேசத்திற்கு அழைத்து செல்வார் என கூறினர்.

**படம் :** யூதாவின் சிறைபிடிப்பில் தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள் - புலம்பல் (ஏரேமியாவால் எழுதப்பட்டது), எசேக்கியேல், தானியேல்.

இவர்கள் தேசம் சிறைபிடிக்கப்பட்ட காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தனர்.

சுவிஷேச பாலம்: தீர்க்கதரிசிகள் பாவத்தை குறித்து எச்சரித்தனர், கர்த்தர் பாவத்தை தண்டிப்பார் என கூறினர். பாவம் பரிகரிக்கப்பட்டால் தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள தடைகள் நீக்கப்பட்டு, ஒரு பெரிய நம்பிக்கை பிறக்கின்றது. மனிதகுலத்தின் இரட்சகராக மேசியா தோன்றுவார் என தீர்க்கதரிசிகள் உரைத்தனர். இயேசு கிறிஸ்து உண்மையுள்ளவராக தோன்றி, பிதாவாகிய தேவனுடன் மனிதர்களை ஒப்புரவாக்கினார்.

இச்சிறைபிடிப்பின் சமயத்தில் தானியேல் சிங்கங்கள் இருந்த குகையில் தூக்கி ஏறியப்பட்டார். அவர் தேவனை நோக்கி ஜெபித்த போது தேவன் சிங்கத்தின் வாயை அடைத்து தனது வல்லமையை வெளிப்படுத்தினார்.

# ஆசிரியர் கையேடு
# சிறையிருப்பு

தானியேலின் நண்பர்களான சாத்ராக், மேஷாக், மற்றும் ஆபேத்நேகோ ஆகியோரும் ராஜாவின் பொற்சிலையை வணங்க மறுத்து தேவனை மட்டும் தொழுது கொண்டபடியினால் ஆக்கினி சூலையில் தூக்கி ஏறியப்பட்டனர். அதிலிருந்து கர்த்தர் அவர்களை பாதுகாத்தார். அதினால் கர்த்தரே தேவன் என்று பாபிலோனில் அறியப்பட்டார்.

இஸ்ரவேலை சாராத தேசங்களுக்கு அனுப்பட்ட மூன்று தீர்க்கதரிசிகளை குறித்து வேதாகமம் கூறுகின்றது:

**படம் :** பிற தீர்க்கதரிசிகள்

- ஒபதியா - ஏதோமியருக்கு தீர்க்கதரிசனம் உரைத்தார்
- யோனா மற்றும் நாகூம் - நினிவே மக்களுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தனர் (நினிவே அசிரிய தேசத்தின் தலைநகரம்)

இஸ்ரவேலர் 70 வருடங்கள் சிறைபிடிக்கப்பட்ட பின்னர் கோரேஸ் என்ற இராஜாவினால் விடுவிக்கப்படுவர் என ஏரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தனர்.

அவர்கள் சிறைபிடிக்கப்பட்ட காலத்திலும் தேவனுடைய வார்த்தையை பெற்றுகொள்ளும்படி அவர்களிடம் தேவன் தீர்க்கதரிசிகளை அனுப்பினார்.

இஸ்ரவேலர் பாபிலோனில் சிறைபிடிக்கப்பட்ட பின்னர் பெர்சியர்கள் பாபிலோனை சிறைபிடித்தனர், கோரேஸ் பெர்சியர்களின் இராஜா. கோரேஸ் இஸ்ரவேலரை மீண்டும் எருசலேமுக்கு திரும்ப அனுமதித்தது மட்டுமின்றி அதற்கான செலவுகளையும் கொடுக்க முன்வந்தான்.

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து கலந்துரையாடவும்.

## நாடு திரும்புதலுக்கான பாடம்

வரவேற்பு / ஜெபம் :

**ஜெபம்**

**படம்:** நாடு திரும்புதல்

**படம் :** எபிரேய மனிதர்கள் சிறைபிடிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டனர், சிலர் எருசலேமை மீண்டும் கட்டியெழுப்பும்படி நாடு திரும்பினர், அவர்கள் மேசியா வர காத்திருந்தனர்.

நான்கு மைய கருத்துக்கள்:

1. செரூபாபேல் (ஆலயம்)
2. எஸ்றா (மனிதர்கள்)
3. நெகேமியா (மதிற்சுவர்)
4. இடைப்பட்ட காலம்

தீர்க்கரிசிகள் கூறியது போலவே, பெர்சியாவின் இராஜாவாகிய கோரேஸ் எபிரேயர்களை எருசலேமுக்கு திரும்ப அனுமதித்தான். மூன்று கட்டங்களாக சிறைபிடிக்கப்பட்டது போலவே அவர்கள் மூன்று கட்டங்களாக நாடு திரும்பினர்.

**முதல் கருத்து - செரூபாபேல் (ஆலயம்)**

**படம் :** ஏறக்குறைய கி.மு. 538'ம் ஆண்டில் செரூபாபேல் தலையின் கீழ் சில யூதர்கள் நாடு திரும்பினர். அவருடன் 50,000 யூதர்கள் எருசலேமுக்கு திரும்பினர். எருசலேமுக்கு திரும்பியவுடன் செரூபாபேலின் முதல் பணி தேவாலயத்தை மீண்டும் கட்டி எழுப்புவது. அவர்கள் தேவலாயத்தை மீண்டும் கட்ட தொடங்கிய போது அதற்கு எதிராக எதிர்ப்பு கிளம்பியது, அதினால் 16 வருடங்கள் ஆலயம் கட்டும் பணி நிறுத்தப்பட்டது.

**படம் :** சிறைபிடிப்புக்கு பின்னர் தேவன் இஸ்ரவேலர் ஆலயத்தை கட்டி முடிக்க வேண்டும் என்பதினை வழியுறுத்தும்படி ஆகாய் மற்றும் சகரியா என்ற இரண்டு தீர்க்கதரிசிகளை எழுப்பினார். தேவாலயம் கட்டி முடிக்கப்பட வேண்டியதின் அவசியத்தைக் குறித்து அவர்கள் நினைவுபடுத்தினர். அவர்களது வழிநடத்துதலின்படி செருபாபேலும், அவனோடிருந்த யூதர்களும் ஆலயத்தை கட்டி முடித்தனர்.

கர்த்தரின் பிரசன்னம் தங்கிய ஆலயத்தில் ஒரு சுவிஷேச பாலம் காணப்படும். மனிதர்கள் கர்ததிரின் பிரசன்னத்தை நாடினர், தேவனும் மனிதர்கள் மத்தியில் வாசம் செய்ய விருப்பமாயிருந்தார். இயேசு, மாம்சத்தில் வெளிப்பட்டு மனிதர்களுடன் வாசம் செய்வார் என்பதினை அது முன்குறித்தது (ஏசாயா 7:14; யோவான் 1:14).

**இரண்டாம் கருத்து - எஸ்றா (மனிதர்கள்)**

**படம்:** கி. மு. 458'ல் இரண்டாம் குழுவினர் எஸ்றாவின் தலைமையின் கீழ் நாடு திரும்பினர். எழுபது வருடங்கள் இஸ்ரவேலை விட்டு வெளியே வாழ்ந்தபடியினால் கர்த்தரை எவ்வாறு தொழுது கொள்வது அல்லது ஆலயம் எப்படிபட்டது என்பதினை யூதர்கள் மறந்தனர். ஜனங்களுக்கு ஆவிக்குரிய காரியங்களை கற்பித்து, பலிகள் மற்றும் தொழுகையை குறித்து போதிக்கும் பொறுப்பு எஸ்றாவுக்கு கொடுக்கப்பட்டது. "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" என வேதம் கூறுகின்றது (எஸ்றா 7:10).

ஜனங்களையும், ஆசாரியத்துவத்தையும் அவர் மீட்டார். ஆசாரியர்கள் தேவலாயத்தில் காரியங்களை கவணித்து கொண்டனர்.

# ஆசிரியர் கையேடு
# நாடு திரும்புதல்

சுவிஷேச பாலம்: பழைய ஏற்பாட்டின் பலிகள் அனைத்தும் பரிகார பலியாக செயல்பட்டது. பாவியின் இடத்தில் ஒரு பழுதற்ற விலங்கு பலியிடப்பட்டது. அதுவே பாவமற்ற இயேசு பாவிகளுக்காக மரித்ததை முன்குறித்தது. லேவி. *1:3-5;* ரோமர் *8:1-4.*

**மூன்றாம் கருத்து - நெகேமியா (மதிற்சுவர்)**

*படம்:* கி.மு *445'*ம் ஆண்டு நெகேமியாவின் தலைமையின் கீழ் மூன்றாம் கட்ட நாடு திரும்புதல் நடைபெற்றது. பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டாவின் நாட்களில் நெகேமியா ஒரு முக்கிய பதவி வகித்தான். அது சமயம் எருசலேமின் அலங்கம் கட்டப்படாமல் இருப்பதினையும், அதின் குடியிருப்புகள் கலக்கத்தில் வாழ்ந்ததையும் அவன் அறிந்தான்.

எனவே தன்னை எருசலேமுக்கு சென்று அதின் அலங்கத்தை கட்ட அனுமதிக்குமாறு அவன் ராஜாவிடம் விண்ணப்பித்தான், அவனுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நெகேமியாவின் வருகைக்கு முன்னரே ஆலயம் கட்டப்பட்டு, அதில் எவ்வாறு தொழுதுகொள்ள வேண்டுமென ஜனங்களுக்கு போதிக்கப்பட்டிருந்தது. ஆனால் எருசலேமின் மதிற்சுவர்கள் கட்டப்படவில்லை. நகரத்தின் அலங்கம் அதில் வசித்தவர்களுக்கு பாதுகாப்பினை அளித்தபடியினால் அது கட்டப்படுவது அவசியமானது. அது மட்டுமின்றி அது தேசத்தின் வலிமை மற்றும் கௌவரவமாக இருந்தது. பட்டிணத்திற்குள் வரும் மற்றும் வெளியே செல்பவர்கள் யார் என்று அறிய உதவியது. பொல்லாப்பிலுருந்து தேவ ஜனத்தை அது காத்து, அவர்கள் இருதயத்தை திடப்படுத்தியது.

நெகேமியா நாடு திரும்பிய பின்னர் அலங்கத்தின் பாதிப்புகளை ஆராய்ந்து, அதனை எவ்வாறு கட்டுவது என ஒரு திட்டம் வகுத்தான். அந்த திட்டம் என்னை மிகவும் கவர்ந்தது. அவன் எருசலேமின் மனிதர்களை ஒன்று திரட்டி, அவர்கள் அனைவரும் ஒரு பொதுவான நோக்கத்திற்காக உழைக்கும்படி ஊக்குவித்தான். ஆசாரியர்கள் எருசலேமின் வாசல்களை சரிபார்க்கும்படி நியமிக்கப்பட்டனர், பிறர் மதிற்சுவரின் பல பகுதிகளை சரி செய்யும்படி பொறுப்புகள் கொடுக்கப்பட்டது. தங்கள் வீடுகளுக்கு முன் பழுதடைந்த பகுதிகளை சரிபார்க்கும் பணி ஜனங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டது. அலங்கத்தை கட்ட பல எதிர்ப்புகள் எழும்பிய போதும் ஜனங்களின் ஒன்றுபட்ட உழைப்பினால் 52 நாட்களில் எருசலேமின் மதிற்சுவர் மீண்டும் கட்டி முடிக்கப்பட்டது.

இப்பொழுது ஆலயம் மீண்டும் கட்டப்பட்டு, ஆவிக்குரிய எழுப்புதல் அடைந்து, எருசலேமின் மதிற்சுவர் கட்டி முடிக்கப்பட்டது. தேசம் மீண்டும் கட்டி எழுப்பட்டு, எல்லாம் சீரமைக்கப்பட்ட பின், அவர்கள் மீண்டும் தங்கள் பாவ வழிகளுக்கு செல்ல நீண்ட காலம் செல்லவில்லை.

பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசி மல்கியா. அவன் யூதவின் மக்கள் நாடு திரும்பிய பின்னர் திரும்ப வந்தவர்களுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தான். அவன் மனிதர்களை தேவனிடம் திரும்பும்படி அழைத்தான் *(3:7)*, மேலும் தேவன் அவர்கள் இருதயத்தை தன்னிடம் திருப்புவார் என அறிவித்தான் *(4:6)*. பழைய ஏற்பாட்டின் கடைசி அதிகாரங்களில் தேவன் தன் ஜனங்களிடம் உரைத்தது, "நான் உங்களை சிநேகித்தேன்" *(1:2)* என்றுரைத்தான். இயேசு கிறிஸ்துவின் செய்தியும் இதுவே - நான் உங்களை நேசிக்கிறேன், உங்களை விடுவிப்பேன்.

சுவிஷேச பாலம்: நெகேமியா *13:6, 30-31;* மாற்கு *16:19;* மத்தேயு *28:18-20* - நெகேமியா எருசலேமின் அலங்கத்தை கட்டி முடித்த பின்னர் பெர்சியாவிற்கு திரும்பினான் (நெகேமியா *13:6*). தன் பொறுப்புகளை தொடரும்படி அவன் சிலருக்க கட்டளையிட்டு திரும்பினான் (நெகேமியா *13:30-31*). இயேசுவும் அதனை போன்று பரலோகிற்கு திரும்பினார் (மாற்கு *16:19*), அதற்கு முன் சுவிஷேச ஊழியத்தினை தொடரும்படி தன் சிஷர்களிடம் கட்டளையிட்டார் (மத்தேயு *28:18-20*).

பழைய ஏற்பாடு மல்கியாவின் புஸ்கத்துடன் நிறைவு பெற்றது, அதற்கு 400 ஆண்டுகளுக்கு பின்னர் புதிய ஏற்பாடு தொடங்கியது.

**நான்காம் கருத்து - இடைப்பட்ட காலம்**

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு இரண்டும் இடையே உள்ள இடைவேளை "இடைப்பட்ட காலம்" அல்லது "அமைதியின் காலம்" என்றழைக்கப்படும். அந்நாட்களில் தேவன் தீர்க்கதரிசிகளை அனுப்பாதபடியால் அது அமைதியின் காலம் என்றழைக்கப்படுகின்றது.

# ஆசிரியர் கையேடு
# நாடு திரும்புதல்

இருப்பினும் தேவன் அக்காலத்தில் செயல்பட்டு கொண்டிருந்தார். உலக வரலாற்றிலிருந்து அக்காலத்தில் உலக அரசியல் தலைமையில் மாற்றம் நிகழ்ந்தது என அறியலாம்.

மாவீரன் அலெக்ஸாண்டரின் தலைமையின் கீழ் கிரேக்கர்கள் பெர்சியர்களை வீழ்த்தினர்.

கிரேக்கர்களின் ஆட்சி காலத்தில் மேசியாவின் வருகைக்கான ஆயத்த பணிகள் நடைபெற்றன.

கிரேக்கர்கள் தங்கள் கலாச்சாரத்தை அனைவரும் தழுவ வேண்டுமென அதனை பரப்பினர், கிரேக்க மொழி உலக மொழியாக கற்பிக்கப்பட்டது. அதினால் கிரேக்க ராஜ்ஜியத்திற்கு உட்பட்ட பல தேசத்தை சேர்ந்தவர்கள் ஒரே மொழி பேசக் கூடிய சூழல் உருவானது.

சில காலத்திற்கு பின்னர் ரோமர்கள் கிரேக்கர்களை வீழ்தியதினால் உலக அரசியல் தலைமையில் மீண்டும் மாற்றம் நிகழ்ந்தது.

உலக அரசியல் தலைமை - அசீரியர்கள், பாபிலோன், பெர்சியா, கிரிஸ், மற்றும் ரோமபுரி

உலக தலைமைத்துவத்தை கைபற்றிய ரோமர்களும் தங்களை அறியாமல் மேசியாவின் வருகைக்காக உலகத்தை ஆயத்தப்படுத்தினர். அவர்களின் காலத்தில் சீரான சாலைகள் அமைக்கப்பட்டது, கடல் மார்க்கமான பயணமும் பாதுகாப்பானதாக மாறியது.

அதினால் மேசியா உலகில் தோன்றிய போது அவரது செய்தியை எல்லா மனிதரும் கேட்க கூடிய ஒரு பொதுவான் மொழி, அதனை எடுத்து செல்ல முறையான போக்குவரத்து வசதிகள் உருவானது.

ரோமர்கள் மக்களை மிகவும் கடினமாக நடத்தினர், அந்நாட்களில் பல அரசியல் மற்றும் மத தலைவர்களும் அவ்வாறே மக்களை நடத்தினர்.

அந்நாட்களில் யூதர்களின் அரசியல் தலைவர்களாக மக்கபியர்களும், கிளர்ச்சியாளர்களும் செயல்பட்டனர்.

மத தலைவர்களாக பரிசேயர்களும், சதுசேயர்களும் செயல்பட்டனர். அவர்கள் அவசியமற்ற பல நிபந்தனைகளை மக்கள் மீது திணித்தனர்.

சுவிஷேச பாலம்: மல்கியா 2:13 - அந்நாட்களில் இராணுவ, அரசியல், மற்றும் மத தலைவர்கள் தங்களை அறியாமலே உலகத்தை மேசியாவின் வருகைக்காக ஆயத்தப்படுத்தினர். ஜனங்கள் அவரக்ளால் ஒடுக்கப்பட்டவர்களாக வாக்குதத்தம் செய்யப்பட்ட மேசியாவிற்காக ஏங்கினர். மேசியாவின் வருகையினால் உண்டாகும் விடுதலையின் நம்பிக்கையுடன் பழைய ஏற்பாடு முடிந்தது.

நாம் பழைய ஏற்பாட்டின் முழுமையும் சுருக்கமாக கற்றுக் கொண்டோம்!

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து கலந்துரையாடவும்.

வீட்டிப்பாடம்: குழுவில் உள்ளவர்கள் தங்கள் வீட்டிற்கு சென்ற பின்னர் தாங்கள் கற்றவற்றை பிறருக்கு சொல்லி கொடுக்கும்படி ஊக்குவிக்கவும்.

# ஆசிரியர் கையேடு
# புதிய ஏற்பாடு, ஆறிமுகம்

## கற்றுகொடுக்க உதவும் கருவிகள்

1. உங்கள் கையிலிருக்கும் பாடங்களின் சில பகுதிகள் ஆசிரியரின் சொந்த பிண்ணனியை சார்ந்தவை. நாம் காணும் காணொளிகளை விளக்கும் வண்ணம் இப்பாடங்கள் அமைந்துள்ளன. எனவே ஆசிரியரின் பிண்ணனி சம்பந்தப்பட்ட பகுதிகளை உங்கள் சொந்த அனுபவங்களைக் கொண்டு மாற்ற விரும்பினால் நீங்கள் மாற்றிக் கொள்ளலாம். அவை பாடத்தை மாணவர்கள் புரிந்துக் கொள்ள உதவுவதாக இருக்க வேண்டும்.

2. **அச்சு** எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள், நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களை குறிப்பவை. உதாரணமாக, "**ஜெபம்**" என்று அச்சு எழுத்துக்கள் காணப்பட்டால் நீங்கள் ஜெபிக்க வேண்டும். அச்சு எழுத்துக்களில் "**படம்**" என்று கண்டால் நீங்கள் அடுத்த படத்தினை திருப்ப/ நகர்த்த வேண்டும்.

3. பச்சை எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள் மற்றும் வாக்கியங்கள் மாணவர் கையேட்டிலும் இடம் பெறுபவை.

4. பச்சை எழுத்துகளின் அடியில் கோடுகள் இருந்தால் அவை மாணவர் கையேட்டிலுள்ள கோடிட்ட இடங்களுக்கான பதில்கள்.

5. பச்சை எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை மாணவர்கள் கோடிட்ட இடங்களை நிரப்ப உதவும் வண்ணம், அதில் உள்ளவாறே கூற கவணமாயிருக்கவும். இவ்வாக்கியங்கள் வேதாகம கதைகளை ஒன்றிணைக்க உதவும் மைய வாக்கியங்கள்.

6. சுவிசேஷம் அறிவிக்க உதவும் கருத்துகள் நீள நிறத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இவை ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனமாக, மாதிரியாக, நிழலாக, மற்றும் நிஜமாக எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளார் என்பதினை உணர்த்தும் இன்றியமையா வாக்கியங்கள். மாணவர்கள் தங்கள் கையேட்டிலுள்ள "சுவிசேஷ பாலம்" என்ற இடத்தில் அவ்வேத வசனங்களை குறித்துக் கொள்ளலாம்.

7. ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது ஒரு சுவிசேஷ பாலம் கொடுக்கப்படும். மாணவர்கள் மேலும் பல வசனங்களை அதில் சேர்த்து கொள்ளும் நோக்கத்துடன் அவை கொடுக்கப்பட்டுள்ளன. சுவிசேஷ பாலத்திற்கான மேலும் பல ஆதாரங்கள் ஆசிரியர் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

   பயிற்சிக்கான சில ஆலோசனைகள்:

   1. முதல் காலகட்டத்தின் பகுதியை திறக்கவும். ஒவ்வொரு காலகட்டத்தினை கற்றுக்கொள்ள நான்கு மைய வாக்கியங்கள், 4 மைய கருத்துக்கள், மற்றும் வரைபடம் பயன்படுத்தப்படும்.

   2. சுவிஷேச பாலம் பாடத்தின் மையத்தில் இருக்கும். சுவிஷேசம் என்றால் நல்ல செய்தி - இயேசு கிறீஸ்துவின் வாழ்க்கை, மரணம், உயிர்தெழுதல் மற்றும் பரமேறுதலினால் அவரை விசுவாசிப்பவர்களுக்கு கிடைக்கும் ஜீவன் மற்றும் நித்திய வாழ்வை குறித்த நற்செய்தி. புதிய ஏற்பாடு எவ்வாறு இயேசு கிறிஸ்து நீண்ட காலமாக எதிர்பார்த்த மேசியாவானவர் என்பதை உறுதி படுத்துகின்றது என்பதினை சுவிஷேச பாலத்தில் காணலாம்.
      a. இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் (100 %)
      b. இயேசு கிறிஸ்துவில் அத்தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதை பார்த்த சாட்சிகள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றனர், அவர்கள் அதனை குறித்து பிறருடன் பகிர்ந்து கொண்டனர்.
      c. இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்று கர்த்தர் சாட்சியளித்தார்.
      d. இயேசு கிறிஸ்து தான் தேவகுமாரன் என போதித்தார்.

   3. நாம் எங்கே இருக்கின்றோம்: "இடைப்பட்ட காலம்" என்ற 400 வருடங்களுக்கு முன் பழைய ஏற்பாடு நிறைவு பெற்றது. அவை "அமைதி"யின் காலம் என்றழைக்கப்பட்டாலும் தேவன் அந்நாட்களிலும் மேசியாவிற்காக உலகை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். அக்காலத்தில் யூதர்கள் ஒடுக்கப்பட்டு மேசியாவிற்காக ஆவலோடு காத்திருந்தார்.

## புதிய ஏற்பாட்டின் புஸ்கதங்களுக்கான அறிமுகம்

வரவேற்பு / ஜெபம்

நாம் தொடங்கலாம்!

படம்: புதிய ஏற்பாடு 27 புஸ்தகங்களை கொண்டது.

இந்த 27 புஸ்தகங்கள் 3 வகைப்படும்:
1. படம்: வரலாறு
2. படம்: நிருபங்கள்
3. படம்: தீர்க்கதரிசனம்

படம்: 5 வரலாற்று புஸ்தகங்கள்: மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலர்

முதல் நான்கு வரலாற்று புஸ்தகங்கள் சுவிஷேச நூல்கள் என்றழைக்கப்படும். அவற்றில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்வு, ஊழியம், மரணம், உயிர்தெழுதல், மற்றும் பரமேறுதல் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு சுவிஷேசமும் ஒரு விஷேச பரிமானத்துடன் எழுதப்பட்டது.

1. மத்தேயு – யூதர்களுக்கு எழுதப்பட்ட சுவிஷேசம், இயேசு கிறிஸ்துவை வாக்களிக்கப்பட்ட இராஜாவாக சித்தரிக்கின்றது.
2. மாற்கு - ரோமர்களுக்கும்/ யூதரல்லாதவரக்ளுக்கும் எழுதப்பட்டது, இயேசு கிறிஸ்துவை ஒரு ஊழியனாக சித்தரிக்கின்றது.
3. லூக்கா – யூதரல்லாதவரக்ளுக்கு எழுதப்பட்டது, இயேசு கிறிஸ்துவை மனுஷக்குமாரனாக சித்தரிக்கின்றது.
4. யோவான் – பொதுவாக அனைவருக்கும் எழுதப்பட்டது, இயேசு கிறிஸ்துவை தேவனாக சித்தரிக்கின்றது.

ஐந்தாவது வரலாற்று புஸ்தகம்-

5. அப்போஸ்தலர் – லூக்கா இதனை தனது நற்செய்தி நூலின் தொடர்ச்சியாக எழுதினார். அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டதையும், சபையின் தொடகத்தையும், சுவிஷேசத்தின் வளர்ச்சியும் பதிவு செய்துள்ளது.

படம்: 21 நிருபங்கள்/கடிதங்கள்

நிருபங்களில், முதல் 13 (ரோமர் முதல் பிலேமோன் வரை) பவுலின் நிருபங்கள், அவை பவுலால் எழுதப்பட்டவை.அதனை தொடர்ந்து வரும் 8 புஸ்தகங்கள் (எபிரேயர் முதல் யூதா வரை) பொதுவான நிருபங்கள், ஏனெனில் அவை ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது சபைக்கோ எழுதப்படாமல் பொதுவாக அனைத்து விசுவாசிகளுக்கும் எழுதப்பட்டவை.

படம்: 1 தீர்க்கதரிசன புஸ்தகம்: வெளிப்படுத்தல

வேதாகமத்தின் இறுதி புஸ்தகம் வெளிப்படுத்தல் என்ற தீர்க்கதரிசன புஸ்தகம். இயேசு கிறிஸ்து இரண்டாம் முறை உலகிற்கு வரும்பொழுது என்ன நடக்கும் என்பதினை அது போதிக்கின்றது. நற்செய்தி நூல்களில் அவரை பாடுபடும் ஊழியனாக பார்க்கின்றோம், ஆனால் வெளிப்படுத்தல் புஸ்தகத்திலோ ஒரு நீதிபதியாக, யூத்த வீரனாக, ஜெயம்கொள்ளும் இராஜாவாக பார்க்கின்றோம்.

புதிய ஏற்பாட்டினை எளிமையாக கற்றுக்கொள்ள அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை காலத்தின் அடிப்படையில் ஆறு தலைப்புகளாக பிரித்துள்ளேன்.

படம்: புதிய ஏற்பாட்டினை நாம் கற்றுக்கொள்ளவிருக்கும் ஆறு தலைப்புகள் - இயேசுவின் ஆரம்ப நாட்கள், இயேசுவின் ஊழியம், இயேசுவின் வெற்றி, திருச்சபை, நற்செய்தி பரவிப் பெருகுதல், நிகழ்காலம் மற்றும் வருங்காலம்.

## இயேசு கிறிஸ்துவின் ஆரம்ப நாட்களுக்கான பாடம்

வரவேற்பு / ஜெபம்:

**ஜெபம்**

**படம்:** இயேசுவின் ஆரம்ப நாட்கள்

**படம்:** மைய வாக்கியம்: இயேசு, மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன், தீர்க்கதரிசிகள் உரைத்தது போல் அவர் பெத்லகேமில் பிறந்தார்.

நான்கு மைய கருத்துக்கள்:

1. வாக்களிப்பட்ட யோவான் ஸ்நானகனின் பிறப்பு
2. மரியாள் மற்றும் தேவதூதன்
3. இயேசுவின் பிறப்பு
4. தேவாலயத்தில் இயேசு

**முதல் கருத்து - வாக்களிக்கப்பட்ட யோவான் ஸ்நானகனின் பிறப்பு**

பழைய ஏற்பாட்டின் ஏசாயா 10:3'ல் நாம் கவணித்த சுவிஷேச பாலத்தில், கர்த்தர் மேசியாவை அனுப்புவதற்கு முன் ஒரு தூதனை அனுப்புவார் என்ற தீர்க்கதரிசனத்தை குறித்து சிந்தித்தோம், அவன் மேசியாவிற்கு முன் பிறந்து அவருக்காக ஒரு ஜனத்தை ஆயத்தப்படுத்துவான்.

சகரியா என்னும் பெயர் கொண்ட ஒரு ஆசாரியன் இருந்தான். அவன் கர்த்தருக்கு முன்பாக நீதிமானாய் இருந்தான். எருசலேமின் தேவாலயத்தில் கர்த்தரின் சந்நதியில் தூபம் காட்டும்படி அவன் பெயரில் சீட்டு வீழ்ந்தது. அப்பொழுது காபீரியேல் என்னும் தூதன் அவனுக்கு தோன்றி, நீண்ட நாட்களாக பிள்ளை இல்லாதிருந்த அவனுக்கும், அவன் மனைவி எலிசபெத்துக்கும் ஒரு மகன் பிறப்பான எனவும், அவனுக்கு யோவான் என்று பெயரிட வேண்டும் எனவும் கூறினான். யோவானின் வாழ்வு மேசியாவிற்காக வழியை ஆயத்தப்படுத்தும் ஒரு சிறப்பான நோக்கம் கொண்டது. (லூக்கா 1:76-77)

எருசலேமில் அவன் சேவிக்க வேண்டிய நாட்கள் நிறைவு பெற்ற பின்னர், அவன் யூதேயாவின் மலை பகுதியிலிருந்த எபிரோனில் உள்ள தன் இல்லத்திற்கு திரும்பினான். அவன் மனைவி எலிசபெத் கர்ப்பமுற்றாள், அதினால் மிகுந்த மகிழ்ச்சி அவளுக்கு உண்டானது.

எலிசபெத்திற்கு மரியாள் என்ற இளம் பெண் உறவினள் இருந்தாள். மரியாள் கர்த்தரின் கிருபை பெற்றாள்.

**இரண்டாம் கருத்து - மரியாளும், தேவதூதனும்**

நாசரேத் என்னும் ஊரில் இளம் பெண்ணாகிய மரியாள் வாழ்ந்து வந்தாள். அவள் யோசேப்பு என்ற மனிதனுக்கு விவாகத்தில் இணைக்கப்பட நிச்சயிக்கப்பட்டிருந்தாள். அவர்கள் இருவரும் இன்னும் கூடி வரவில்லை. யோசேப்பு, மரியாள் இருவரும் ராஜாவாகிய தாவீதின் சந்நதியில் தோன்றியவர்கள்.

எலிசபெத் ஆறு மாதங்கள் கர்ப்பமுற்றிருந்த போது, காபீரியேல் தூதன் மரியாளுக்கு தோன்றி, அவள் ஒரு குமாரனை பெறுவாள் என்றான். மரியாள் தூதனை நோக்கி, “இது எப்படி யாகும் நான் கன்னியாயிருக்கின்றேனே என்றாள்?”

தேவதூதன் மரியாளை நோக்கி, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவள் மீது நிழலிடும் என்றான். அவள் வயிற்றில் தோன்றும் பரிசுத்தமானவர் தேவகுமாரன் என்றழைக்கப்படுவார். அவருக்கு இயேசு என்று பெயரிட் வேண்டும் என்றான்.

மரியாளின் பதில்: "நான் என் ஆண்டருக்கு அடிமை, உம் வார்த்தை நிறைவேறுவதாக." மரியாள் கர்ப்பமுற்றாள் என யோசேப்பு அறிந்தான். அவன் நீதிமானாயிருந்தபடியினால், அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், அவளை இரகசியமாக தள்ளிவிட மனதாயிருந்தான்.

அவனது சொப்பனத்தில் ஒரு தூதன் தோன்றி, அவன் மனைவி பரிசுத்த ஆவியால் கர்ப்பந்தரித்தப்படியால் அவளை தள்ளிவிடக் கூடாது என கூறினான்.

தேவதூதன் அவளுக்கு பிறக்கும் குமாரனுக்கு இயேசு என்று பெயரிட வேண்டும் என்றான், ஏனெனில் அவர் தனது ஜனங்களின் பாவத்தை நீக்கி அவர்களை இரட்சிப்பான் என்றான். தேவதூதனின் வார்த்தைக்கு யோசேப்பு கீழ்படிந்தான்.

சுவிஷேச பாலம்: ஏரேமியா 23:5; ரோமர் 1:3; ஏசாயா 7:14; யோவான் 1:1-14 - இயேசுவின் சட்டரீதியான தந்தையான யோசேப்பும், அவரது தாய் மரியாளும் தாவீதின் வம்சத்தை சேர்ந்தவர்கள். ஏரேமியா 23:5 வசனத்தின்படி மேசியா தாவீதின் வம்சத்தில் தோன்றுவார்.ரோமர் 1:3 அதனை உறுதி செய்தது.

கன்னியாகிய மரியாளின் வயிற்றில் மேசியா தோன்றுவார் என்று 700 வருடங்களுக்கு முன் தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டது என்பதினை கவனிக்க வேண்டும். "ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள்" என ஏசாயா 7:14'ல் அறிவிக்கப்பட்டது. மேலும் அவர் "இம்மானுவேல்" என்றழைக்கபடுவார் அதின் பொருள் "தேவன் நம்மோடிருக்கிறார்" என்பதும் உரைக்கப்பட்டது. யோவான் 1:1-14, தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு நம் மத்தியில் வாசம் செய்தார் என கூறுகின்றது.

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனம் இயேசுவின் வாழ்வில் நிறைவேறியதை நாம் காண தொடங்குகின்றோம்.

**மூன்றாம் கருத்து - இயேசுவின் பிறப்பு: லூக்கா 2:1-7**

**படம்:** மரியாளும், யோசேப்பும் நாசரேத்தில் வாழ்ந்து வந்தனர் - (வரைபடத்தில் நாசரேத் எங்குள்ளது என காண்பிக்கவும்)

அக்காலத்தில் அகஸ்து ராயன் ரோம சக்ரவர்த்தியாக இருந்தான் என வேதம் கூறுகின்றது, அவன் ரோம சம்ராஜ்ஜியத்தில் வாழும் மக்கள் தொகையை கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்தான். யோசேப்பின் சொந்த இடம் பெத்லகேம், அதற்கு தாவீதின் நகரம் என்ற பெயரும் உண்டு, அதுவே தாவீது இராஜா பிறந்த ஊர்.

**படம்:** யோசேப்பு நிறைமாத கர்பிணியான தன் மனைவியாகிய மரியாளை அழைத்துக் கொண்டு பெத்லகேமுக்கு சென்றான் (நசரேத்திலிருந்து 70 மைல் தொலைவில் பெத்லகேம் இருந்தது), அவர் அங்கு சேர்ந்த போது பிள்ளை பிறக்கும் நேரம் வந்தது.

சுவிஷேச பாலம்: மீகா 5:2, இவர் யூதாவை ஆள பிறப்பவர்.... அவர் புறப்படுதல் அநாதி நாட்களுடையது...... அவர் பெத்லகேமில் பிறப்பார்

அவர்கள் தங்குவதற்கு சத்திரத்தில் இடம் கிடைக்கவில்லை. எனவே அவர்கள் தங்குவதற்கு மாட்டு தொழுவத்தில் ஒரு இடத்தை கண்டு பிடித்தனர், இயேசு கிறிஸ்து மிகவும் தாழ்மையான சூழலில் உலகில் தோன்றினார்.

அவர் மாட்டு தொழுவத்திலே பிறந்தார், விலங்குகள் வாழும் இடத்தில் அவர் உதித்தார். மனிதர்களாகிய நம்முடன் தன்னை அடையாளப்படுத்தி, நமது பாடுகளை புரிந்துகொள்ளும் மனிதனாக பிறந்தார். நம்மை அவர் மிகவும் நேசித்தப்படியால் பிதாவின் அன்பை நமக்கு வெளிப்படுத்த அவ்வாறு உலகில் தோன்றினார்.

சுவிஷேச பாலம்: இதனை 700 வருடங்களுக்கு முன் ஏசாயா தீர்க்கதரிசனமாக முன்னுரைத்தார், ஏசாயா 9:6, "நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்..... அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு எனப்படும்."

மரியாளும், யோசேப்பும் தங்களுக்கு புதிதாக பிறந்த பிள்ளையின் பிறப்பினை தாங்கள் மட்டுமே கொண்டாடுகின்றனர் என நினைத்தனர், ஆனால் தூதர்களும், ஆகாய மண்டலமும் இப்பரிசுத்த பிள்ளையின் பிறப்பினை மகிழ்ச்சியுடன் அறிவித்தனர்.

அக்காலத்தில் தங்கள் மந்தையை காத்து வந்த மேய்ப்பர்கள் மத்தியில் இரவில் ஒரு தூதன் தோன்றி கூறியது: "எல்லா மனிதருக்குமான நற்செய்தி, இன்று தாவிதின் ஊரில் இரட்சகர் பிறந்திருக்கிறார். இதுவே உங்களுக்கு அடையாளம், பிள்ளையை கந்தை துணிகளில் சுற்றி முண்ணனையில் கிடத்திருக்க காண்பீர்கள் என்றான்." (லூக்கா 2:10-12)

தங்களுக்கு அறிவிக்கப்பட்டபடியே மேய்ப்பர்கள் சென்று இயேசுவை கண்டனர். அவர்கள் மகிழ்ந்து தேவனை மகிமைப்படுத்தி, துதித்தனர்.

கிழக்கிலிருந்து வானசாஸ்திரிகள் ஒரு நட்சத்திரத்தை கண்டபடியினால் எருசலேமுக்கு சென்று யூதருக்கு இராஜாவாக பிறந்தவரை கண்டு, வணங்கும்படி வந்தனர். (மத்தேயு 2:16)

எருசலேமிலே அவரை காண சென்றனர். அந்நாட்களில் யூதேயாவின் இராஜாவாக இருந்த ஏரோது அச்செய்தியை கேட்கவுடன் கவலையுற்றான். அவன் சாஸ்திரிகளிடம் அவர்கள் இராஜாவாக பிறந்த குழுந்தையை கண்டு பிடித்த பின்னர், தானும் அப்பிள்ளையை தொழுது கொள்ளும்படி அக்குழந்தை இருக்கும் இடத்தை தனக்கு அறிவிக்குமாறு கூறினான். ஆனால் தன் பதவிக்கு ஆபத்து விளைய கூடுமென இயேசுவை கொல்வதற்காகவே அவன் சாஸ்திரிகளை அவ்வாறு கேட்டுக் கொண்டான்.

சாஸ்திரிகள் பிள்ளையை கண்டு தொழுது கொண்டனர். ஏரோது ராஜாவிடம் செல்ல வேண்டாம் என தேவதூதனால் செப்பனத்தில் எச்சரிக்கப்பட்டு வேறு வழியாக தங்கள் வீட்டிற்கு திரும்பினர்.

சாஸ்திரிகளும், மேய்ப்பர்களும் இயேசுவை தொழுது கொள்ள வந்தனர். இயேசு கிறிஸ்து ஏழை மற்றும் பணக்காரர். உயர்ந்தோர் மற்றும் தாழ்ந்தோர் என அனைவருக்கும் நெருக்கமானவர்.

**படம்:** ஏரோது பிள்ளையை கொலை செய்ய வகை தேடுகின்றான் என யோசேப்பு தேவதூதனால் எச்சரிக்கப்பட்டான், எனவே அவன் மரியாளையும், இயேசுவையும் அழைத்து கொண்டு எகிப்துக்கு சென்றான்.

சாஸ்திரிகள் தன்னிடம் திரும்பவில்லை என்பதினை உணர்ந்த ஏரோது பெத்லகேம் பகுதியிலுள்ள இரண்டு வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் அனைவரையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான்.

எரோது மரித்த பின்னர்,(சுவிஷேச பாலம்) ஓசியா தீர்க்கதரிசனம் உரைத்தப்படி தேவன் தன் குமாரனை எகிப்திலிருந்து அழைத்தார்.

**படம்:** யோசேப்பு, மரியாள் மற்றும் இயேசு நாசரேத்திற்கு திரும்பினர், அங்கு தான் இயேசு வளர்ந்தார்.

இயேசுவின் குழந்தை பருவத்தை குறித்த நமக்கு அதிகம் வெளிப்படுத்தப்படவில்லை, ஆனால் யோசேப்பு தச்சு வேலை செய்தார் எனவும், அவருக்கும், மரியாளுக்கும் பிள்ளைகள் பிறந்தது என்பது மட்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**நான்காம் கருத்து - தேவாலயத்தில் இயேசு: லுக்கா 2:41-52**

இயேசுவுக்கு பன்னிரெண்டு வயது நிரம்பிய பின்னர் அவரை நாம் மீண்டும் காண முடியும்.

**படம்:** ஒவ்வொரு வருடமும், பிற யூத குடும்பங்களை போல் இயேசுவின் குடும்பமும் பஸ்காவை கொண்டாட எருசலேமுக்கு சென்றனர். யாத்திரகமத்தில் கூறப்பட்டுள்ள பஸ்காவை நினைவு கூறும் பண்டிகை தான் பஸ்கா.

முதல் பஸ்கா பல நூறு ஆண்டுகளுக்கு முன் மோசே யூதர்களை எகிப்தின் அடிமைதனத்திலிருந்து விடுவித்தபோது அனுசரிக்கப்பட்டது. பார்வோன் யூதர்களை விடுவிக்க மனதில்லாதிருந்தபடியினால் தேவன் எகிப்தின் மீது வாதைகளை அனுப்பினார். எகிப்தின் மீது 10 வாதைகள் அனுப்பப்பட்டது, கடைசி வாதைக்கு பின்னர் யூதர்களை விடுவிக்க பார்வோன் தீர்மானித்தான். தேவனது கட்டளைக்கு கீழ்படியாத அனைத்து குடும்பங்களையும் மரண தூதன் சந்தித்தான். தேவன் கட்டளையிட்டபடி பழுதற்ற ஆட்டுக்கடாவை கொன்று அதின் இரத்தத்தை தங்கள் வீட்டு வாசலில் பூச வேண்டும், எவரது வீட்டு வாசலில் இரத்தம்

பூசப்பட்டிருந்ததோ அவர்கள் இல்லங்களை மரணதூதன் கடந்து சென்றான். ஆனால் எவரது இல்லங்களின் வாசலில் இரத்தம் பூசப்படவில்லையோ அவர்கள் இல்லத்தில் மரணதூதன் நுழைந்தபடியால் அவர் வீட்டின் முதல் பிள்ளைகள் கொல்லப்பட்டனர்.

சுவிஷேச பாலம்: 1 கொரிந்தியர் 5:7 - பஸ்கா பண்டிகையில் பலி செலுத்தப்பட்ட பழுதற்ற கடா, குற்றமற்ற தேவ ஆட்டியாகிய இயேசுவானவரின் இரத்தம் நம் பாவங்களை நீக்கி, இரட்சிக்கும் என்பதினை முன் குறித்தது.

பன்னிரெண்டு வயது நிரம்பிய சிறுவனாய் இயேசு தன் குடும்பத்துடன் தான் ஒரு நாளில் தேவ ஆட்டுக்குட்டியாக பலியிடப்படவிருக்கும் இடத்திற்கு பஸ்காவை அனுசரிக்க சென்றார்.

அவர்கள் வீட்டிற்கு திரும்ப செல்ல வேண்டிய நேரம் வந்தபோது, அவரது குடும்பத்தினரும், நண்பர்களும் திரும்பி செல்லும் வழியில் இயேசு தங்களோடு வரவில்லை என்பதினை மரியாளும், யோசேப்பும் கவணித்தனர். எனவே அவரை தேடி மீண்டும் எருசலேமுக்கு சென்று அவரை தேவாலயத்தில் கண்டனர்.

அவர்கள் தேவாலயத்தில் இயேசுவை கண்டு, அவரை கடிந்துகொண்ட போது, அவர் “என் பிதாவின் வீட்டில்” நான் இருப்பேன் என்பதினை அறியீர்களா என வினாவினார். தேவாலயம் தேவனின் வீடு, எனவே அதனை தன் பிதாவின் வீடு என்றழைத்தார்.

இயேசு தன் பெற்றோருக்கு கீழ்படிந்தார் என வேதத்தில் வாசிக்கின்றோம், எனவே தன் பெற்றோரோடு அவர் வீட்டிற்கு சென்றார். அவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் (லூக்கா 2:52)

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து கலந்துரையாடவும்.

வீட்டிப்பாடம்: குழுவில் உள்ளவர்கள் தங்கள் வீட்டிற்கு சென்ற பின்னர் தாங்கள் கற்றவற்றை பிறருக்கு சொல்லி கொடுக்கும்படி ஊக்குவிக்கவும்.

## இயேசுவின் கிறிஸ்துவின் ஊழியத்திற்கான பாடம்

வரவேற்பு / ஜெபம்:

**ஜெபம்**

**படம்:** இயேசுவின் ஊழியம்

**படம்:** மைய வாக்கியம்: தனது முப்பாதாவது வயதில் இயேசு உடைந்த உலகிற்கு நம்பிக்கையளிக்கும் தேவனது வாக்குதத்ததை நிறைவேற்றும் தனது ஊழியத்தை தொடங்கினார்.

நான்கு மைய கருத்துக்கள்
1. கர்த்தருக்கு வழியை யோவான் ஆயத்தப்படுத்தினான்
2. இயேசுவின் ஞானஸ்நானம்
3. இயேசுவின் சோதனை
4. போதனைகளும்/ அற்புதங்களும்

**முதல் கருத்து - கர்த்தருக்கு வழியை யோவான் ஆயத்தப்படுத்தினான்: லூக்கா 3:1-18.**

பல வருடங்களுக்கு பிறகு, சகரியா மற்றும் எலிசபெத்திற்கு மகனாக பிறந்த யோவானை நான் காண்கிறோம். அவன் கர்த்தருக்கு வழியை ஆயத்தம் செய்யும்படி பிறந்தவன் என்பதினை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அவன் வளர்ந்த பிறகு மக்களை தங்கள் பாவங்களிலிருந்து மனம்திரும்பி, மேசியாவிற்கு ஆயத்தமாகும்படி ஞானஸ்நானம் பெற அழைத்தான். இயேசுவை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதே அவன் ஊழியம். தங்கள் பாவங்களிலிருந்து மனம்திரும்பி இயேசுவுக்காக தங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்தும்படி அவன் போதித்தான். அவர்கள் மனம்திருப்பினால் இயேசுவினால் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவர் என பிரசங்கித்தான்.

ஆவனது வார்த்தைகளை கேட்ட யூதேயாவின் மக்களில் பலர் அவனிடத்தில் வந்து தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றனர்.

யோவான் மனம்திரும்புதலை குறித்து பிரசங்கித்ததை கேட்க பலர் அவனது சிஷர்களாகினர். அவன் மேசியாவாக இருப்பான் எனவும் கருதினர். ஆனால் அவனோ இயேசுவை மேசியாவாக அடையாளம் காண்பித்து, அவரது பாதரட்சையின் வாரினை அவிழ்பதற்கு கூட அவனுக்கு தகுதியில்லை என கூறினான்.

நான் உங்களுக்கு ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன், ஆனால் பின் வருபவர் என்னிலும் வல்லவர் அவர் பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என கூறினான்.

சுவிஷேச பாலம்: ஏசாயா 40:3 - ஏசாயா 40:3 யோவானில் நிறைவேறியது "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள் என ஒரு சத்தம் கேட்கும்." இயேசு தேவன் என்று உரைத்த சத்தம் யோவான்.

**இரண்டாம் கருத்து - இயேசுவின் ஞானஸ்நானம்: லூக்கா 3:21-22**

**படம்:** இயேசு கிறிஸ்துவுக்கு 30 வயது நிரம்பியபோது யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ் நானம் பெறும்படி சென்றார்.

இயேசு தண்ணிரிலிருந்து கரையேறியபோது, வானம் திறக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவர் ஒரு புறாவை போல் அவர் மீது இறங்கினார் மற்றும் கர்த்தரின் சத்தம் வானத்தில் தோன்றி "இவர் என்னுடைய நேசக்குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்தது.

# ஆசிரியர் கையேடு
# இயேசு கிறிஸ்துவின் ஊழியம்

சுவிஷேச பாலம்: லூக்கா 3:21-22 - தெய்வத்துவத்தின் மூன்று நபர்களையும் முழுமையாக இங்கே காண முடியும்- பிதாவாகியா தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன். லூக்கா 3:21-22, பிதாவானவர் தாமே "இவர் என்னுடைய நேசக்குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என சாட்சியிடுவதை காணலாம்.

சுவிஷேச பாலம்: யோவான் 1:29-34 - நேரில் பார்த்த சாட்சி - இவ்வசனங்களில் யோவான் இயேசுவை பார்த்து, "மெய்யாகவே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி இவர் தாம்" என கூறுவதை காண முடியும். யோவான் எனக்கு பின் வருபவர் என்னிலும் வல்லவர் என வாக்குரைத்த நபர் இவர் தாம். இயேசுவே மேசியா என்று யோவான் உறுதி செய்தான்.

ஞானஸ்நானம் ஒரு நபர் இயேசுவை விசுவாசிக்கிறேன் என்பதின் அடையாளம். ஞானஸ்நானம் ஒரு நபருடன் நம்மை அடையாளப்படுத்துகின்றது. யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தங்களது பாவத்திலிருந்து மனம்திரும்பி, மேசியாவாகிய இயேசுவை நாங்கள் பின்பற்றுவோம் என தங்களை அடையாளப்படுத்தினர். நமது ஞானஸ்நானத்தின் மூலம் நாம் பாவத்திற்கு மரித்து, நீதிக்கு பிழைத்திருக்கிறோம் என அறிவிக்கின்றோம். இயேசு பாவம் அறியாதவர் என்பதினை நாம் அறிவோம் - அவரது ஞானஸ்நானத்தின் மூலம் அவரே கிறிஸ்து என்பது பிதாவாகிய தேவன் மற்று பரிசுத்த ஆவியானவரால் உறுதி செய்யப்பட்டது. யோவானின் ஊழியத்தினையும் அவர் அங்கிகரித்தார். அவர் இரட்சகராக தனது ஊழியத்தினை தொடங்கிவிட்டார் எனபதினையும் அறிவித்தது.

**மூன்றாம் கருத்து - இயேசுவின் சோதனை: லூக்கா 4:1-3**

**படம்:** இயேசு ஞானஸ்நானம் பெற்றவுடன் பரிசுத்த ஆவியானவரால் பிசாசானவனால் சோதிக்கப்பட வனாந்திரத்திற்குள் நடத்தப்பட்டார். வனாந்திரத்தில் அவர் நாற்பது நாட்கள் உணவு ஏதும் உட்கொள்ளாமல் உபவாசமிருந்தார்.

வேதத்தில் 40 என்ற எண் சோதனையுடன் தொடர்புடையது. சில உதாரணங்கள் - நோவாவின் நாட்களில் 40 நாட்கள் இரவும், பகலும் மழை பெய்தது. யோசுவா கானான் தேசத்தை வேவு பார்க்கும்படி சென்ற வேவுகாரர்கள் 40 நாட்கள் சென்றனர். தேவன் கானான் தேசத்தின் இரட்சதர்களை வீழ்த்துவார் என்பதினை விசுவாசியாத இஸ்ரவேலர் 40 வருடங்கள் வனாந்திரத்தில் சுற்றி திரிந்தனர்.

எனவே வனாந்திரத்தில் 40 நாட்கள் செலவழிப்பது குறிப்பிடதக்கது- அது சமயம், நம்மை பிசாசானவன் இன்று சோதிப்பது போலவே இயேசுவை சோதித்தான். (லூக்கா 4)

1. சரீர சுகம் - நாற்பது நாட்கள் உபவாசமிருந்ததினால் இயேசு பசியாயிருந்தார் என்று அறிவோம். அவர் சரீரத்தில் பெலவீனமாயிருந்த போது சாத்தான் அவரை சோதித்தான். அவன் அவரை நோக்கி உரைத்தது, "இந்த கல்லுகளை அப்பமாக மாற்றும்." இயேசு அதற்கு மறுமொழியாக ஒரு வேத வசனத்தை எடுத்து கூறினார் "மனுஷன் அப்பத்தினால் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்பதே.

2. அதிகாரம் மற்றும் வெற்றி - அடுத்ததாக, சாத்தான் தேவாலயத்தின் உச்சத்திற்கு இயேசுவை அழைத்து சென்றான். அவன் அவரை பார்த்து உரைத்தது, "நீர் தேவனுடைய குமாரன் என்றால் மேலிருந்து தாழ குதியும், தேவன் தனது தூதர்களை அனுப்பி உம்மை காப்பார்." அதற்கு இயேசு, "உன் தேவனாகிய கர்த்தரை பரிட்சை பாராதிருப்பாயாக" என்றுரைத்தார்.

3. பொருளாசை / சுயத்தை சார்ந்து கொள்ளுதல் - இறுதியாக, உலகத்தின் இராஜ்ஜியங்கள் மீது அதிகாரத்தை உனக்கு கொடுப்பேன் என கூறினான். இயேசு சிலுவையை சுமக்காமல் இராஜாவாக மாறும்படி அவரை சோதித்தான். என்னை தொழுது கொண்டால் உலகை உனக்கு தருவேன் என்றுரைத்தான். அதற்கு இயேசு: "அப்பாலே போ சாத்தானே! உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரை மாத்திரம் தொழுது கொண்டு அவரையே சேவிப்பாயாக" என்று எழுதியிருக்கின்றதே என்றுரைத்தார். உடனே சாத்தான் அவரை விட்டு விலகினான், தேவதூதர்கள் வந்து அவருக்கு சேவை செய்தனர்.

# ஆசிரியர் கையேடு
# இயேசு கிறிஸ்துவின் ஊழியம்

இயேசுவின் சோதனையின் மூலம் அவர் மனிதர்களாக நம்முடன் தன்னை அடையாளப்படுத்தினார். நாம் சோதனையை எவ்வாறு மேற்கொள்வது என காண்பித்தார். இயேசு வசனமாகிய பட்டயத்தினால் சோதனையை மேற்கொள்ள வேண்டும் என்று நமக்கு போதித்தார் (யோவான் *6:17*). இயேசு வேதவசனத்தை கொண்டு வென்றது போல், நாமும் வெல்ல வேண்டும்.

தேவனது வசனம் கர்த்தரின் அதிகாரமுடையதினால் நம்மால் சோதனையை ஜெயிக்க முடியும். சேதனைகளில் நாம் எவ்வாறு ஜெயம் கொள்ள முடியும் என நமக்கு மாதிரியை இயேசு காண்பித்தார்.

சுவிஷேச பாலம்: ரோமர் *5:12; 1* கொரிந்தியர் *15:21* - ஆதாம் சோதிக்கப்பட்டது போல் இயேசுவும் சோதிக்கப்பட்டார், ஆனால் இயேசு சோதனையில் விழ்ந்து போகவில்லை. எனவே அவர் இரண்டாம் ஆதாம் அல்லது மேலான ஆதாம் என்றழைக்கப்படுகின்றார். மனிதனால் செய்யமுடியாததை அவர் செய்து காட்டினார்.

கர்த்தருக்கு பிரியமான இஸ்ரவேல் வனாந்திரத்தில் சோதிக்கப்பட்டது. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து, கீழ்படியாதிருந்தனர். ஆனால் இயேசு வனாந்திரத்தில் சோதிக்கப்பட்ட போது, சோதனையின் மீது வெற்றி கொண்டார். இஸ்ரவேலர் தங்களுக்கு செய்ய முடியாததை இயேசு அவர்களுக்காக செய்து முடித்தார்.

சாத்தானை முறியடித்த பின்னர் இயேசு தனக்கு சீஷர்களை தெரிந்துகொண்டு அவர்களுடன் கலிலேயாவின் வட பகுதிக்கு சென்றார்.

**நான்காம் கருத்து - போதனைகளும்/ அற்புதங்களும்**

இயேசு ஜனங்களுக்கு உபதேசித்து, அற்புதங்கள் செய்ய தொடங்கினார். "மனிதர்களை ஆதாயப்படுத்தும்படி" மாறும்படி *12* நபர்களை தன்னை பின்பற்றும்படி தெரிந்துகொண்டார். அவர்கள் சீஷர்கள் என்றழைக்கப்படுகின்றனர்.

படம்: *12* சீடர்களின் பெயர்கள்: அந்திரேயா, பர்தொலொமேயு அல்லது நத்தானியேல், செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, யோவான், யூதாஸ், ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு, மத்தேயு அல்லது லேவி, பேதுரு அல்லது சீமோன் பேதுரு, பிலிப்பு, கானானியனாகிய சீமோன், மற்றும் தோமா.

தனது பன்னிரெண்டு சீடர்களுடன் இயேசு அதிக நேரம் செலவழித்தார். தனது வாழ்வை அவர்களுக்குள் ஊற்றினார், பிதாவாகிய தேவனை குறித்த சத்தியத்தை போதித்தார். அவர்கள் வரப்போகின்ற சபையின் அஸ்திபாரமாக இருப்பார்கள் என்பதினை அறிந்திருந்தார்.

**படம்:** இயேசுவும் அவரது சீடர்களும் கலிலேயா, சமாரியா, யூதேயா, மற்றும் பெரெயா என யோர்தானின் கிழக்கு பகுதியில் அமைந்திருந்த இடங்களில் பயணித்து ஊழியம் செய்தனர்.

இயேசுவின் ஊழியம் அவரது *30* வயதில் தொடங்கியது, அவரது *33'*வது வயதில் அவர் சிலுவையில் அறையப்பட்டார். அவர் ஊழியம் செய்த *3* ஆண்டுகளில் இயேசுவும், அவரது சீடர்களும் அப்பகுதிகளை பல முறை சுற்றி வந்தனர். பழைய ஏற்பாட்டின் வேதபகுதிகள் (யூதர்கள் அவற்றை நன்கு அறிந்திருந்தனர்) அல்லது உவமைகளின் மூலம் (புறஜாதியினருக்காக) இயேசு மனிதர்களுக்கு போதித்தார்.

உவமை என்பது ஆவிக்குரிய பாடத்தை போதிக்கும் ஒரு எளிமையான கதை. மக்கள் புரிந்து கொள்ளும் விதம் அவர்கள் அறிந்த காரியங்களை கொண்டு இயேசு போதிதார், உதாரணமாக ஒரு திராட்சதோட்டத்தை பயன்படுத்தி தான் திராட்ச செடி எனவும், விசுவாசிகள் கொடிகள் எனவும் கூறினார். அவரில் நிலைத்திருந்தால் நாம் கனி கொடுக்க முடியும் என கூறினார். திராட்ச கொடி, செடியில் நிலைந்திருந்தால் மாத்திரமே அதற்கு ஜீவனுண்டு என மக்கள் அறிந்திருந்தனர். அதினால் இயேசுவில் நிலைந்திருப்பதின் அவசியத்தை அவர்கள் உணர்ந்தனர். அவர் சென்ற இடங்களில் தேவாலயங்கள், மலையோரம், வீடுகள் என அனைத்து இடங்களிலும் போதித்தார்.

இயேசு அதிகாரத்துடன் போதித்தார், அவரது போதனையின் மூலம் அநேகர் தேவனை அறிந்தனர், அவர் மேசியா என்பதினை உறுதிப்படுத்தும் பல அற்புதங்களையும் அவர் நிகழ்த்தினார்.

# ஆசிரியர் கையேடு
# இயேசு கிறிஸ்துவின் ஊழியம்

அவர் செய்த அற்புதங்கள் அவரது மனதுருக்கம், வல்லமை, மற்றும் அதிகாரத்தை வெளிப்படுத்தி அவர் மேசியா என்பதினை உறுதிப்படுத்திய இயற்கைக்கு அப்பாற்றப்பட்ட நிகழ்வுகள் ஆகும்.

சுவிஷேச பாலம்: ஏசாயா 35:5-6 - இயேசுவின் போதனைகளும், அற்புதங்களும் எப்பொழுதும் பிதாவாகிய தேவனையே மனிதர்களுக்கு வெளிப்படுத்தியது. அவரது அற்புதங்களில், இயேசுவின் மனதுருக்கம், வல்லமை, மற்றும் அதிகாரத்தை காண முடியும், தானே வாக்குதத்தம் செய்யப்பட்ட மேசியா என்பதினை அதினால் அவர் நிருபித்தார். ஏசாயா 35:5-6 வசனங்களை வாசித்து அதில் கூறப்பட்டுள்ள மேசியா அவர் தான் என்று கூறினார். அதில் கூறுப்பட்டுள்ளது, " குருடர்கள் கண்கள் திறக்கப்படும், செவிடர்கள் கேட்பார்கள், முடவர்கள் மான்களை போல் ஓடுவர் மற்றும் மந்த நாவுள்ளவர்கள் ஆனந்த சத்தமிடுவார்கள்"

நாம் சில அற்புதங்கள் மற்றும் அவை நடைபெற்ற இடங்களையும் இப்பொழுது காணலாம் **படம்** - கப்பர் நகூம் எனற இடத்தை முதலில் காணலாம். கலிலேயாவிலுள்ள இப்பட்டிணமே இயேசுவின் ஊழியத்தின் மையமாக திகழ்ந்தது.

**படம்:** அவர் முதல் அற்புதம் கானாவில் நிகழ்ந்தது - கானா என்ற இடத்தை வட்டமிடவும். இயேசுவும் அவரது சீடர்களும் அங்கு ஒரு திருமணத்திற்கு சென்றனர், அங்கு திராட்சரம் குறைவுபட்டது. இயேசு வேலைகாரர்களை ஜாடிகளை நிரப்பும்படி கூறி, அதிலிருந்த தண்ணிரை திராட்சரசமாக மாற்றினார். இயேசுவின் சீடர்களால் கூறப்பட்டுள்ள முதல் அற்புதம் இதுவே, அதனை கண்ட சீடர்கள் தங்கள் விசுவாசத்தில் வளர்ந்தனர். சதாரண ஒன்றை எடுத்து அசாதரணமான ஒன்றாக உருவாக்கினார், அது சதாரண திராட்சரமல்ல, மிகவும் சிறந்த ஒன்று.

**படம்:** பெத்சாயிதா என்ற பட்டிணத்தை சுற்றி ஒரு வட்டமிடவும் (யோவான் 6:5). இயேசு 5000 நபர்களுக்கு போஜனம் அருளியது மிகவும் பிரபலமான ஒரு அற்புதம். அவர் திரளான ஜனங்களை கண்டபோது அவர்கள் மீது மனதுருகி, அவர்கள் வியாதிகளை சுகப்படுத்தினார். அவர்களுக்கு உணவளிக்க வேண்டுமென இயேசு விரும்பியபோது அவரது சீடர்கள் தங்களிடமிருந்த ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு வந்தனர். இயேசு வானத்தை பார்த்து, பிதாவுக்கு நன்றி செலுத்தி, அப்பத்தை ஆசீர்வதித்தார். அதனை கொண்டு 5000 ஆண்கள் (அவர்கள் குடும்பங்கள்) திருப்தியாக போஷிக்கப்பட்ட பின்னவரும் உணவு மிதமிருந்தது. இயேசு வல்லமையுள்ளவரும், நம் தேவைகளைக் காட்டிலும் அதிகமாக நம்மை ஆசீர்வதிப்பவருமாக இருக்கின்றார். மனிதர்கள் மீண்டும் பசியுற்றபோது "நானே ஜீவ அப்பம்" என்றார். நம் ஜீவனின் மெய்யான ஊற்று அவரே. சரீரபிரகாரமாக மனிதர்கள் மீண்டும் மீண்டும் பசியடைவர், ஆனால் அவர்களின் ஆவிக்குரிய பசியை போக்கும் ஜீவ அப்பம் இயேசுவே (யோவான் 6:35).

**படம்:** எரிகோவை சுற்றி ஒரு வட்டமிடவும் (லூக்க 18:35). இயேசு எரிகோவின் அருகே சென்றபோது, கண்பார்வைற்ற ஒருவன் வழியருகே அமர்ந்து பிச்சை கேட்டு கொண்டிருந்தான். வழியருகே நடந்து செல்பவர்களின் சத்தத்தை கேட்ட அவன் அங்கு என்ன நடக்கின்றது என வினாவினான். "நசரேனாகிய இயேசு கடந்து செல்கின்றார்" என அவர்கள் கூறினர். உடனடியாக அவன் "இயேசுவே, தாவீதின் குமாரனே, என்மேல் மனமிறங்கும்" என கதறினான். இயேசு அவனிடம், "நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென கேட்டார்?" அவன் "ஆண்டவரே, நான் பார்வை அடைய வேண்டுமென" கூறினான். உடனடியாக அவன் கண்பார்வையடைந்து, கர்த்தரை துதித்து இயேசுவை பின்பற்றினான். அவன் சரீரபிரகாரமாக மட்டுமல்ல ஆவிக்குரிய பிரகாரமாகவும் கண்பார்வையடைந்தான். இயேசுவின் அற்புதங்கள் மீண்டும், அவரே மெய்யான தேவன் என்றும், அவர் வல்லமையும், மனதுருக்கமும் உள்ளவர் எனவும உறுதி செய்தது.

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து கலந்துரையாடவும்.

வீட்டிப்பாடம்: குழுவில் உள்ளவர்கள் தங்கள் வீட்டிற்கு சென்ற பின்னர் தாங்கள் கற்றவற்றை பிறருக்கு சொல்லி கொடுக்கும்படி ஊக்குவிக்கவும்.

# ஆசிரியர் கையேடு
# இயேசு கிறிஸ்துவின் வெற்றி

## இயேசுவின் வெற்றிக்கான பாடம்

வரவேற்பு/ஜெபம்:

**படம்:** இயேசுவின் வெற்றி

**படம்:** மைய வசனம்: வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேவாட்டு குட்டியாக இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடு எழுந்தார்.

நான்கு மைய கருத்துக்கள்:
1. இறுதி போஜனம்
2. மரணம்/அடக்கம்/உயிர்தெழுதல்
3. உயிர்தெழுந்த பின் காட்சியளித்தல்
4. பரமேறுதல்

வரலாற்று பின்னனி: இயேசுவும் அவரது சீடர்களும் எருசலேமில் இயேசுவின் கடைசி பஸ்காவை கொண்டாட சென்றனர். சுவிஷேச பாலம்: சகரியாவின் புஸ்தகத்தில் 9:9'ல் கூறப்பட்டுள்ளபடி, இயேசு பஸ்காவின் வாரத்தில் ஒரு கழுதை குட்டியின் மீது எருசலேமினுள் பவணியாக நுழைந்தார். அதினால் தன் தாழ்மையை வெளிப்படுத்தினார். இயேசுவின் வெற்றி பவணி என்று இது அழைக்கப்படுகின்றது.

ஏனென்றால் இயேசுவே மேசியா என்று பலரும் விசுவாசித்து அவரை பின் சென்றனர். அதனை கண்ட மத தலைவர்கள் பொறாமைப்பட்டு, பயந்தனர். பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் அவரை கொலை செய்ய வகை தேடினர்.

இயேசுவின் சீடர்களில் ஒருவனான யூதாஸ் பிரதான ஆசாரியர்களிடம் சென்று தனக்கு பணம் கொடுத்தால் இயேசுவை காட்டி கொடுப்பேன் என்று கூறினான். ஒரு அடிமைக்கு கொடுக்கும் விலையான 30 வெள்ளி காசுகளை அவனுக்கு ஆசாரியர்கள் கொடுத்தனர், அது சகரியா 11:12 வசனங்களின் நிறைவேறுதல். இயேசுவை காட்டிக்கொடுக்க அன்று முதல் யூதாஸ் வகை தேடி கொண்டிருந்தான்.

**முதல் கருத்து - கடைசி போஜனம்: லூக்கா 22:14-22**

இயேசு தன் சீடர்களுடன் பஸ்காவின் இரவு உனவு அல்லது கடைசி போஜனத்தை அனுசரிக்க ஆயத்தமானார். பேதுருவையும், யோவானையும் அதனை ஆயத்தம் செய்யும்படி முன்பதாக அனுப்பினார், அவர்கள் மேல் வீட்டில் ஒரு அறையை ஆயத்தம் செய்தனர்.

இயேசுவும் அவரது சீடர்களும் அமர்ந்து, ஒரே போஜனத்தை பகிர்ந்து கொண்டனர். இயேசு அன்றிரவு தன் சீடர்களுடன் இருக்க விரும்பினதால் அப்போஜனம் முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்கள் போஜனம் அருந்திய நேரத்தில், இயேசு அவர்களிடம் கூறியது:
1. அவருக்கு முன்குறிக்கப்பட்ட வேளை வந்தது
2. அவரை தன் சீடர்களில் ஒருவன் காட்டி கொடுப்பான்
3. பிறர் சிதறி ஓடுவர்
4. தன் சீடர்கள் செல்ல முடியாத ஒரு இடத்திற்கு அவர் செல்வார் (யோவன் 13:33), ஆனால் ஒரு நாளில் தன் சீடர்களும் அவ்விடத்திற்கு செல்ல முடியும் (யோவான் 13:36)
5. பேதுருவிடம் அவன் தன்னை மூன்று முறை மறுதலிப்பான் எனக் கூறினார்.
6. அவர்கள் ஒருவரில் ஒருவர் அன்பு கூற வேண்டுமென கட்டளையிட்டார் (யோவான் 13:34)

இயேசு அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தி, அதனை பிட்டு, தனது சீடர்களுக்கு கொடுத்து அவர்களிடம் கூறியது, "இதனை புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கின்றது."

பின்னர் அந்தபடியே பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் செலுத்தி தன் சீடர்களிடம் கொடுத்து, "இதனை பருகவும், இது என்னுடைய இரத்தமாயிருக்கின்றது…. அநேகருடைய பாவத்தை போக்குவதற்காக சிந்தப்படும் என்னுடைய இரத்தம்." (மத்தேயு 26:26-28).

# ஆசிரியர் கையேடு
# இயேசு கிறிஸ்துவின் வெற்றி

சுவிஷேச பாலம்: யோவான் 3:16; யாத்திராகமம் 12:34 - சீக்கிரம் நிறைவேற போகும் ஒன்றின் அடையாளம் அது. இயேசுவின் சரீரம் உடைக்கப்பட்டு, அவரது இரத்தம் சிந்தப்படும். அவர்கள் பருகின இரத்தம் எகிப்தில் இஸ்ரவேலரை காப்பாற்றிய பஸ்காவின் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை நினைவுபடுத்த வேண்டும். புளிப்பில்லாத அப்பம் (புளிப்பு பாவத்தின் அடையாளம்), அது பாவத்தின் அடிமைதனத்திலிருந்து நம்மை விடுவிக்க குற்றமற்ற இயேசுவின் சரீரம் பலியிடப்படுவதை நினைவுபடுத்தியது. அவர் நம்மை நேசித்தபடியால் தாமாகவே நமக்காக தன்னை பலி செலுத்தினார் (யோவான் 3:16). நாம் திருவிருந்தில் பங்குபெறும் போது இப்பலியினை நினைவில் கொள்ள வேண்டும்.

படம்: போஜனம் பண்ணிய பின்னர், இயேசுவும் அவரது சீடர்களும் எருசலேமிலுள்ள ஒலிவ மலையின் அடிவாரத்தில் அமைந்திருந்த கெத்சமேனே என்ற தோட்டத்திற்கு சென்றார். தன் சீடர்களை ஜெபிக்குமாறு கூறி, தன்னுடன் பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானை அழைத்து சென்று ஜெபித்தார். அவர் ஆத்துமாவில் மிகுந்த வேதனை அடைந்தபடியினால் அவரது வேர்வை இரத்த துளிகளாக மாறியது.

இயேசு தன் பிதாவிடம் இந்த வேதனையின் பாத்திரம் தன்னை விட்டு நீங்க கூடுமானால் நீங்கட்டும் - இருப்பினும் பிதாவின் சித்தம் நிறைவேற கடவது என வேண்டிக் கொண்டார்.

இயேசு தன்னை பிதாவின் சித்தத்திற்கு அர்பணித்து தனக்கு பிரியமான ஜனங்களின் நித்திய இரட்சிப்பிற்காக அவருக்கு கீழ்படிந்தார்.

அவர் ஜெபித்த பின்னர், ஒரு கூட்டம் அவரை தேடி வந்தனர், "யாரை தேடுகிறீர்கள்?" என அவர்களிடம் கேட்டார், அவர்கள், "நசரேயனாகிய இயேசுவை" என்றனர், அதற்கு இயேசு, "நான் தான் அவர்" என்றார்.

சுவிஷேச பாலம்: யாத்திராகமம் 3:14 - கிரேக்க மொழியில் "நான் தான்" என்பது "நானே" என்றுள்ளது. இது மோசே கர்த்தரிடம், "உம் நாமம் என்னவென்று எனக்கு கூறும்" என்று வினவியதை நினைவுபடுத்துகின்றது. அதற்கு தேவன் "நானே" என்று தன் நாமத்தை வெளிப்படுத்தினார்.

சுவிஷேச பாலம்: சங்கீதம் 41:9 - யூதாஸ் இயேசுவை நெருங்கி அவருக்கு முத்தம் கொடுத்தான், அவர் தான் இயேசு என்பதினை இராணுவ வீரர்களுக்கு அது உறுதிபடுத்தியது, அதினால் இயேசு தனது சிநேகிதனால் காட்டி கொடுக்கப்படுவார் என சங்கீதம் 41:9'ல் கூறப்பட்டது நிறைவேறியது.

இயேசு இரவில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டார். சீடர்கள் பயத்தினால் சிதறடிக்கப்பட்டனர்.

சகரியா 13:7'ல் கூறப்பட்டது நிறைவேறியது (சுவிஷேச பாலம்).

அன்று இரவில் இயேசு கூறியது போல் பேதுரு மூன்று முறை அவரை மறுதலித்தான்.

இயேசு பிரதான ஆசாரியன் மற்றும் ஆலோசனை சங்கத்திற்கு முன் அழைத்து செல்லப்பட்டார். அவர்கள் இயேசுவின் மீது வீண் பழி சுமத்தினர், ஆனால் அவர் தனது வாயை திறவாமல் அமைதியாக இருந்தார். இறுதியாக பிரதான ஆசாரியன் அவரை நோக்கி, "நீர் தான் கிறிஸ்துவா?" என்று கேட்டான், அதற்கு அவர் "நானே" என்றார். பிரதான ஆசாரியன் அதற்கு இவன் சாதராண மனிதனாக இருந்து கொண்டு தன்னை கர்த்தர் என்று தேவ தூஷணம் உரைத்தான் என பழி சுமத்தினார். ( சுவிஷேச பாலம்: ஏசாயா 53:7; மத்தேயு 26:63)

யூதர்களுக்கு மரண தண்டனை விதிக்க அனுமதி இல்லாததினால், இயேசுவை ரோம அதிகாரிகளிடம் அழைத்து சென்றனர்.

முதலில் பிலாத்து என்ற அதிகாரிக்கு முன்பாகவும், பின்னர் கலிலேயாவை ஆண்டு வந்த ஏரோது ராஜாவிடத்திற்கும் கொண்டு செல்லப்பட்டார்.

சுவிசேஷ பாலம்: லூக்கா 23:4; மத்தேயு 27:12- அதிகாரத்திலிருந்த இரண்டு பேரும் இயேசுவை குற்றவாளியல்ல என விசாரணையின் மூலம் அறிந்துக்கொண்டனர். இயேசுவானவர் பாவமற்ற, பழுதற்ற தேவ ஆட்டுக்குட்டி என்பது இதினால் உறுதியானது.

# ஆசிரியர் கையேடு
# இயேசு கிறிஸ்துவின் வெற்றி

மத்தேயு 27:12 - இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாசும் கூட, அவர் குற்றமற்றவர் என அறிக்கை செய்தான். இயேசுவைக் காட்டிக்கொடுக்க அவன் வாங்கிய 30 வெள்ளிக் காசுகளையும் பிரதான ஆசாரியரிடம் திருப்பி கொடுத்துவிட்டான். அவன் கூறியது, “குற்றமற்ற இரத்தத்தை காட்டிக்கொடுத்ததினால் நான் பாவம் செய்தேன்.”

ஆனால் பிலாத்து ஜனங்களுக்கு பயந்து, அவர்களைப் பிரியப்படுத்த மனதாயிருந்தபடியால் இயேசுவை சிலுவையில் அறையும்படி கட்டளையிட்டான் (மாற்கு 15:1).

**இராண்டாம் கருத்து - மரணம்/ அடக்கம் / உயிர்தெழுதல்**

**படம்:** கொல்கொதா - அதின் பொருள் “மண்டை ஓடுகளின் இடம்”, அது கல்வாரி என்றழைக்கப்படும்.

சிலுவை: இயேசுவை வாரினால் அடித்தார்கள் (அவரை அடிக்க பயன்படுத்திய சாட்டை தோலினால் செய்யப்பட்டது. அது கயிறு போன்றிருக்கும், அதின் முடிவில் இரும்பினால் செய்யப்பட்ட கொக்கி பொருத்தப்பட்டிருக்கும். அவ்வாறு பல சிறிய தோல் கயிறுகள் ஒரு சாட்டையில் இருக்கும். அதினால் ஒரு முறை அடித்தால், உடலில் உள்ள தோல் கிளிக்கப்படும்). அவரை அடித்து, கேலி செய்து, அவர் மீது துப்பினார்கள். பஸ்கா பண்டிகையின் சமயத்தில் ஒரு குற்றவாளியை விடுதலை செய்வது ரோமர்களின் வழக்கம். இயேசுவை விடுதலை செய்ய பிலாத்து விரும்பினான், ஆனால் அங்கே கூடி வந்தவர்களோ அதனை மறுத்து, அவரை சிலுவையில் அறையும்படி கூச்சலிட்டனர்.

இயேசுக்கு பதிலாக பரபாஸ் என்ற கொடிய குற்றவாளியை விடுவிக்கும்படி மக்கள் குரல் எழுப்பியதினால் அவன் விடுவிக்கப்பட்டான்.

சுவிஷேச பாலம்: ஏசாயா 53:5; லூக்கா 23:18-19 - பாவ மனிதர்களுக்காக அவர்களது இடத்தில் மரித்த குற்றமற்ற நபர் இயேசு கிறிஸ்து.

அவரது தலையில் முள்முடி சுமத்தப்பட்டது. தனது சிலுவையை அவரே சுமந்து சென்றார், அவருக்கு சுமக்க பெலனில்லாத போது சிரேனே ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவன் அதனை அவருக்காக சுமந்து சென்றான். அடிமைகளுக்கும், தாழ்த்தப்பட்ட குற்றவாளிக்குமான அதிகபட்ச தண்டனை தான் சிலுவை மரணம்.

கைகளிலும்,கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்டவராய் இயேசு சிலுவையில் அறையப்பட்டார். இயேசு இரண்டு குற்றவாளிகள் மத்தியில் சிலுவையில் அறையப்பட்டார்.

சுவிஷேச பாலம்: 1,000 வருடங்களுக்கு முன்னர், இதனைக் குறித்து தாவீது இராஜா பின்வருமாறு தீர்க்கதரிசனம் உரைத்தார், “பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்”.

இதனை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தினர், அவரை சபித்து, கேலி செய்தனர்.
சுவிஷேச பாலம்: சங்கீதம் 22:6-7 - மேசியாவானவர் மனிதர்களால் புறக்கணிக்கப்பட்டு, உதாசீனப்படுத்தப்படுவார் என தாவீது தனது சங்கீதத்தில் கூறினார்.

தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டது போல சேவகர்கள் அவரது ஆடைகளை குறித்து சீட்டுப் போட்டு எடுத்துக் கொண்டனர் (சுவிஷேச பாலம்: சங்கீதம் 22:18).

மரணம்: பஸ்கா பண்டிகையை கொண்டாட யூதர்கள் குற்றமில்லாத ஆட்டுக்குட்டிகளை பலி செலுத்த ஆயத்தமான தருணத்தில், மெய்யான குற்றமற்ற ஆட்டுக்குட்டியாகிய, இயேசு கிறிஸ்துவானவர், சிலுவையில் அறையப்பட்டவராய், தனது கடைசி வார்த்தைகளை

மொழிந்தார்... அவர் யோவானை நோக்கி தனது தாயாகிய மரியாளைக் கவனித்து கொள்ளுமாறு வேண்டிக்கொண்டார். தன்னை சிலுவையில் அறைந்த நபர்களை மன்னிக்குமாறு அவர்களுக்காக பிதாவிடம் வேண்டிக்கொண்டார்.

சுவிஷேச பாலம்: சங்கீதம் 22:1 - உலகத்தின் பாவம் இயேசுவின் மீது சுமத்தப்பட்ட போது அவர் ஆவிக்குரிய ரீதியில் பிதாவாகிய தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டவராய் உணர்ந்தார். (இதனை சங்கீதம் 22:1’ல் தாவீது தீர்க்கதரிசனமாக உரைத்திருந்தார்). அவர் “என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்?” என கதறினார்.

# ஆசிரியர் கையேடு
# இயேசு கிறிஸ்துவின் வெற்றி

இயேசு கிறிஸ்து ஒன்பதாம் மணி வேளையில் தன் ஜீவனை விட்டார் என வேதம் கூறுகின்றது, அதாவது மதியம் 3 மணியளவு. அது சமயம் ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஆடுகளை பலி செலுத்தி கொண்டிருந்தனர். அப்பொழுது இயேசுவானவர் தன் பிதவை நோக்கி, "எல்லாம் முடிந்தது" எனக் கூறினார்.

பூமி அதிர்ந்து, பாறைகள் பிளந்தது.

சுவிஷேச பாலம்: மத்தேயு 27:54 - நேரில் பார்த்த சாட்சி - இதனை நேரில் கண்ட நூற்றுக்கு அதிபதி மற்றும் சேவகர்கள் பயந்து கூறியது, "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்."

அவர் எதற்காக பூமிக்கு அனுப்பட்டாரோ, அந்த வேளை முடிந்தது. பாவத்திற்கான கூலியை அவர் முழுவதுமாக கட்டி முடித்து விட்டார். பாவமறியாத அவர் நமக்காக பாவமானார். நமது பாவம் சிலுவையில் மரித்தது - இதுவே தேவனது ஆச்சரியமான கிருபை.

அவர் தனது கடைசி மூச்சினை விட்டபோது தேவலாயத்தின் திரைச்சிலை மேலிருந்து கீழாக இரண்டாக கிழிந்தது. அவ்வாறு அது கிழிந்ததினால் இயேசு கிறிஸ்துவின் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தினால் மனிதன் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டு, இனி தேவனிடம் நேரடியாக தொடர்பு கொள்ளும் பாக்கியம் பெற்றான் என உறுதியானது.

அடக்கம்: அரிமத்திய என்ற இடத்தை சேர்ந்த யோசேப்பு என்ற ஒரு செல்வந்தன் இருந்தான். அவன் இயேசுவின் உடலை பெற்றுக்கொண்ண்டு அதனை துணிகளால் சுற்றினான். ஒருவரும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையில் இயேசு கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டார்..

அவர் மூன்று நாட்கள் கல்லறையில் வைக்கப்பட்டார்....

உயிர்தெழுதல்: வாரத்தின் முதலாம் நாள் (ஞாயிறு), பளிமள தைலத்துடன் பெண்கள் கல்லறைக்கு சென்றனர். அவர்கள் கல்லறையில் வைக்கப்பட்டிருந்த கல் புரட்டப்பட்டிருப்பதையும், இயேசுவின் சரீரம் அங்கு இல்லாததையும் கண்டனர். இரண்டு தேவதூதர்கள் அவர்களுக்கு மூன் தோன்றி, இயேசு உயிர்தெழுந்தார்! "அவர் இங்கே இல்லை, அவர் உயிர்தெழுந்தார்" என்றனர்.

தேவதூதன் அவர்களை நோக்கி - சுவிஷேச பாலம்: மத்தேயு 24:7 - அவர் கலிலேயாவிலிருந்த போது உங்களிடம் கூறியதை நினைவுகூருங்கள் "மனுஷக்குமாரன் பாவிகளுடை கையில் ஒப்புவிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாம் உயிர்தெழுவார்." அப்பொழுது அவர்கள் அதனை நினைவுகூர்ந்து, ஒடிச் சென்று பிறரிடம் அறிவித்தனர். இயேசு மரணத்தை வென்றார். அவர் உயிர் எழுந்ததினால், நாமும் நித்தியமாய் வாழுவோம் என்று அறியலாம்.

படம்: வாசிக்கவும் - ஏசாயா 53:2-12 - இயேசுவைக் குறித்த இத்தீர்க்கதரிசனம் பிழையற்றது.

**மூன்றாம் கருத்து - உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் தரிசனங்கள்: லூக்கா 24:13-49**

உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்துவானவர் பதினோறு முறை தரிசனமானர் என வேதம் கூறுகின்றது. உயிர்தெழுந்த அவரது தரிசனங்கள் அவர் மரித்தார், ஆனால் மீண்டும் உயிர்ந்தெழுந்தார் என்பதினை உறுதி செய்தது. அவர் மரியாள், யாக்கோபு, பேதுரு, அப்போஸ்தலர்கள், மற்றும் 500'க்கும் மேற்பட்ட மனிதர்களுக்கு தரிசனமானார். அதில் இரண்டு குறிப்பிட்ட தரிசனங்களைக் குறித்து நாம் சிந்திக்கலாம்.

1. எம்மா ஊருக்கு சென்றுக் கொண்டிருந்த இரண்டு பிரயானிகளுக்கு இயேசு தரிசனமானார். இயேசுவை அடையாளம் காணாத அவர்களிடம், இயேசு நீங்கள் எவற்றைக் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றீர்கள் என கேள்வி எழுப்பினார். அவர்கள் அவரை நோக்கி, "என்ன நடந்தது என உமக்கு தெரியாதா?" "நசரேனாகிய இயேசுவைக் குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். நம்முடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள். அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து மூன்று நாளாகிறது. ஆனாலும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஸ்தீரிகள் அதிகாலமே கல்லறையினிடத்திற்குப்போய், அவருடைய சரீரத்தை காணாமல், திரும்பிவந்து அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம் என்று சொல்லி, எங்களைப் பிரமிக்கபண்ணினார்கள்!"

# ஆசிரியர் கையேடு
# இயேசு கிறிஸ்துவின் வெற்றி

கிறிஸ்துவானவர் இவ்வாறு பாடு அநுபவிக்க வேண்டுமென்று தீர்க்கதரிசிகள் முன்னுரைத்ததை இயேசு அவர்களுக்கு நினைப்பூட்டினார். சுவிஷேச பாலம்: ஏசாயா 7:14; லூக்கா 24:27 - மோசே தொடங்கி, தீர்க்கதரிசிகள் வரை, அவரைக்குறித்து வேதத்தில் கூறப்பட்ட யாவைற்றையும் குறித்து அவர்களிடம் பேசினார். இயேசு தன்னை வாக்குதத்தம் செய்யப்பட்ட மேசியாகவும், அவர்களோடு இருக்கும்படி தோன்றிய இம்மானுவேலராகவும் வெளிப்படுத்தினார். இதனை லூக்கா 24:17-27 வசனங்களில் வாசிக்கலாம்.

2. கடைசியாக நாம் ஒலிவ மலையிலிருந்து இயேசு பரமேறியதை குறித்து சிந்திக்கவிருக்கின்றோம்.

**நான்காம் கருத்து - பரமேறுதல்**

**படம்:** இயேசு கிறிஸ்து தான் கூறியபடி தன் சீடர்களை ஒலிவ மலையில் சந்தித்தார். அப்போஸ்தலர் 1:8'ல் தன் சீடர்களை நோக்கி அவர் பின்வருமாறு கூறினார், "ஆதலால், பரிசுத்தஆவி உங்கள்மேல் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் (வீடு), யூதேயா (தேசம்) முழுவதிலும், சமாரியாவிலும் (அண்டை நாடு), பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் " என்றார். அப்போஸ்தலர் 1:8' வசனத்தை நாம் பலமுறை பின்திரும்பி பார்க்க உள்ளோம். தான் உயிர்தெழுந்த 40 நாட்களுக்கு பின்னர் இயேசு ஒலிவ மலையில் அவர்களுக்கு காட்சியளித்தார்.

சுவிஷேச பாலம்: அப்போஸ்தலர் 1:11 - நேரில்பார்த்த சாட்சி - பரிசுத்த ஆவியானவரின் வலிமையை பெறும்படி அவர்களை இயேசு காத்திருக்க சொன்னார். அதன் பின்னர் அவர்கள் கண்களுக்கு முன்னாக இயேசு கிறிஸ்து ஜீவனுள்ளவராய் பரலோகத்தில் தன் பிதாவின் வலதுபாரிசத்தில் சென்று உட்காரும்படி பரமேறினார்.

அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில் தேவதூதர்கள் அவர்களுக்கு முன் தோன்றி அவர்களை நோக்கி, "இந்த இயேசுவானவர் அப்படி உங்கள் கண்களுக்கு முன்பாகப் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள்.

இயேசு கிறிஸ்து ஒரு நாள் திரும்ப வருவார் என தேவதூதர்கள் உரைத்தனர்.

அவர்கள் இயேசு கிறிஸ்துவை தொழுதுகொண்டு மிகந்த சந்தோஷத்துடன் திரும்பி சென்றனர். அவர்கள் தேவனை துதித்து இயேசு கிறிஸ்து கூறியவரே பரிசுத்த ஆவியானவருக்காக எருசலேமில் காத்திருந்தனர். இயேசு கிறிஸ்துவுக்கு அவர்கள் சாட்சியாக வாழும்படியான வல்லமையை பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு அருளுவார், இன்றும் அவ்வல்லமையை ஆவியானவர் அருள்கின்றார்.

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து கலந்துரையாடவும்.

வகுப்பில் பங்குபெற்றவர்களுடன் நேரடியாக பாடத்தை குறித்து கலந்துரையாடவும்

# ஆசிரியர் கையேடு
# திருச்சபை

## திருச்சபையை குறித்த பாடம்

வரவேற்பு/ஜெபம்:

**ஜெபம்**

*படம்:* சபை

*படம்:* மைய வாக்கியம்: இயேசு வாக்களித்தது போலவே, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு வல்லமையளிக்கும்படியும், சபை இணைக்கும்படியும் இரங்கி வந்தார்.

நான்கு மைய கருத்துக்கள்:

1. பெந்தெகொஸ்தே
2. ஆதி சபை மற்றும் வளர்ச்சி
3. உபத்திரவம் மற்றும் சிதறடிக்கப்படுதல்
4. பேதுருவின் ஊழியம்

**முதல் கருத்து - பெந்தெகொஸ்தே**

கடந்த பாடத்தில் கற்றவற்றை பின்திரும்பி பார்க்கலாம்: இயேசு சிலுவையில் அறையப்பட்டார், மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மற்றும் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். உயிர்தெழுந்த அவர் 40 நாட்கள் பூமியில் மனிதர்களுக்கு காட்சியளித்தார். பிதாவானவரால் வாக்கருளப்பட்ட தெய்வீக ஆலோசகரான பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ள தனது சீடர்களை எருசலேமில் காத்திருக்க சொன்னார். அதன் பின்னர் அவர்கள் கண் முன்னரே பரலோகத்திற்கு ஏறிச் சென்றார்.

இயேசு பரமேறிய பத்து நாட்களுக்கு பின்னர் (அவர் உயிர்தெழுந்து 50 நாட்களுக்கு பின்னர், "ஐம்பது" எனப்படும் பெந்தெகொஸ்தே பண்டிகையின் நாள், அதினால் தான் அதனை பெந்தெகொஸ்தே என்றழைக்கின்றோம்), 120 விசுவாசிகள் கூடியிருந்த வீட்டினுள் பரலோகத்திலிருந்து வந்த பலத்த காற்றின் சத்தம் கேட்டது.

வானத்திலிருந்து அக்கினி மயமான நாவுகள் வந்து அவர்கள் மீது இரங்கியது, அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து அந்நிய பாஷைகளில் பேசினர். பழைய ஏற்பாட்டில் அக்கினி ஸ்தம்பத்தினால் தேவன் தன் பிள்ளைகளை வழிநடத்தினார். புதிய ஏற்பாட்டில், இயேசுவின் வாக்கு நிறைவேற காத்திருந்த அவர்கள் ஒவ்வொருவர் மீதும் அக்கினி வந்திறங்கியது. பரிசுத்த ஆவியானவர் இன்றும் விசுவாசிகளுக்குள் வாசம் செய்து, அவர்களை வழிநடத்துக்கின்றார். வேதம் முழுவதும் அக்கினி கர்த்தரின் பிரசன்னத்தையும், அவரது பரிசுத்தத்தையும் வெளிப்படுத்துகின்றது. (ஏசாயா 10:7; யாத்திராகமம் 3:2; சங்கீதம் 97:3; மல்கியா 3:2)

பழைய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் செயல்பட்டார். அவர் விஷேச பொறுப்புகளை கையாளும்படி சில மனிதர்களை ஆட்கொண்டதை குறித்து நாம் வாசித்தோம். ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் எல்லா விசுவாசிகளையும் ஆட்கொள்ளும்படி இறங்கினார். (யோவான் 14:16-17)

பல தேசங்களிலிருந்து தெய்வ பயமுள்ள யூதர்கள் அன்று எருசலேமில் கூடி வந்திருந்தனர். அவர்கள் தங்கள் சொந்த பாஷைகளில் சீஷர்கள் பேசுவதை கேட்டு ஆச்சரியப்பட்டனர். இயேசுவின் சீடர்கள் இப்பொழுது கர்த்தரின் அதிகாரத்தைக் கொண்டு பேசினர்.

# ஆசிரியர் கையேடு

## திருச்சபை

சுவிஷேச பாலம்: யோவேல் 2:28-32 - 800 வருடங்களுக்கு முன்னர், யோவேல் என்ற தீர்க்கதரிசி பின்வருமாறு கூறினான், "மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன்......... என் ஊழியக்காரர் மீது, ஆண்கள் மற்றும் பெண்கள் மீது, அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன்..."

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரில் வசித்தால், அந்நபர் மறுரூபமடைகின்றார்.

பரிசுத்த ஆவியானவரால் மாற்றப்பட்ட மனிதர்களுக்கு ஒரு உதாரணம் பேதுரு.

கடைசி போஜனத்தின் போது, பேதுரு தன்னை மறுதலிப்பான் என இயேசுக் கூறினார், ஆனால் பேதுருவோ தான் மரித்தாலும் கிறிஸ்துவை மறுதலிப்பதில்லை என பதிலளித்தான். இயேசு அவன் ஒரு முறையல்ல மூன்று முறை தன்னை மறுதலிப்பான் என எச்சரித்தார். முதலில் ஒரு இளம் பெண்ணிடம், தன்னை ஒன்றுமே செய்ய முடியாத ஒரு இளம் பெண்னிடம் பேதுரு இயேசுவை மறுதலித்தது ஆச்சரியமூட்டும் செயல். அவனது ஆவி கர்த்தருக்கு உண்மையாய் இருக்க வேண்டுமென விரும்பியது, அவனது மாம்சமோ பெலவினமுள்ளதாக காணப்பட்டது.

ஆனால் பெந்தெகொஸ்தே நாளிலோ ஒரு பெரிய கூட்டத்திற்கு முன்பாக பேதுரு அவர்களால் கொலை செய்யப்பட்ட இயேசு தான் மேசியா என்று அறிவித்தார்.

அவனது வார்த்தைகளை கேட்டு இருதயத்தில் உணர்வடைந்து, மனம்திரும்பிய 3000 நபர்கள் அந்நாளிலில் ஞானஸ்நானம் பெற்றனர்.

அப்போஸ்தலர் 1:8 வசனத்தை நினைவு கூறவும் - இயேசு கிறிஸ்து தன் சீடர்களை பார்த்து முதலில் அவர்கள் எருசலேமில் தனக்கு சாட்சியாக இருப்பார்கள் எனக் கூறினார். பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் மூலம் இயேசுவை விசுவாசித்த நபர்களை கொண்ட ஆதி சபை எருசலேமில் உருவானது. பேதுருவின் ஊழியத்தைக் குறித்து நாம் பின்னர் சிந்திக்கலாம்.

சுவிஷேசப் பாலம் - பாபேலில் நடைபெற்ற குழப்பம் பெந்தெகொஸ்தே நாளில் சீரமைக்கப்பட்டதாக பல வேத வல்லுனர்கள் கருதுகின்றனர். நோவாவும் அவனது குடும்பமும் பேழையிலிருந்து வெளியேறியப் பின்னர் அவர்களை பூமியெங்கும் பரவிப் பெருகும்படி கர்த்தர் கட்டளையிட்டார். மாறாக அவர்கள் ஒரே இடத்தில் வசித்து, ஒரே பாஷையை பேசினார்கள், அவர்கள் ஒன்றுகூடி கர்த்தரை அவமதிக்கும் வண்ணம் தங்களுக்கு பெயர் உண்டாக்கும்படி ஒரு பெரிய கோபுரத்தை கட்டினர். அவர்கள் பேசுவது ஒருவருக்கு ஒருவர் புரியாத வண்ணம் கர்த்தர் அவர்களை பல பாஷைகளை பேசும்படி செய்தார்.

அதற்கு எதிர்மறையாக, பெந்தெகொஸ்தே நாளில், பல பாஷைகளை பேசுவபவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துக்கொள்ளும்படி கர்த்தர் செய்தார். அவர்கள் இப்பொழுது ஒன்றிணைந்து கர்த்தரின் சபையை கட்டும்படியாக ஒன்றிணைக்கப்பட்டனர். இம்முறை மனிதர்களின் புகழ்ச்சிக்காக அல்ல கர்த்தரின் நாம மகிமைக்காக அது கட்டப்படும். இயேசு கிறிஸ்து இரட்சகராகவும், மீட்பராகவும் இங்கே வெளிப்படுகின்றார்.

3000 மனிதர்களின் இரட்சிப்பிற்கு பின்னர், பேதுரு (பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு) ஆலோசனை சங்கத்தினர் முன் தைரியமாக பேசுவதை காணலாம். யூத மதத்தை சேர்ந்த ஆளுனர்கள், மூப்பர்கள், வேதபாரகர், ஆசாரியர்களை கொண்ட ஆலோசனை சங்கம் அது. இயேசுவின் நாமத்தை குறித்து பேசக்கூடாது என அவர்களை ஆலோசனை சங்கத்தினர் அதட்டினர். ஆனால் பேதுருவோ அவர்களைப் பார்த்து "மனுஷருக்கு கீழ்படிவதைக் காட்டிலும் கர்த்தருக்கு கீழ்படிவது அவசியம்" எனக் கூறினார்.

**நான்காம் கருத்து - ஆதி சபை**

கர்த்தரின் பிள்ளைகள் அனுதினமும் தேவாலயத்தில் கூடி வந்தனர். அவர்கள் தங்கள் உடைமைகளைப் பகிர்ந்து, ஒன்றாக உணவருந்தி, தூய்மையான இருதயமுடையவர்களாக மகிழ்ந்திருந்தனர். கர்த்தரை துதித்து, மனிதர் தயவை அனுபவித்தனர்.

# ஆசிரியர் கையேடு

# திருச்சபை

அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு உபதேசம் பண்ணினர், அவர்கள் ஜெபித்த போது மனிதர்களை கர்த்தருக்கு நேராக நடத்தும்படி பல அற்புதங்கள் நடந்தது. அனுதினமும் இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தர் சபையிலே சேர்த்தார்.

சபை வளர்ந்த போது, விதவைகளை பரமரிக்கும்படி சபையில் தலைவர்கள் தேவைப்பட்டனர். அப்பொழுது 12 சீடர்கள் (யூதாஸ் மரித்த பின்னர், அவனது இடத்தில் மத்தியா என்பவன் தெரிந்துக்கொள்ளப்பட்டதை அப்போஸ்தலர் 1:26'ல் வாசிக்கின்றோம்) "பரிசுத்த ஆவியினாலும், ஞானத்தினாலும் நிரப்பட்ட" சில நபர்களை தலைவர்களாக தெரிந்துக்கொள்ள முடிவு செய்தனர். அப்போஸ்தலர்கள் விசுவாசிகளை ஆவிக்குரிய பாதையில் நடத்துவதில் கவணம் செலுத்தும் விதம், புதிய தலைவர்கள் விதவைகளை பராமரித்தல் மற்றும் பந்திவிசாரித்தல் ஆகிய பணிகளை கவணிப்பர். அதற்காக ஏழு நபர்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டனர். அவர்களில் ஸ்தேவான் என்பவனும் ஒருவன்.

ஸ்தேவான், பரிசுத்த ஆவியிலும், ஞானத்தாலும் நிரப்பப்பட்டு, ஜனங்கள் மத்தியில் பல அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தான். அவனுக்கு எதிராக யூத தலைவர்கள் எழும்பினர். அவன் தேவதூஷணம் உரைத்தான் என குற்றம் சுமத்தப்பட்டு ஆலோசனை சங்கத்தினர் முன் நிறுத்தப்பட்டான்.

அவர்களுக்கு முன்பாக அவன் சத்தியத்தை பேசிய போது, அவனை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதினால் ஸ்தேவான் அவர்களை நோக்கி "வணங்கா கழுத்துள்ளவர்களே... நீதிபரரை நீங்கள் கொலை செய்தீர்கள்" எனக் கூறினான். அதினால் அவன் மீது அவர்கள் எரிச்சலடைந்து, பற்களை கடித்தனர் என வேதம் கூறுகின்றது.

ஆனால் ஸ்தேவான் பரிசுத்த ஆவியால் நிரப்பட்டு, வானத்தை பார்த்து, "வானம் திறந்திருக்கின்றதையும், மனுஷக்குமாரன் பிதாவின் வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் கண்டேன்" என்றான்.

இயேசு கிறிஸ்து பரமேறியப் பின்னர் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் என வாசித்தோம். இப்பொழுது அவர் நிற்பதை இங்கே காண்கின்றோம்.

அவன் அவ்வாறு கூறியவுடன், அவனை நகரத்தை விட்டு வெளியே இழுத்து சென்று, அவன் மீது கல்லெறிந்தனர். ஸ்தேவான் சபையின் முதல் இரத்த சாட்சியாக மரித்தான். சுவிஷேசப் பாலம் - சங்கிதம் 119:86 - நாம் காரணமில்லாமல் உபத்திரவ படுத்தப்படுவோம் என முன்னரே அறிவிக்கப்பட்டது.

இவ்விடத்தில் தான் நாம் முதலாவது சவுல் என்ற மனிதனைக் குறித்து வாசிக்கின்றோம். ஸ்தேவானின் மரண தண்டனையை நிறைவேற்றும் பொறுப்பு சவுலுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவன் அதிகாரமிக்கவனாயிருந்தான். தர்சு பட்டிணத்தை சேர்ந்த சவுல் பக்தி வைராக்கியமுள்ள யூத குடும்பத்தை சேர்ந்தவர். நன்றாக பயின்ற, பக்தி வைராக்கியமுள்ள ஒரு பரிசேயன் அவன்.

புதிதாக தோன்றிய சபையை உபத்திரவப்படுத்துவது நீதியின் செயல் என அவன் கருதினான். அதின் மூலம் அவன் யூத சமுதாயத்தில் போற்றப்பட்டான்.

சவுலைக் குறித்து நாம் சீக்கிரம் பேசவிருக்கின்றோம்.

**மூன்றாம் கருத்து - உபத்திரவம் மற்றும் சிதறடிக்கப்படுதல்**

ஸ்தேவானின் மரணத்தை தொடர்ந்து ஒரு பெரிய உபத்திரவம் உதித்தது.

12 அப்போதலர்கள் தவிர,விசுவாசிகள் அனைவரும் உயிர் பிழைக்கும்படி பல திசைகளுக்கு சிதறடிக்கப்பட்டனர், சிலர் யூதேயாவிற்கும், சிலர் சமாரியாவிற்கும், சிலர் பிற பகுதிகளுக்கும் சென்றனர்.

*படம்: (யூதேயா மற்றும் சமாரியா)*

அவர் சென்ற இடமெங்கும் சுவிஷேசத்தை பிரசங்கித்தனர், விசுவாசிகளின் என்ணிக்கை பெருகியது.

## திருச்சபை

சுவிசேஷப் பாலம்: அப்போஸ்தலர் 1:8; ஆதியாகமம் 50:20 - இயேசு தன் சீடர்களிடம் நீங்கள் எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்று கூறினார். கர்த்தர் இந்த உபவத்திரவத்தின் வழியாக சுவிஷேசம் எல்லா இடத்திலும் பரவும்படி செய்தார். மனிதர்கள் விசுவாசிகளுக்கு தீமை செய்ய முற்பட்டதை, தேவன் நன்மையாக மாற்றினார்.

விசுவாசிகள் எண்ணிக்கையில் பெருகினார்கள் என்று இதனை வேதம் விவரிக்காமல் “கர்த்தருடைய வசனம் வளர்ந்து, பெருகியது” என வேதம் கூறுகின்றது. விசுவாசிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக வளர்ந்தது (அப்போஸ்தலர் 9:3; 12:24).

**நான்காம் கருத்து - பேதுருவின் ஊழியம்: அப்போஸ்தலர் 8:4**

பேதுருவை பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு மாற்றினார் என நாம் ஏற்கனவே வாசித்தோம். தற்போது அவனது ஊழியத்தின் தாக்கத்தை குறித்து சிந்திக்கலாம். இயேசு கிறிஸ்துவின் முதல் சீடர்களில் பேதுருவும் ஒருவன். அவன் சற்று உணர்ச்சிவசப்படக் கூடிய நபராக இருப்பினும் இயேசுவின் மீது மிகவும் பற்றுடையவன். அவனது இயற்பெயர் சீமோன், அவன் ஒரு எளிய மனிதன், கலிலேயாவை சேர்ந்த மீனவன். அவன் இயேசுவை முதல் முறை சந்தித்தபோது இயேசு சீமோன் என்ற அவனது பெயரை பேதுரு என்று மாற்றினார், பேதுரு என்றால் “கற்பாறை” என்று பொருள்படும்.அவன் எப்படிபட்டவன் என்பதினை பொருத்து அவனுக்கு பெயரிடாமல், அவன் எவ்வாறு மாற்றப்படப் போகின்றான் என்பதினை மனதில் கொண்டு இயேசு அவனுக்கு பெயரிட்டார்.

இயேசு கைது செய்யப்பட்ட இரவில், பேதுருவும், பிற சீடர்களும் சிதறடிக்கப்பட்டனர், மத்தேயு 26:34’ல் இயேசு கூறியதைப் போல் பேதுரு மூன்று முறை அவரை மறுதலித்தான். சுவிஷேச பாலம்: இயேசு சகலத்தையும் அறிந்தவர். இருப்பினும் இயேசு உயிர்தெழுந்த பின்னர், பேதுருவை அன்புடன் மீண்டும் சேர்த்துக் கொண்டார். பேதுரு இயேசுவை மூன்று முறை மறுதலித்தலித்ததினால், இயேசு பேதுருவிடம் நீ என்னை நேசிக்கின்றாயா என மூன்று முறை கேட்டார். பேதுரு ஆம் என்று பதிலளித்தவுடன், இயேசு அவனிடம் தன் ஆடுகளை- தன் மக்களை பராமரிக்கும்படி கூறினார். அவனது பெலவீனங்கள் மத்தியிலும் பேதுரு இயேசுவால் சபைக்கு தலைவனாக தெரிந்துகொள்ளப்பட்டான்.

படம்: மத்தேயு 16:18’ல் இயேசு கூறியது, “நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை”

பேதுரு பெந்தெகொஸ்தே தினத்தன்று பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டார், உடனடியாக அவர் எருசலேம் சபையை வழிநடத்த தொடங்கினார்.

உபத்திர நாட்களில் சபை சிதறடிக்கப்பட்ட போது, பேதுரு யூதேயா மற்றும் சமாரியா பகுதிகளில் சிதறப்பட்ட விசுவாசிகளை சந்தித்து அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தும் பொறுப்பிற்கு தலையேற்றார்.

சுவிஷேச பாலம்: அப்போஸ்தலர் 1:8 - இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் அவரது கட்டளைக்கு கீழ்படிந்து சீஷர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து கலந்துரையாடவும்.

விட்டுப்பாடம்: இந்த வாரம் தங்கள் வீடுகளுக்கு சென்ற பின்னர், பிற நபர்களுடன் இக்கருத்துக்களை பிறரிடம் பகிரவும்.

## சுவிசேஷம் பரவிப் பெருகுதலுக்கான பாடம்

வரவேற்பு/ ஜெபம்:

**ஜெபம்**

**படம்:** சுவிஷேசம் பரவிப் பெருகுதல்

**படம்:** மைய வாக்கியம்: திருச்சபை தோற்றுவிக்கப்பட்டவுடன் உலகமெங்கும் சென்று சீஷர்களை உருவாக்குங்கள் என்ற இயேசுவின் கட்டளையை நிறைவேற்ற தொடங்கியது.

நான்கு மைய கருத்துக்கள்
1. பவுலின் வாழ்க்கை/இரட்சிப்பு
2. பவுலின் ஊழியம்
3. பவுலின் முதலாம் மற்றும் இரண்டாம் சுவிஷேச பிரயாணம்
4. பவுலின் மூன்றாம் சுவிஷேசப் பிரயாணம் மற்றும் சிறை பிடிப்பு

**முதலாம் கருத்து - பவுலின் வாழ்க்கை/ இரட்சிப்பு**

சவுல் என்ற மனிதன் மீண்டும் தோன்றுகின்றான், அவன் பின்னாட்களில் பவுல் என்றழைக்கப்படுவான். இவன் ஸ்தேவானின் மரண தண்டனையை நிறைவேற்றும் பொறுப்பினை பெற்றான். பின்னர் சபையை அழிக்கும் நோக்கத்துடன், வீடு வீடாக சென்று விசுவாசிகளை இழுத்து வந்து சிறையில் அடைத்தான்.

சவுல் தேவனின் சீஷர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தான். அவன் பிரதான ஆசாரியனிடம் சென்று தமஸ்குவில் உள்ள சபை மக்களை துன்புறுத்த அனுமதி பெற்றான். அங்கு இயேசுவை விசுவாசிப்பவர்கள் இருந்தால் அவர்களை எருசலேமுக்கு கொண்டுவர திட்டமிட்டான்.

ஆனால் அவன் நினைத்தது போல் காரியங்கள் நடைபெறவில்லை. அப்போஸ்தலர் 9'ம் அதிகாரத்தில் அதனை வாசிக்கலாம். அவன் தமஸ்குவை நெருங்கிய போது, தீடிரென ஒரு வெளிச்சம் வானத்திலிருந்து தோன்றியது அவன் தரையிலே விழுந்தான், அப்பொழுது, "சவுலே, சவுலே, நீ ஏன் என்னை துன்பப்படுத்துகின்றாய்?" என்ற சத்தம் கேட்டது.

சவுல் "ஆண்டவரே, நீர் யார்? என்றான்.

இயேசு அவனை நோக்கி, "நீ துன்பப்படுத்துகின்ற இயேசு நானே. நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ; நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றார்.

அவனோடுகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையும் காணாமல் பேச்சற்று நின்றார்கள். சவுல் எழுந்து நின்று கண்களை திறந்த போது, அவன் பார்வையற்றவனாய் இருந்தான். அவனது கைகளை பிடித்து தமஸ்குவிற்கு அழைத்து சென்றனர். அவன் மூன்று நாட்கள் பார்வையற்று, ஒன்றும் புசியாமலும், குடியாமலும் இருந்தான்.

அனனியா என்ற ஒரு சீடன் தமஸ்குவில் இருந்தான். கர்த்தர் அவனை நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு என்றார் (அப்போஸ்தலர் 9:11-12).

அனனியா கர்த்தரிடம், "ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்."

கர்த்தர் அவனை நோக்கி, "அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்." என்றார். சுவிஷேச பாலம்: ஏசாயா 42:5-9'ல் யூதர்கள் உலக மக்களுக்கு வெளிச்சமாயிருப்பார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

அனனியா அந்த வீட்டிற்கு சென்றான், சவுலின் மீது கைகளை வைத்து ஜெபித்தான், சவுல் குணமடைந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான். அவன் கண்களிலிருந்து மீன்செதிள்கள் போன்றவை விழுந்தன. அவன் எழுந்து ஞானஸ்நானம் பெற்றான். பின்பு அவன் போஜனம் பண்ணி பெலப்பட்டான்.

சவுல் தமஸ்குவிலுள்ள சீஷர்களோடு சில நாட்கள் இருந்து, தாமதமின்றி, இயேசுவே தேவனுடைய குமாரன் என்று ஜெபஆலயங்களிலே பிரசங்கித்தான்.

ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, "இயேசுவை விசுவாசிப்பவர்களை துன்புறுத்தி, கைது செய்ய வந்தவன் இவன் தானா?" என்று கேட்டனர். சவுல் தேவக்கிருபையில் பெலப்பட்டு இயேசுவே தேவனுடைய குமாரன் என்று தமஸ்குவில் வாழ்ந்த யூதர்களுக்கு போதித்து வந்தான்.

இந்த சவுலே புதிய ஏற்பாட்டில் பவுல் என்று அழைக்கப்படுபவன். சவுல் என்பது அவனது பெற்றோர்கள் அவனுக்கு கொடுத்த எபிரேய பெயர். சவுலின் தகப்பன் ரோம குடியுரிமை பெற்றவன், எனவே சவுலும் ரோம குடியுரிமை பெற்றிருந்தான். லத்தீன் மொழியில் அவன் பவுல் என்றழைக்கப்பட்டான். தனது இரட்சிப்பிற்கு பின்னர் அவன் ரோம உலகில் வாழ்ந்தவர்கள் மத்தியில் ஊழியம் செய்தபடியினால் பவுல் என்ற தன் ரோம பெயரை பயன்படுத்தினான். (அப்போஸ்தலர் *16:37, 22:25-28*).

பவுல் குருடனாயிருந்து தீடிரென பார்வை பெற்றதுபோல், நாமும் ஆவிக்குரிய குருடர்களாயிருந்தோம், இப்பொழுதோ கிறிஸ்துவால் மீட்கப்பட்டதால் நம்மால் ஆவிக்குரிய சத்தியங்களை காண முடிகின்றது. புதிய ஏற்பாட்டில் அதிக நிருபங்களை எழுதி, இயேசுவின் நாமத்தை உலகமெங்கும் எடுத்து சென்ற பவுல் இவ்வாறு இரட்சிக்கப்பட்டான்.

**இரண்டாம் கருத்து - பவுலின் ஊழியம்**

இதுவரை விசுவாசிகள் நற்செய்தியை (இயேசு கிறிஸ்துவின் கதையை) எருசலேம், யூதேயா மற்றும் சமாரியா பகுதிகளில் பேதுருவின் தலைமையின் கீழ் யூதர்களுக்கு மட்டும் பிரசங்கித்து வந்தனர்.

பவுல் யூதர்கள், புறஜாதியர் (யூதரல்லாதவர்கள்), மற்றும் உலகின் எல்லா பகுதிகளுக்கும் கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துச் சென்றார்.

அவர் சபைகளை உருவாக்க ஒரு எளிய முறையை கடைபிடித்தார்.

முதலில், ஒரு பெரிய பட்டிணத்திற்கு செல்வார். அவர்களுடன் கலந்துரையாடி அவர்களிடம் இயேசு கிறிஸ்துவை குறித்த நற்செய்தியை அறிவிப்பார். அதின் விளைவாக அநேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தனர்.

அதின் பின்னர், அவர்களை ஒன்று திரட்டி ஒரு வீட்டில் சபையை தொடங்கி, விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியானவருக்கு அவர்கள் தங்களை ஒப்புவிக்கும்படி போதித்து அவர்களை சிஷத்துவத்தில் நடத்தி, வேதத்தின் போதனைகளை பின்பற்றும்படி அவர்களை ஊக்குவிப்பார்.

பின்னர், கவனமாக திருச்சபைக்கான தலைவர்களை தெரிந்தெடுத்து அவர்கள் சபையை நடத்தும்படியான பயிற்சியை கொடுப்பார். பயிற்சிக்கு பின் சபையை நடத்தும் பொறுப்பினை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு, வேறு இடத்திற்கு கடந்து செல்வார்.

வேறு இடத்திற்கு சென்ற பின்னர், பவுல் அவர்களுக்காக ஜெபித்தும், நிருபங்கள் எழுதியும், மீண்டும் அவர்களை சந்தித்தும் அவர்களுடான உறவில் நிலைத்திருப்பார். அவ்வாறு செய்வதின் மூலம், அவர்கள் பவுலின் வழிகாட்டுதல் மற்றும் ஊக்குவித்தலின் மூலம் சத்தியத்தில் பெலப்பட்டனர்.

அதின் பின்னர், சபையிலிருந்த விசுவாசிகள் அவ்வாறே செய்தனர் - தலைவர்களை தெரிந்துகொண்டு, அவர்களுக்கு பயிற்சியளித்து, பிற இடங்களில் சபைகளை உருவாக்குவதற்காக அவர்களை பிரதிஷ்டை செய்து அனுப்பினர்.

**மூன்றாம் கருத்து - பவுலின் முதலாம் மற்றும் இரண்டாம் பயணங்கள்: அப்போஸ்தலர் 13-14**

குறிப்பு: வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பவுல் பயணம் செய்த காலத்தைக் குறித்த விவாதம் இன்றும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

பவுல் பிரயாணம் செய்த வரைபடத்தை கவணிக்கவும்: அதில் ஒரு வரி பவுல் சென்றதையும், மற்றொரு வரி அவன் திரும்பி வந்ததையும் அடையாளப்படுத்துகின்றது.

படம் : ஊர்களின் பெயர்களை கேட்கும்போது அவற்றை கவணிக்கவும்.

அந்தியோகியாவிலிருந்து பவுலும், பர்னபாவும் புறப்பட்டனர்.

அந்தியோகியா, சாலமி, சீப்புரு, பாப்போ, பெர்கே, பிசீதியாவின் அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா, தெர்பை, பின்னர் மீண்டும் லீஸ்திரா, இக்கோனியா, பிசிதியாவின் அந்தியோகியா, சாலமி வழியாக அந்தியோகியாவிற்கு திரும்பினர்.

(உங்களது சொந்த உதாரணத்தை இங்கு பயன்படுத்தவும்)
இது நாம் எவ்வாறு பயணம் செய்வோம் என்பதினை சிந்திக்க வைக்கின்றது. அட்லாண்டாவில் உள்ள ஜார்ஜியாவில் எனது குடும்பத்தினர் உள்ளனர். அதே போல் நார்த் காரொலினாவில் உள்ள அஷ்வெயில் என்ற இடத்திலும் உள்ளனர். அவர்களை நாங்கள் சந்திக்க செல்லுகையில், முதலில் அட்லாண்டாவில் சிறிது நேரம் செலவிடுவோம். அதின் பின்னர் அஷ்வெயில் உள்ள குடும்பத்தினரை சந்தித்து சிறிது நேரம் செலவிடுவோம். அவர்களை கண்டு மீண்டும் வீடு திரும்புகையில் எங்களது பிள்ளைகள் அட்லாண்டாவிற்கு மீண்டும் சென்று குடும்பத்தினரை காண வேண்டுமென கூறுவர். நாங்கள் அட்லாண்டாவிற்கு செல்லாமல் வீடு திரும்ப ஒரு வழி இருக்கின்றது ஆனால் அவர்களை நாங்கள் நேசிக்கின்றபடியால் மீண்டும் அட்லாண்டாவிற்கு சென்று அவர்களை சந்தித்த பின்னர் வீடு திரும்புவோம்.

பவுலின் நிருபங்கள் ரோமர் முதல் பிலேமோன் வரை, நீண்ட நிருபத்திலிருந்து சிறிய நிருபம் வரை என வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அவை பவுலில் ஊழியத்தின் நாட்களில் எப்பொழுது எழுதப்பட்டது என நாம் கவணிக்க வேணும்.

படம் : பவுல் தன் முதல் சுவிஷேச பயணத்திற்கு பின்னர் ஒரு நிருபத்தை எழுதினார், அதுவே கலாத்தியர்.

குறிப்பு: அவர் தன் முதல் சுவிஷேசப் பயணத்திற்கு பின் ஒரு நிருபத்தை எழுதினார் என்ற குறிப்பை நினைவில் வைத்துக்கொள்ளவும்.

இரண்டாம் சுவிஷேசப் பயணம் : அப்போஸ்தலர் 15-17
படம்: அவர் சுற்றிவந்த பட்டிணங்களின் பெயர்களை நாம் வாசிக்கும்போது அவற்றை வட்டமிட்டு ஒரு பயண வழிதடத்தை வரையவும்.

பவுலும், சீலாவும் எருசலேமிலிருந்து அந்தியோகியாவிற்கு சென்றனர். தங்களது முதல் சுவிஷேச பயணத்தில் நிறுவிய சபை மக்களை மீண்டும் சந்திக்கும்படி அந்தியோகாவிலிருந்து புறப்பட விரும்பினர். ஆனால் பவுலின் திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டு கிரேக்க நாட்டின் கொரிந்து பகுதிக்கு சென்றனர்.

எருசலேம், அந்தியோகியா, தெர்பை, லீஸ்திரா, இக்கோனியா, பீசிதியாவின் அந்தியோகியா, தொரோவா, பிலிப்பு, தெசலோனிக்கேயா, அத்தேனே, கொரிந்து, எபேசு, மற்றும் எருசலேம்.

# ஆசிரியர் கையேடு
# சுவிஷேசம் பரவிப் பெருகுதல்

படம் : தனது இரண்டாம் பயணத்தின் போது 1 தெசலோனிக்கேயர் மற்றும் 2 தெசலோனிக்கேயர் ஆகிய இரண்டு நிருபங்களை எழுதினார்.

குறிப்பு: தனது இரண்டாம் சுவிஷேச பயணத்திற்கு பின்னர் 2 நிருபங்களை எழுதினார்.

**நான்காம் கருத்து - பவுலின் மூன்றாம் சுவிஷேசப் பயணமும், சிறையிருப்பும்** (பவுலின் சிறைபிடிப்பு சிலரால் அவரது நான்காவது பயணமாக கருதப்படுகின்றது)

மூன்றாம் சுவிஷேசப் பயணம்: அப்போஸ்தலர் 18-21

படம்: அவர் சுற்றிவந்த பட்டிணங்களின் பெயர்களை நாம் வாசிக்கும்போது அவற்றை வட்டமிட்டு ஒரு பயண வழிதடத்தை வரையவும்.

அந்தியோகியா, தெர்பை, லீஸ்தீரா, இக்கோனியா, பிசிதியாவின் அந்தியோகியா, எபேசு, தொரோவா, பிலிப்பு, தெசலோனிக்கேயா, அத்தேனே, கொரிந்து, தெசலோனிகேயா, பிலிப்பு, தொரோவா, மற்றும் எருசலேம்.

படம்: தனது மூன்றாம் சுவிஷேசப் பயணத்தின் போது பவுல் மூன்று நிருபங்களை எழுதினார், அவை 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர் மற்றும் ரோமர்.

குறிப்பு: தனது மூன்றாம் சுவிஷேச பயணத்தில் பவுல் மூன்று நிருபங்களை எழுதினார்.

தனது மூன்றாம் சுவிஷேசப் பயணத்தை முடித்து திரும்பிய பவுலின் மீது வீண் பழி சுமத்தப்பட்டு அவர் சிறைபிடிக்கப்பட்டார்: அப்போஸ்தலர் 22-28.

அவர் சிறைபிடிக்கப்பட்ட போது, அவர் ஒரு ரோம குடிமகனானபடியால் தான் ரோம சக்ரவர்த்தியை சந்தித்து அவரிடம் முறையிட வேண்டுமென விண்ணப்பித்தார்.

படம்: அவர் சுற்றிவந்த பட்டிணங்களின் பெயர்களை நாம் வாசிக்கும்போது அவற்றை வட்டமிட்டு ஒரு பயண வழிதடத்தை வரையவும்.

அவர் எருசலேமில் தொடங்கி சில இடங்களை கடந்து ரோமாபுரி சென்றடைந்தார், அங்கு வீட்டுக் காவலில் 2 வருடங்கள் தங்கிருந்தார்.

படம்: பிலிப்பியர் அது சமயம், 4 கடிதங்களை எழுதினார்: எபேசியர், கொலேசேயர், பிலேமோம், மற்றும் பிலிப்பியர்.

பவுல் ரோமாபுரியில் இரண்டு ஆண்டுகள் தங்கியதுடன் அப்போஸ்தல நடபடிகள் முடிவடைந்தது. அவரது நிருபங்களிலிருந்து அதற்கு பின் என்ன நடந்தது என நாம் அறியலாம். ரோமாபுரியில் வீட்டு காவலிலிருந்து பவுல் விடுவிக்கப்பட்ட பின்னர் அவர் தொடந்து ஊழியம் செய்தார் என வேத வல்லுனர்கள் கருதுகின்றனர்.

படம்: வீட்டு காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட பவுல் 1 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய நிருபங்களை எழுதினார். இறுதியாக பவுல் இரண்டாம் முறை ரோமாபுரியில் சிறையில் அடைக்கப்பட்டார். இம்முறை அவரது சிறையிருப்பு மிகவும் கடுமையானதாக இருந்தது.

படம்: தனது இரண்டாம் சிறையிருப்பின் போது பவுல் 2 தீமோத்தேயு என்ற நிருபத்தை எழுதினார்.

பவுல் தனது கடைசி மூன்று நிருபங்களை தனக்கு நெருக்கமான தனது சீடர்களுக்கு எழுதினார் என்பதினை கவணிக்கவும்.

பவுல் எவ்வாறு மரித்தார் என வேதத்தில் எழுதப்படாவிட்டாலும், கிறிஸ்தவ வரலாற்றின் அடிப்படையில் அவர் நீரோ என்ற அரசனால் ரோமாபுரியில் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

# ஆசிரியர் கையேடு
# சுவிஷேசம் பரவிப் பெருகுதல்

சுவிஷேச தொடர்பு: மத்தேயு 24:9 "அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலை செய்வார்கள், என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்." அப்போஸ்தலர் 1:8 வசனத்தை கவணித்து நாம் இப்பாடத்தை முடிக்கலாம். பேதுரு எருசலேம், யூதேயா, மற்றும் சமாரியா ஆகிய இடங்களுக்கு சுவிஷேசத்தை எடுத்து சென்றார். பவுல் உலகின் பிற பகுதிகளுக்கு நற்செய்தியை சுமந்து சென்றார். அவ்வாறு அவர்கள் முலமாய் சபைகள் நிறுவப்பட்ட பின்னர், அச்சபைகளிலுள்ள விசுவாசிகள் நற்செய்தியை பிற பகுதிகளுக்கு எடுத்து செல்ல கடமைப்பட்டவர்கள்

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து ஒருவருடன் ஒருவர் கலந்துரையாடவும்.

# ஆசிரியர் கையேடு
# நிகழ் காலமும், இனி வருபவையும்

## நிகழ் காலமும், இனி வருபவையும் பாடம்

வரவேற்பு/ஜெபம்:

படம்: நிகழ் காலமும், இனி வருபவையும்

படம்: மைய வாக்கியம்: தான் வாக்களித்தபடி, இயேசு மகிமையுள்ள, ஜெயம் கொள்கின்ற இராஜாவை மீண்டும் வருவார்.

நான்கு மைய கருத்துக்கள்:

1. கர்த்தரின் கிருபை
2. நமது ஊழியம்
3. நிலைத்திருத்தல்
4. இராஜாவின் வருகைக்கு ஆயத்தமாக காத்திருத்தல்

**முதலாம் கருத்து - கர்த்தரின் கிருபை: எபேசியர் 2:4-10**

தகுதியற்ற ஒரு நபருக்கு அருளப்படும் தேவனின் ஈவே கர்த்தரின் கிருபையாகும்.

கர்த்தரின் மகத்தான கிருபையை முதலில் ஏதேன் தோட்டத்தில் காணலாம். ஆதாமும், ஏவாளும் தாங்கள் தேவனுக்கு இணையாக மாற வேண்டுமென ஆசைக் கொண்டு தங்கள் கீழ்படியாமையால் பாவத்தை மனிதகுலத்திற்குள் கொண்டு வந்தனர். பாவத்தின் சம்பளம் மரணம், மனிதன் சரீரபிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் மரிக்க வேண்டும். அவர்களின் பாவம் கர்த்தரிடமிருந்து அவர்களை பிரித்தது.

அவர்களது பாவம் கர்த்தரை காயப்படுத்தியது. அவர் மனிதர்களை நேசித்தார், அவர்கள் தன்னுடன் ஒப்புரவாக்கப்பட வேண்டுமென விரும்பினார். மனிதர் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தது துயரமான ஒரு சம்பவம். இருப்பினும் அவர்களின் பாவ நிர்வாணத்தை மூடும் வண்ணம் ஒரு குற்றமற்ற விலங்கு பலி செலுத்தப்பட்டு அதின் தோலினால் கர்த்தர் அவர்களின் பாவ நிர்வாணத்தை மூடினார். அது தற்காலிமானதே. ஆனால் ஒரு நாள் இரட்சகர் வருவார், அவரது இரத்தம் மனிதர்களின் பாவத்தை நிரந்தரமாக நீக்கும் என்பதின் அடையாளமாக தேவன் அவ்வாறு ஒரு விலங்கின் தோலினால் அவர்களை உடுத்துவித்தார்.

ஆதாம், ஏவாளின் பாவம் அவர்களிலிருந்து தோன்றிய எல்லா மனிதருக்குள்ளும் காணப்பட்டது. எனவே ஆதாமின் பிள்ளைகளான மனிதகுலம் முழுமையும் பாவிகளாய் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இருப்பினும், இரட்சகர் வரும் நாளில் மனிதர்கள் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு தேவனுடன் ஒப்புரவாக்கப்படுவர் என்ற நம்பிக்கையை தேவன் நமக்களித்தார்.

அவ்வாறு தோன்றும் இரட்சகர் ஒரு விஷேசமான நபராக இருக்க வேண்டும். பாவமில்லாதவராய், மனிதர்களின் பாவத்தை தன் மீது ஏற்றுக்கொண்டு தன் நீதியினால் மனிதர்களை இரட்சிக்க்க விருப்பமுள்ளவராய் காணப்பட வேண்டும்.

அவரே நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து என்று இன்று நம்மால் உணர முடியும்.

ஒரு சிறிய கதையை நீங்கள் அறிந்திருக்கலாம். அது என்னவென்றால். ஒரு நீதிபதி இருந்தார். அவருக்கு முன் ஒரு நாள் அவரது சொந்த மகனே குற்றவாலியாக வந்து நின்றான். அவனது மகனுக்கு எதிரான ஆதாரங்களை நீதிபதி விசாரித்த போது அவர் மிகவும் வேதனையுற்றார். அவரது மகன் குற்றவாளி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் நீதியும், அன்பும் நிறைந்த தந்தை.

அவரது மகனின் வழக்கில் அவரால் எப்படி நீதியையும், அன்பையும் நிலைநாட்டக் கூடும்?

# ஆசிரியர் கையேடு
# நிகழ் காலமும், இனி வருபவையும்

நீதியை நிறைவேற்றும் விதம் ஒரு மிகப் பெரிய தொகையை அவரது மகன் அபராதமாக செலுத்த வேண்டுமென தீர்ப்பளித்தார். ஆனால் அவரது மகனின் திராணிக்கு மிஞ்சிய தொகை அது.

தன் மகனால் அத்தொகையை செலுத்த முடியாது என அறிந்த நீதிபதி, தனது அரிக்கையிலிருந்து எழுந்து, தானே அந்த தொகையை தன் மகனின் சார்பில் கட்டினார்.

ஒரு நீதிபதியாக சட்டத்தை மதித்து அதனை வழியுறுத்தினார், அதே சமயம், தன் மகனை அவர் மிகவும் நேசித்தபடியால், அவன் செலுத்த வேண்டிய அபராதத்தை தானே செலுத்தினார். இயேசு கிறிஸ்து நமக்காக செய்த தியாகத்திற்கு இது ஒப்பல்ல, இருப்பினும் கிருபை என்றால் என்னவென்று ஒரு சிறிய தெளிவை நமக்கு இவ்வுதாரனம் கொடுக்கின்றது.

எபேசியர் *2:8*'ல் கூறப்பட்டுள்ளது "கிருபையினாலே (தகதியற்றவர்களுக்கு தேவன் அளிக்கு ஈவு, ஆசீர்வாதம்), விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் - இது உங்களால் உண்டானதல்ல (உங்களது முயற்சியால் அடையக் கூடிய ஒன்றல்ல), இது தேவனுடைய ஈவு - ஒருவனும் பெருமைபாராட்டாதபடிக்கு கிரியைகளினால் அல்ல (நற்செயல்கள், நல்லொழுக்கங்கள்)."

பலரும் நற்செயல்களினால் மற்றும் நல்லொழுக்கங்களினால் கர்த்தரின் பிரசன்னத்தை அடைய முடியும் என நம்புகின்றனர். ஒருவரது தீய செயல்களைக் காட்டிலும் நற்செயல்கள் அதிகமாக இருந்தால் அவ்வாறு சாதிக்கலாம் என்ற நம்பிக்கை.

நற்செயல்கள் கிறிஸ்தவ வாழ்வில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. கர்த்தரின் கிருபையால் ஒருவர் இரட்சிக்கப்படும் போது, அதின் வெளிப்பாடாக நற்செயல்கள் கர்த்தர் மீது நமக்கிருக்கும் அன்பு மற்றும் நன்றியுணர்வின் விளைவாக நம்மிலிருந்து தோன்றும். ஆனால் அதின் இரட்சிப்பின் விளைவே தவிர, ஒருவரின் இரட்சிப்பிற்கு காரணமாகாது.

அது ஒரு நபர் தான் அழகான தோற்றமுடையரானபடியால் ஒரு பல்கலைக்கழகத்தில் தனக்கு இடம் கிடைக்கும் என்று நம்புவது போன்றது. அழகிய தோற்றம் நல்லது தான், ஆனால் ஒரு பல்கலைக்கழக்கத்தில் சேருவதற்கு அது தகுதியல்ல.

இது தெளிவாக போதிக்கப்பட்டிருக்கின்ற ஒரு வேதப்பகுதி பின்வருமாறு:

மத்தேயு *7:21-23:* "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்."

கிரியைகளினால் ஒருவர் இரட்சிக்கப்படாவிட்டால், வேறு எதினால் இரட்சிக்கப்பட முடியும்?

யோவான் *3:16:* "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

ஒருவர் தான் ஒரு பாவி என்பதினையும், அவரது பாவத்தின் விளைவினால் அவர் நித்தியமாக தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுவார் என்பதினையும். அவரது பாவ நிலையிலிருந்து விடுபட அவர் எவ்வளவு தான் முயற்சித்தாலும் விடுபட முடியாது என்பதினையும் உணர்ந்து. தாழ்மையுடன் இயேசு கிறிஸ்துவே ஒருவரே தன்னை இரட்சிப்பவர் என்பதினை விசுவாசிக்க வேண்டும். இயேசு ஒருவரே தன்னை தேவனுடன் இணைப்பவர், அவரது வார்த்தை மட்டுமே சத்தியம், அவர் மூலமாக மட்டுமே நித்திய ஜீவனை அடைய முடியும் என்ற விசுவாசம். கர்த்தர் தம் குமாரன் மூலமாய் அளிக்கும் இரட்சிப்பாகிய ஈவை விசுவாசப்பதினால் மாத்திரமே நித்திய ஜீவனை அடைய முடியும். ரோமர் *10:9* கூறுவது "என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்."

# ஆசிரியர் கையேடு
# நிகழ் காலமும், இனி வருபவையும்

தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது - 1 யோவான் 4:9-10.

சுவிஷேசப் பாலம்: இயேசு கிறிஸ்துவே பழைய ஏற்பாட்டின் பலிகளின் நிறைவேறுதல். இயேசு கிறிஸ்து கூறியது, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்."

இயேசு கிறிஸ்துவின் வழியாக மட்டுமே ஒருவர் தேவனிடம் சேர முடியும் என்பதினால் சிலர் கிறிஸ்தவம் பிரத்தியேகமான (பிறரை விலக்கு வைக்கும்) மார்க்கம் என நம்பலாம். இயேசு கிறிஸ்து ஒருவரே பாவமற்ற மனிதனாக தோன்றி, நமக்காக சிலுவையில் ஜீவன் ஈந்து, நமது பாவத்தை சுமந்து தமது நீதியை நமக்களிக்கும் ஒரே நபர், எனவே அவர் ஒருவரே தேவனிடம் செல்லும் ஒரே வாசல். ஆனால் கிறிஸ்தவம் பிறரை ஒதுக்கிவைக்கும் மார்க்கமல்ல. மாறாக எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் என அனைவருக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் மார்க்கம். எழை, பணக்காரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், எல்லா பாஷைகளை பேசுபவர்கள், எல்லா இனத்தை சேர்ந்தவர்கள், எல்லா தேசத்தை சேர்ந்தவர்கள் என அனைவரையும் வரவேற்க்கும் மார்க்கம்.

நாம் கேட்ட நீதிபதி மற்றும் அவரது மகனின் கதையில், அவரது மகனுக்கு ஒரு தீர்மான செய்ய வேண்டும். தன் தகப்பன தனக்காக அபராதம் செலுத்துவதினால் அதனை ஏற்றுக்கொண்டு சுதந்திரம் பெறலாம் அல்லது தானே தண்டனையை அனுபவிக்கலாம்.

அவ்வாறே நாமும் நம் பிதாவாகிய தேவன் அளிக்கு நித்திய இரட்சிப்பை பரிசாக ஏற்றுக்கொள்ளலாம், அல்லது அதனை நிராகரித்து கர்த்தரிடமிருந்து நரகத்தில் தள்ளப்படுவதை தெரிந்து கொள்ளலாம். நாம் கர்த்தர் தெரிந்துகொள்ளும் விசுவாச தீர்மானத்தை நாம் எடுப்பதும் கர்த்தரின் கிருபையினால் மாத்திரமே.

அவரது கிருபையை நாம் ஏற்றுக்கொண்டால், யோவான் 5:24 கூறுவது, "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

இதுவே கர்த்தரின் உன்னதமான கிருபை. அவரை விசுவாசிக்கும் திறனையும் நமக்களிப்பது அவரது கிருபையே. அக்கிருபையில் நாம் அனுதினம் வளர்ந்து அவருடனான உறவில் பெருகி வல்லமையுடன் செயல்பட அவர் நமக்கு உதவுபவர்.

எபிரேயர் 4:16'ல் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் வாக்குறுதி, "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்."

இயேசு ஒருவரே நம்மை இரட்சிப்பவர், நாம் அவரை விசுவாசிக்க வேண்டும். ஆனால் அவரை விசுவாசியாமல் நாம் மரித்தால் அல்லது அதற்கு முன் அவர் மீண்டும் திரும்பி வந்தால் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை. நாம் அவரை விசுவாசிக்கும்படி அவர் நமக்காக பொறுமையுடன் காத்திருக்கின்றார்.

**இரண்டாம் கருத்து - நமது ஊழியம்: மத்தேயு 28:18-20**

நாம் ஒரு நோக்கத்துடன் கர்த்தரின் கிருபையால் இரட்சிக்கப்பட்டுள்ளோம். கர்த்தரின் பிள்ளைகள் என்ற பாக்கியத்தை பெற்ற நாம் பிறரிடம் கிறிஸ்துவை அறிவிக்கும் பொறுப்பினை உடையவர்களாக உள்ளோம்.

இயேசு கிறிஸ்து உலகம் முழுவதும் உள்ளவர்கள் தன் நற்செய்தியை அறிய வேண்டுமென விரும்புகின்றார்.

அவ்வாறு அதனை செயல்படுத்தும் முழு அதிகாரமும் அவருக்குண்டு.

# ஆசிரியர் கையேடு
# நிகழ் காலமும், இனி வருபவையும்

சுவிஷேசப் பாலம்: தானியேல் *7:13-14*’ல் மனுஷகுமாரனுக்கு அளிப்பட்டுள்ளதாக கூறப்படும் அனைத்து அதிகாரமும் இயேசுவுக்கு உள்ளது.

முழு உலகிற்குக்கும் சுவிஷேசம் அறிவிக்கும் அவரது திட்டத்தை நிறைவேற்ற அவர் 12 சீடர்களை மட்டும் தெரிந்துகொண்டார். 2000 வருடத்திற்கு பின்னர், அவர் நம் மூலமாக அதனை செயல்படுத்துகின்றார்.

மத்தேயு *28:18-20*
“ அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.”

நான்கு கருத்துக்கள்: போங்கள், சீஷர்களை உருவாக்குங்கள், ஞானஸ்நானம் கொடுங்கள், மற்றும் உபதேசம் செய்யுங்கள்.

இதில் சீஷர்களை உருவாக்குங்கள் என்ற வினைச்சொல் கட்டளையாக கொடுக்கப்பட்டுள்ளது. நாம் என்ன செய்ய வேண்டும்? சீஷர்களை உருவாக்க வேண்டும்.

முதலில், சீடன் என்பவன் யார்? சீடன் என்பவன் கற்றுக்கொள்பவன், பின் தொடருபவன். இயேசுவை பின்பற்றி அவரைப் போல் வாழ்வதை அவரிடமிருந்து கற்றுக்கொள்பவனே சீடன். எனவே சீடர்களை உருவாக்குதே இவ்வசனத்தில் நமக்கு இடப்பட்டுள்ள கட்டளை.

மீதமுள்ள மூன்று கூற்றுக்கள் இதனுடன் தொடர்புடையது: நாம் எப்படி சீடர்களை உருவாக்க முடியும்? செல்வதின் மூலமாக. நீங்கள் பள்ளி செல்கையில், வேலைக்கு செல்கையில், விளையாட்டு பயிற்சிக்கு செல்கையில், கடைக்கு செல்கையில், அல்லது அயல் வீட்டிற்கு செல்கையில். எங்கு சென்றாலும் உங்களை சுற்றிலுள்ள நபர்களுடன் கிறிஸ்துவைக் குறித்து கலந்துரையாடும் வாய்ப்புகளை உருவாக்கி அவர்களை கிறிஸ்துவின் சீடர்களாக உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

ஞானஸ்நானம் கொடுங்கள்: பிரதான கட்டளையில் அருளப்பட்டுள்ள சுவிஷேசப் பகுதி இது. இயேசு குறித்து பிறரிடம் நாம் கூற வேண்டும், அவர்களை விசுவாச குடும்பத்தினுள் கொண்டு வர வேண்டும், நமது கர்த்தருடனும், அவரது பிள்ளைகளுடனும் அவர்கள் இணைக்கப்பட வேண்டும்.

இறுதியாக, இயேசு கற்பித்த யாவையும் அவர்களுக்கு போதிக்க வேண்டும். கிறிஸ்துவைக் குறித்த உண்மையை எப்பொழுதும் போதிக்கும் வாய்ப்புகளுக்காக காத்திருக்க வேண்டும். கல்வி கற்கும் இடம் அல்லது உணவு அருந்தும் இடம் அல்லது உங்கள் பிள்ளைகளுடன் தனிமையில் இருக்கும் போது என எல்லா சூழ்நிலையிலும் இயேசுவைக் குறித்து போதித்தல். நீங்கள் கவனிக்க வேண்டிய காரியம்: உங்கள் பிள்ளைகளே கர்த்தருக்குள் நீங்கள் போதித்து நடத்த வேண்டிய முதல் சீடர்கள்! பிறரிடம் இயேசுவின் அன்பு, கிருபை ஆகியவற்றை போதிக்கும் வழிகளைக் குறித்து சிந்தித்து கொண்டே இருங்கள்.

இயேசு தனது பிரதான கட்டளையின் இறுதியில் தன் சீடர்களிடம் கூறியது, “இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கின்றேன்” (மத்தேயு *28:20*). நாம் நற்செய்தியை பிறருக்கு அறிவிக்கும் வல்லமை நம்முடன் இருக்கும் கர்த்தரிடமிருந்து நமக்கு வருகின்றது. அவரது பிரசன்னமும், வல்லமையும் நமக்கு முழுவதுமாக அருளப்பட்டுள்ளது.

நாம் கிறிஸ்துவின் சீடர்களாயிருப்பதால், யோவான் ஸ்நானகன் அவரது முதலாம் வருகைக்கு வழியை ஆயத்தம் செய்தது போல் நாமும் அவரது இரண்டாம் வருகைக்கான வழியை ஆயத்த செய்ய வேண்டும் (மத்தேயு *3:1-3*). நம் கர்த்தர் மீண்டும் திரும்ப வருமளவும் நாம் என்ன செய்யவேண்டுமெனப் பிராதான கட்டளை நமக்கு தெளிவாக கூறியுள்ளது.

இறுதியாக: தலைமுறை, தலைமுறைகளாக, கர்த்தருக்கு உண்மையுள்ளவர்கள் அவரது பிராதான கட்டளைக்கு கீழ்படிந்து இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து வந்துள்ளனர். அதினால் தானே நிங்களும், நானும் இயேசு யார் என்று அறிய முடிந்தது. ஆனால் அது நம்முடன் முடிந்து விடக் கூடாது. நாமும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து பிறருக்கு அறிவிக்க வேண்டும் - முதலில்

# ஆசிரியர் கையேடு
# நிகழ் காலமும், இனி வருபவையும்

நமது “எருசலேம்” - நம் வீட்டில், அயலகத்தாரிடத்தில், மற்றும் நகரில். அதின் பின்னர் சீடர்கள் யூதேயா, சமாரியா, மற்றும் உலகத்தில் எல்லா பகுதிகளிலும் அறிவித்தது போல் நாமும் அறிவிக்க வேண்டும். உலகத்தின் எல்லா பகுதிகளுக்கு நற்செய்தியை அறிவித்தல் சாத்தியமற்றது என நினைத்தால், அதனை செய்யும்படியான வழிமுறைகள் - நாமே சென்று அறிவித்தல், சுவிஷேச வளர்ச்சிக்காக ஜெபித்தல், அதற்காக காணிக்கை கொடுத்தல் போன்ற வழிகளில் அது சாத்தியமாகும். கர்த்தர் அவரது கட்டளையை நிறைவேற்ற வேண்டிய எல்லா வசதிகளையும் நமக்கு அளிப்பார், எனவே முயற்சி செய்வதை நிறுத்தாதிருங்கள்.

**மூன்றாம் கருத்து - நிலைத்திருத்தல்: யாக்கோபு *1***

நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டுள்ளோம், இயேசு நமக்கு ஒரு ஊழியத்தையும், நம் வாழ்க்கைகான ஒரு நோக்கத்தையும் கொடுத்துள்ளார்: இது ஒரு மகத்தான செய்தி! ஆனால் இப்பாவ உலகில் நமக்கு உபத்திரவம் உண்டு என்பதினை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இதனை யோவான் *16:33’*ல் இயேசு தெளிவாக கூறியுள்ளார், “என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.”

வாழ்வு உபத்திரவம் நிறைந்தது, விசுவாசிகளுக்கும் கூட.

யாக்கோபு நாம் அவிசுவாசிகளை போல உபத்திரவத்தை பார்க்க கூடாது என கூறுகின்றார்.

பலரும் உபத்திரவத்தை ஒரு குறுகிய பார்வையில் காண்கின்றனர்.

ஆனால் கர்த்தர் உபத்திரவத்தை ஒரு தொலை தூர பார்வையுடன் அனுமதிக்கின்றார்.

அவரது பார்வையில் உபத்திரவங்கள் வித்தியாசமானது.

நமது தற்காலிக சுகங்களைக் காட்டிலும் நித்தியத்திற்காக நம் சுவாபத்தை மாற்றுவதே அவரின் நோக்கம். எனவே நாம் நற்குணசாலிகளாய் மாறும்படி கர்த்தர் உபத்திரவங்களை பயன்படுத்துகின்றார்.

யாக்கோபு *1:2-6* கூறுவது, “என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.”

நாம் பொறுமை, ஞானம், விசுவாசத்தில் வளரும்படி கர்த்தர் நம் வாழ்வில் உபத்திரவங்களை அனுமதிக்கின்றார்.

நமது பூமிக்குரிய வாழ்வு தற்காலிகமானது என அவர் அறிவார், எனவே நாம் பூமியில் வாழும் நாட்களில் அவருக்காக வாழ்ந்து, அவரை மகிமைப்படுத்தி, ஒவ்வொரு நாளும் நற்குணத்தில் வளர வேண்டுமென விரும்புகின்றார்.

நாம் இன்று செய்யும் காரியம் நித்தியத்தோடு தொடர்புடையது என்பதினை அறிந்து செயல்படுவதே நித்திய கண்ணோட்டத்துடன் வாழ்தல்.

சுவிஷேசப் பாலம்: *1* பேதுரு *2:21*- இயேசுவும் அவ்வாறே வாழ்ந்தார்: அவரது மரணத்தினாலும், உயிர்தெழுதலினாலும் உண்டான நித்திய பலனை பார்க்கும்போது அவர் தன் சரீரத்தில் அனுபவித்த பாடுகள் ஒன்றுமில்லை.

நாமும் பாடுபடுகின்றோம் - நம் கர்த்தர் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாய் நடத்துவார் என்ற நம்பிக்கையுடன் நாம் பாடுபடுகின்றோம். யோசேப்பின் வாழ்வை நினைவிருக்கின்றதா? யோசேப்பின் சகோதரர்கள் அவன் மீது பொறாமை கொண்டு அவனை அடிமையாக விற்றனர். அது ஒரு தீமையான செயலாக இருந்தாலும், இஸ்ரவேல் தேசத்தை காக்கும்படி தேவன் அதனை நன்மையாக மாற்றினார்! யோசேப்பு பின்னர் தன் சகோதர்களிடம் கூறியது, 'நீங்கள் எனக்கு தீமை செய்தீர்கள், ஆனால் கர்த்தரோ அதனை நன்மையாக மாற்றினார்.'

நமக்கு பல பாடுகள் நேரலாம், ஆனால் அவற்றில் சில நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் நமக்கு நேரிடுகின்றது. இவ்வாறு நடக்கும் என இயேசு தன் சீடர்களை யோவான் *15:19'*ல் எச்சரித்தார் "நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது."

இன்றைய உலகில் நடைபேறும் காரியங்களைக் குறித்து சிந்தித்து பாருங்கள். பல விசுவாசிகள் கிறிஸ்துவின் நிமித்தம் பாடுகள் அனுபவிக்கின்றார்கள், கொல்லப்படுகின்றார்கள். *1* பேதுரு *3:14'*ல் பேதுருவின் வார்த்தைகள் இன்றும் நமக்கு ஊக்கமளிக்கின்றது, "நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." பாடுகள் மத்தியில் நாம் நிலைத்திருந்தால் ஜீவக்கீரிடம் நமக்கு அருளப்படும். (உங்கள் சொந்த அனுபவத்தை இங்கு பகிரவும்): எங்களது குடும்பத்தில் இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வதை பெருமையாக எண்ணுகின்றோம், அதற்காக நாங்கள் எவ்வளவு பாடு அனுபவித்தாலும். நாங்கள் செய்யும் ஜெபம் பின்வருமாறு, "கர்த்தாவே ஒவ்வொரு நாளும் உமக்காக வாழ உதவும், தேவைப்பட்டால் உமக்காக மரிக்கவும் கிருபை தாரும்."

**நான்காம் கருத்து - இராஜாவின் வருகைக்கு ஆயத்தமாக காத்திருத்தல்: வெளிப்படுத்தல் *20:1-6, 22:12-17***

வேதம் எப்பொழுதுமே இயேசு கிறிஸ்துவை குறித்து பேசுகின்றது.

ஆதியிலே, ஒரு வித்து வாக்களிக்கப்பட்டது, அவர் ஆபிரகாமின் சந்ததியில் தோன்றி மனிதனை கர்த்தருடன் ஒப்புரவாக்குவார் என கூறப்பட்டது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் இரட்சகர் வருவார் என இயேசுவின் வருகையை முன் அறிவித்தது.

புதிய ஏற்பாடு இயேசுவின் முதலாம் வருகையுடன் தொடங்கியது. நாம் இப்பொழுது அவரது இரண்டாம் வருகைக்காக காத்திருக்கின்றோம். இதனை வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் வாசிக்கின்றோம். அதுவே புதிய ஏற்பாட்டின் கடைசி புஸ்தகமும், அதிலுள்ள ஒரே தீர்க்கதரிசன புஸ்தகமும் ஆகும். அப்போஸ்தலனாகிய யோவான் பத்மு தீவில் நாடு கடத்தப்பட்ட போது இப்புஸ்தகத்தை எழுதினார்.

வெளிப்படுத்தல் புஸ்தகம் இயேசு கிறிஸ்துவைக் குறித்து மேலும் நமக்கு வெளிப்படுத்துகின்றது. அதில் நிறைய உருவகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதால், அவைகளை எவ்வாறு விளக்குவது என பல விவாதங்கள் உண்டு.

நாம் வெளிப்படுத்தலில் உள்ள தீர்க்கதரிசனங்களில் இயேசுவின் இரண்டாம் வருகையை குறித்து கற்று, அவரது இரண்டாம் வருகை முதலாம் வருகையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என சிந்திக்கலாம். அவரது இரண்டு வருகைகளுக்கும் இடையே பெரிய வித்தியாசங்கள் உண்டு. இயேசுவின் முதலாம் வருகை சரித்திரத்தில் நிறைவேறிய சம்பவம், ஆனால் அவரது இரண்டாம் வருகை இனி வரும் நாட்களில் நிறைவேற போகும் தீர்க்கதரிசனம்.

புதிய ஏற்பாட்டினை குறித்த நமது முதல் பாடத்தில் எவ்வாறு இயேசுவானவர் மிகவும் கடினமான சூழலில் ஒரு பாலனாக அவதரித்தார் என சிந்தித்தோம். அவர் உலகத்தின் கவனத்தை தன் பக்கம் அவரது பிறப்பில் திசைதிருப்பவில்லை. ஆனால் இயேசு கிறிஸ்து இரண்டாம் முறை வருகையில், இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் எல்லா கண்களும் தனனை காணும்படி திரும்ப வருவார் (வெளிப்படுத்தல் *1:7*).

அவரது மரணத்திற்கு முன், அவர் ஒரு கழுதையின் மீது எருசலேமுக்கு பவணி சென்றார். அது அவரது தாழ்மையை காண்பிக்கின்றது.ஆனால், இரண்டாம் முறை உலகிற்கு வரும்பொழுதோ அவர் ஒரு வெள்ளை குதிரையில், ஜெயம் கொள்கிறவராக, மனுகுலத்தை நியாயம்தீர்க்கும் நியாதிபதியாய் வருவார்.

# ஆசிரியர் கையேடு
# நிகழ் காலமும், இனி வருபவையும்

அவர் முதல் முறை உலகிற்கு வந்தபோது, மனிதர்கள் உலகை ஆண்டனர். ஆனால் அவர் மீண்டும் வருகையில், அகில உலகமும் அவரால் ஆளப்படும். அவர் ஆட்சி செய்வார்!
சுவிஷேசப் பாலம்: ஏசாயா 9:6-7...கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.

தனது முதலாம் வருகையில், மனிதர்களை கர்த்தருடன் ஒப்புரவாக்கும்படி, மனிதர்களுக்கு சமாதானத்தை அருளும்படி, தாழ்மையுள்ள தேவ ஆட்டுகுட்டியாக அவதரித்தார். ஆனால் மீண்டும் வருகையில் யூதாவின் சிங்கமாக திரும்ப வருவார்.

மனிதர்களால் புறக்கணிக்கப்பட்ட அவர் வல்லமையோடும், மகிமையோடும் மீண்டும் திரும்புவார். வெளிப்படுத்தல் புஸ்தகம் அவரை ஒரு வெற்றியுள்ள இராஜாவாக பூமியின் மனிதர்களின் அநீதிகளை நியாயம்தீர்த்து, நித்திய சமாதானத்தை கொண்டு வருபவராக வெளிப்படுத்துகின்றது.

சுவிஷேசப் பாலம்: ஏசாயா 33:17,22; ஏரேமியா 23:5; தானியேல் 7:14; பிலிப்பியர் 2:9-11 - உன் கண்கள் இராஜாவை மகிமை பொருந்தினவராய் காணும்.

ஏரேமியா 23:5 - அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும் (தானியேல் 7:14).

இயேசு கிறிஸ்து யார் என உலகம் காணும் நாள் சீக்கிரம் வருகின்றது. அது சமயம், பிதாவானவர் மகிமைப்படும்படி எல்லா முழங்காலும் முடங்கும், நாவும் இயேசுவே கர்த்தர் என்று அறிக்கையிடும் (பிலிப்பியர் 2:9-11). அவிசுவாசிகளுக்கு அது பயங்கரமான நாளாகவும், கர்த்தரின் பிள்ளைகளுக்கு மகிமை நிறைந்த நாளாகவும் இருக்கும்.

வெளிப்படுத்தல் 19:11-16 வசனங்களை வாசிக்கவும். அதில், யோவான் கூறுவது - "பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தன, பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றார்கள். புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது." இதுவே தேவராஜ்ஜியம் உருவாகும் காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனம் - இதுவே நம் நம்பிக்கை. அங்கு பழையவைகள் எல்லாம் புதிதாகும், மரணமில்லை, கண்ணீரில்லை, வேதனையில்லை. தேவன் மனிதர்கள் மத்தியில் உலாவி, அவர்களுடன் வாசம் செய்வார். அவர்கள் அவர் ஜனமாயிருப்பார்கள், அவர் அவர்கள் தேவனாயிருப்பார்.

யோவான் எதனைக் குறித்து எழுதுகின்றார் என புரிகின்றதா?

ஆதியில் தேவன் சகலத்தையும் சிருஷ்டித்தார், அனைத்தும் பரிபூரணமாக இருந்தது. ஆனால் ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தபோது அது பரிபூரணத்தை இழந்தது. கர்த்தர் சகலத்தையும் மீட்கும் பணியை தொடங்கினார்.

நாம் இப்பொழுது கர்த்தரின் மீட்பை காண்கிறோம் - கர்த்தர் ஏதேனில் தொடங்கிய மீட்பின் பணி இங்கு நிறைவு பெற்றது.

இறுதியாக, புதிய எருசலேம், வானங்கள், ஏதேன் மீட்கப்பட்டது.

படம்: வாசிக்கவும் - வெளிப்படுத்தல் 22:1-7;12,14,16-17,20-21.

ஜீவ விருட்சத்தின் கனியை மனிதர்கள் புசிக்கும் அனுமதி அளிக்கப்பட்டது. பாவத்தினால் ஏதேனிலிருந்து வெளியேற்றப்பட்ட மனிதன் ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்க முடியவில்லை. ஆனால் கிறிஸ்துவின் நீதியினால் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்கள் அதனை புசித்து, நித்திய ஜீவனை அனுபவிக்கும்படி தற்போது அதனை புசிக்கும் அனுமதி கிடைத்தது. ஜீவ விருசட்த்தை நாம் உண்போம்!

இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் அவரது பிறப்பு, வாழ்வை குறித்த பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் 100% நிறைவேறியதை நாம் காண்கிறோம். அவ்வாறே அவரது இரண்டாம் வருகையை குறித்த தீர்க்கதரிசனமும் நிறைவேறும், அவரது இராஜ்ஜியத்திற்கு முடிவிராது .

அந்த நாள், எத்தனை இன்பமானது. விசுவாசிகளாகிய நமக்கு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே நம் நம்பிக்கை, என்றென்றும் நன்மை நிறைந்த நம் பிதாவுடன் அவரது வீட்டில் வாழ்வோம்.

வாரும், இயேசுவே சீக்கிரம் வாரும்! ஆமென், ஆமென் (வெளிப்படுத்தல் 22:20)

இது நம் வேதாகம ஆய்வை நிறைவு செய்கின்றது.

## மீண்டும் கூறவும்

உங்கள் மாணவர்களை 2 அல்லது 3 நபர்களாக பிரித்து தாங்கள் கற்றுக்கொண்டவற்றை சிறு குழுவில் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவும். குழுவில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின்படி 8 நிமிடங்கள் வரை இதற்கென நேரம் ஒதுக்கவும். அதின் பின் அவர்கள் கற்றவற்றை குறித்து ஒருவருடன் ஒருவர் கலந்துரையாடவும்.

கர்த்தர் இப்பாடங்களை இயேசு கிறிஸ்துவுடனான உங்கள் உறவில் வளரவும், இதனை பிறருக்கு பகிரவும் பயன்படுத்துவாராக.

விட்டுப்பாடம்: இதனை பிறருடன் பகிருங்கள்! உங்கள் வீட்டில் தொடங்கி, எல்லார் மத்தியிலும்.